
தாரு தத்

பத்மினி ஸென் குப்தா



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

இருபத்தியொரு வயதிலேயே மறைந்தவள், ஆனாலும் தாரு தத், உலக இலக்கிய அரங்கில் தமது நாடும் ஒரு சிறப்பிடம் பெறக் காரணமானவர். பன்மொழியில் பாலமேதையான இவர், ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் சரளமான படைப்பிலக்கியம் வழங்கினார். இரண்டுமே அவர் தாய்மொழி அல்ல. அவரது ஆதாரமோ இந்திய மரபிலும் பண்பிலும், சம்ஸ்கிருத இலக்கியத்திலும் ஆழ ஊன்றி இருந்தது.

பத்மினி ஸென் குப்தா, தமது பல்வேறு வெளியீடுகளில், பல வாழ்க்கை வரலாறுகளைப் படைத்தவர். 'சரோஜினி நாயுடு', 'தேசப்பிரிய ஜே. எம். சென்குப்தா', 'பண்டித ரமாபாய்' போன்றவை அவரது குறிப்பிடத்தக்க நூல்கள்.

'கங்கைப் பசும் வெளியின் கன்னி'யும், 'கீதமினிய மென் மடந்தை'யுமான ஒருவரின் வாழ்வை நினைவூட்டும் நூல் இது; 'ஆங்கிலப் பெரும் புலவர் வரிசையில், நிற்பதற்குத் தமது சொந்த பாரம் பரியத் தகுதியாலே முன்னேறிய' ஒருவரின் வரலாறு இது.

அட்டை அமைப்பு — **சத்யஜித் ரே**

விலை : ரூ. 2-50

TORU DUTT — Tamil translation by A. Srinvasa Raghavan of Padmini Sen Gupta's monograph in English of the same name. Sahitya Akademi, New Delhi 1974. Price Rs. 2·50

First Edition : 1974

SAHITYA AKADEMI
Rabindra Bhavan, 35, Feroze Shah Road, NEW DELHI-1

Regional Offices :
MADRAS-6, CALCUTTA-29 & BOMBAY-14.

Published by SAHITYA AKADEMI and
Printed at Rajsri Printers, 97, Lloyds Road, Madras-86.

பொருளடக்கம்

உணர அவர் தயங்கவில்லை. தாம் முன்னமேயே பெற்றிருந்த நிரம்பிய ஆங்கில, பிரஞ்சு ஞானத்தோடு, பெறுதற்கரிய இந்திய இலக்கிய உணர்வையும் ஒன்றுக இசைக்க வேண்டும் என்று உணரவும் அவர் பின்வாங்கவில்லை. தம்முடைய தந்தையின் உதவியோடு, ஸம்ஸ்கிருதம் பயிலத் தொடங்கினுர்.

நேரம் கிடைத்திருந்தால், மேலும் மேலும் இந்தியத் தன்மை வாய்ந்த படைப்பு எழுத்தாளராய், தாரு தத் விளங்கி இருந்திருக்க லாம். ஆனுல், காலம் அதற்கு இடம் தரவில்லை. மிக விரை விலேயே, எங்கிருந்தோ வெளியிலிருந்து இங்கு வந்து பூத்தது போல் முளைத்த இந்தக் கவிதை மென்மலர், கால தேவனுல் பறித்துச் செல்லப் பெற்றது. தம்முடைய நாடு, வர வர அவரை வசீகரித்து வந்தது என்பதற்கான உறுதியான சான்றுகள் அவருடைய குறைந்த கால வாழ்விலுங்கூடத் தென்பட்டன. இன்னும் சிறிது காலம் அவர் வாழ்ந்திருந்தால், ஏதோ அன்னிய மண்ணில் முளைத் தனவாக வன்று, யூதன் என்றும், யூதன் அல்லாதவன் என்றும் ஆங்கிலேயன் என்றும் வங்காளி என்றும் பாராத பரமனுக்கே உண்மையில் உரியனவாக, கிறிஸ்தவக் கருத்துக்களையும், உணர்ச்சி களையும் அவர் காட்டியிருக்கக்கூடும்.

தாருவைப் பற்றிய நினைவுகளில் மிகுந்து துயர் தருவது ' எப்படி எப்படியோ இருந்திருக்கலாமே ' என்ற நினைவே. தம்முடைய சகோதரி அரு இளமையிலே மறைந்தபோது, இந்தக் கருத்தைத் தாருவே, புகழ் பெற்ற சொற்களில் பாடி இருக்கிருர்:

பேனுவில், நாவில் பிறக்கும் சொற்களில்
துயரம் மிக்கவை
'' எப்படி யெல்லாமோ இருந்திருக்கலாம் ''
என்னும் சொற்களே.

தமது இருபத்தி இரண்டாவது வயதில் தாரு மறைந்தார். அவர் எழுதியதெல்லாம் ஆங்கிலத்திலும் பிரஞ்சிலுந்தான். என்றுலும், ' இந்திய இலக்கியம் ' என்னும் பத்திரிகையில், 1966 ஏப்ரல்-ஜூன் இதழில், அலக்ரஞ்சன் தாஸ் குப்தா என்பவர் கீழ்க் கண்டவாறு எழுதுகிருரே அது பொருந்தாது :

' தாருவின் சோகக் கதை, அவருடைய இரு அன்னிய மொழித் தேர்ச்சியினுல், கைவிடப்பெற்ற தேசாந்திரி ஒருவனுடைய நிலையைத் தொடுகிறது. யாவராலும் மறந்து விடப்படும் நிலையிலிருந்து அவரை மீட்க வேண்டுமானுல், அவ்வாறு மீட்கப் பெறுவதற்கு அவரிடம் தகுதி இருந்தால்—இருக்கிறது என்பதில் ஐயமில்லை— அவ்வாறு அவரை மீட்கச் செல்பவன், மிகுந்த எச்சரிக்கையோடும் கவனத்தோடுந்தான் அப்பணியை மேற்கொள்ள வேண்டி இருக்கும். ஏனு? தாருவே அவனுக்குத் தடையாக நிற்கிருர் ;

இரண்டு விதத்தில், தம்முடைய நாட்டை விட்டுப் பிரிந்து, அன்னிய மண்ணைத் தாமாகவே அவர் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்.'

உண்மையில், என்றுமே தாரு புறக்கணிக்கப் பெற்றவராக இல்லை. இந்திய நாட்டுப் பத்திரிகைகளில், இந்த நாட்டில் ஆங்கிலத்தில் எழுதிய எழுத்தாளர்களைப் பற்றிய குறிப்புக்கள் வெளிவரும் போதெல்லாம், தாருவின் பெயர் பேசப் பெறுவது போல், வேறெந்த எழுத்தாளர் பெயரும் அவ்வளவு தவறாமல் குறிப்பிடப் பெறுவதில்லை. இந்தியாவின் 'யார் எவர்' என்ற அகராதி நூலில், தாருவின் பெயர், புகழ்பெற்ற பெரியவர்கள் இடையிலே தான் இடம் பெறுகிறது. வங்காளி, ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளில் அவரைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளுக்கும் குறைவில்லை. இந்த வகையில், காலம் தனது போக்கில் அமைக்கும் சோதனையிலும் அவர் தேறிவிட்டார். அவர் பிறந்த நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன என்றாலும், இன்னும் அவர் உயிரோடு உலவுகிறார், சாகாவரம் பெற்ற எழுத்தாளராகக் காலத் தேர்விலே வெற்றி கொண்டு விட்டார்.

அவர் எழுதியது அளவிலே மிகக் குறைவுதான். இதைக் கொண்டே இவர் இவ்வளவு புகழ் படைத்ததை எண்ணும்போது, இன்னும் சிறிது காலம் இவருக்குக் கிடைத்திருந்தால், இவர் என்ன என்ன பெருமையெல்லாம் சாதித்திருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஒருவேளை, அப்படியில்லாமல், அவருடைய புலமையும், ஆற்றலும் கால கதியில் தேய்ந்து போயிருக்குமோ ? மிக விரைவிலே, காலத்திற்கு முந்தி அணைந்துபோன அதிசய மேதையா அவர் ; அல்லது, இருபத்தி இரண்டு வயதுக்குள், இளமையின் பொலிவு கண்ட அவருடைய எழுத்து, அவர் இன்னும் சிறிது காலம் வாழ்ந்திருந்தால், பொலிவிழந்து போயிருக்குமா, யாரால் சொல்ல முடியும் ? உள்ளதை வைத்துப் பார்க்கும் போது, பெரும் எழுத்தாளர் வரிசையிலே அவரைச் சேர்ப்பதற்குப் போதுமான அளவு, அவர் எழுதவில்லை. ஆனால் தாருவை மதிப்பிடும்போது, அவருடைய எழுத்தை மட்டுமன்று, அவருடைய வாழ்வின் குறுகிய எல்லையை, அதன் அவலங்களை, அது தந்த பாடல்களை, அது வளர்த்த புலமையை, ஒரே வார்த்தையில் அவருடைய வாழ்க்கை முழுவதையும், முழுக்கவிதை ஒன்றின் பகுதியாகக் கொண்டு பார்க்க வேண்டி உள்ளது. அவருடைய கடிதங்கள், நட்புகள் இவையும் அந்த மதிப்பீட்டில் இடம் பெறுதல் முக்கியம் ; அவருடைய வாழ்க்கையையும், அவர் இயற்றிய நூல்களையும் தனித் தனியே பிரித்துப் பார்க்க இயலாது, பார்க்கவுங் கூடாது. அவருடைய வாழ்க்கையோடு இசைத்துப் பார்க்காவிட்டால், அவருடைய கவிதைகள் மட்டும் காலத்தின் சோதனையைச் சமாளிக்காமற் போகலாம், ஆனால் அவருடைய வாழ்க்கை, அவர் இயற்றிய நூல்கள்

இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது, அசாதாரணமான இளம் பெண் ஒருத்தி கண்முன்னே தோன்றுகிருள். 'தாருவின் கவிதை, அவருடைய வாழ்வில் தோயும் கழிவிரக்கத்தில் உள்ளது' என்று ஆங்கிலக் கவிஞர் வில்ஃப்ரெட் ஒவன் கூறியது உண்மை தானே என்றுகூட மயங்குகிறோம்.

அவருடைய துயர வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாலேயே, தாருவின் கவிதை பாராட்டப் பெறு கிறது என்று சில திறனய்வாளர்கள் கருதுகிறார்கள். 'அழகும், அவலமும், விதியின் விளையாட்டும் தாருவின் வாழ்க்கையில் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னிக் கிடக்கின்றன. ஆகவே அவரு டைய கவிதையைப் பற்றிப் பேசும் போது, கவிதைக்கும், "கவிஞ னுடைய விக்கிரக ஆராதனை" என்று ஸி. எஸ். லீவிஸ் குறிப்பிடு கிறாரே அதற்கும், வேறுபாடு கண்டு நடப்பது கடினமாக உள்ளது. எமிலி பிரான்ட்டே என்ற ஆங்கில நாவலாசிரியையின் கவிதை களேயோ, அவருடைய "வுதரிங் ஹைட்ஸ்" (வுதரிங் மேடுகள்) என்ற நாவலேயோ படிக்கும்போது, அவருடைய வாழ்க்கை வேறு விதமாக அமைந்திருந்தால், அவருடைய படைப்பும் எப்படி எப்படியெல்லாம் மாறி உயர்ந்திருக்குமோ என்று எண்ணத் தலைப் படுகிறோம். இந்த ஊகங்கள், எமிலி பிரான்ட்டேயைப் புரிந்து கொள்ள உதவுகின்றன; அதே நேரத்தில், நமது நெஞ்சைப் பாரமாய் இறுத்துகின்றன. தாருவைப் படிக்கும்போதும் இதே கதைதான். தாருவின் கையிலே ஏதோ ஒரு பாடல் தற்செயலாகக் கிடைக்கிறது. அவரே அதுபோன்று ஒரு பாடல் எழுதியிருக்கக் கூடும். ஆனல் அவர் அதை மொழிபெயர்க்கிறார். சிறிது நடுங் கும் ஆனல் தெளிவான குரலில். பேரங்கர் என்ற பிரஞ்சு கவிஞன் எழுதிய "என் தொழில்" என்பது இதற்கு எடுத்துக்காட்டு:

இந்த மண்ணில் நானோர் அனதை.
நோயால் நலிந்து, குலுங்கி, குறுகி, விகாரமாய்
பிறப்பிலிருந்து பழியே சுமந்து
யாரும் ஒதுக்கித் தள்ளிய ஒன்ருய்
இருக்கும் என்றன் உதட்டிலிருந்து
கத்தல் ஒன்று பிறந்தது. தீரா
வேதனை வீறிடும் கத்தல். அதற்குக்
கடவுள் தந்தார் இந்த மறுமொழி:
'பாடடா, பாடு. பஞ்சையே, பாடு.'

வேதனையும், இன்னதென இனம் புரியாத விதியின் இருண்ட வடிவும், தாருவோடு இடையருது நடந்த நிழல்கள்.'—இவ்வாறு பேசுகிறார் ஒரு திறனய்வாளர்[1]. ஆனல் அவரே சொல்கிறார்:

---

[1] 'ஆங்கிலத்தில் இந்திய எழுத்து' — டாக்டர் கே. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

'தாருவின் கவிதைதான் உண்மை. ஐயமில்லை. ஆனால் கவிஞரும் நம் கவனத்தை வலுக்கட்டாயமாகக் கவர்கிறார்.'

தாரு ஒரு மொழிமேதையாகவே பிறந்த அதிசயப் பிறவி, மூன்று மொழிகளை வைத்துக் கொண்டு, ஒன்றிலிருந்து இன்னொன்றில் மொழி பெயர்ப்பு வித்தைகளைச் செய்த மந்திரவாதி. பிரெஞ்சு மொழியையும் ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ந்த பிறகு, ஸம்ஸ்கிருதம் பயிலுவதில் ஆழ்ந்து, பத்தே மாதங்களில் அம் மொழியைப் படிக்கவும், அதிலிருந்து மொழி பெயர்க்கவும் ஆற்றல் பெற்றார். தமது ஆங்கில நண்பர் மேரி மார்ட்டின் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் இந்தியாவின் பண்டைய இலக்கியத்தை ஊடுருவிப் பார்க்க வேண்டும் என்று தமக்கு இருந்த உறுதியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். 'இராமாயணம், மகா பாரதம் என்ற இரு பெரும் ஒளி பொருந்திய காவியங்களையும் மூலத்திலேயே படிக்க ஆசைப்படுகிறேன். கேம்ப்ரிட்ஜ் நகருக்கு மறுமுறை நான் வருமுன், ஒரு ஸம்ஸ்க்ருத பண்டிதராகவே ஆகி இருப்பேன்! ஆமாம், அங்கே வரவே மிகவும் விரும்புகிறேன்.' வெளி நாடுகளில் கிட்டும் சுதந்திர வாழ்வுக்கு, தாரு அடிக்கடி ஆசைப்படுவதுண்டு. அதைச் சொல்வதும் உண்டு. ஆயினும், இந்தியச் சூழ்நிலைக்கு உடனுக்குடனே திரும்பியும் வந்து விடுவார். 'வங்க மொழி தெரிந்த ஒருவனுக்கு, படிக்கவும், புரிந்து கொள்ளவும் ஸம்ஸ்க்ருதம் அவ்வளவு கடினமாக இல்லை.' தாருவுக்கு வங்க மொழியிற் சரளமாகத் தங்கு தடையில்லாமல் பேச வரும் என்பது இதிலிருந்து தெரிகிறது. வங்காளி எழுத்துக்களை எழுதுவதற்கு மட்டும் கடைசி வரையில் அவரால் இயலவில்லை. வங்காளியில் அவர் எழுதிய ஒரே ஒரு கடிதம் இப்போது காணக் கிடைக்கிறது, அக்கடிதத்தில் உள்ள எழுத்துக்கள் குழந்தை ஒன்றின் எழுத்தைப் போல் தாறுமாறாகவும், தவறாகவுங்கூட உள்ளன. தம்முடைய பெயரை எழுதும்போதுகூடப் பிழையாக எழுதி இருக்கிறார்.

1895 டிசம்பர் மாதத்தில்தான், தாரு ஸம்ஸ்க்ருதம் படிக்கத் தொடங்கினார் என்றாலும், 1876 செப்டம்பருக்குள், மேரி என்னும் நண்பருக்கு அவர் எழுதுகிறார்: 'கூடிய விரைவில் என்னுடைய 'கதிர்க் கட்டு'[1] ஒன்றை வெளியிடலாம் என்று நம்புகிறேன். ஆனால் இந்தத் தடவை பிரஞ்சு வயல்களிலிருந்து திரட்டிய கதிர்களாக இராது. ஸம்ஸ்கிருத வயல்களிலிருந்தே இருக்கும். இது வரையில் ஓரிரு கதிர்களையே சேர்த்திருக்கிறேன்.' இந்தச் செய்தி நமக்குப் பெருவியப்பைத் தருகிறது. 1878-ம் ஆண்டு, தாரு மறைந்த பிறகு, 'இந்துஸ்தானத்தின் பழங் கதைகளும் நாட்டுப் பாடல்களும்' என்ற நூல் அச்சாகி வெளிவந்தது. தாருவின்

[1] கவிதைத் தொகுப்பு குறிப்பிடப் பெறுகிறது.

போக்கில் ஏற்பட்ட மாறுதலின் ரஸவாதம் இந்நூலிற் புலனாகிறது. ஆங்கிலம், பிரஞ்சு, இவற்றிலிருந்த ஈடுபாட்டிலிருந்து, மெல்ல இந்தியாவில் ஆழ்கின்ற பாங்கு இங்கே வடிவாகிறது. 'நாட்டுப் பாடல்கள், தாருவின் எழுத்துக்களில் முதிர்ந்தவை. அவை அனைத்தும் இந்திய வாழ்வைப் பற்றியவை. இவற்றில்தான், விஞ்சும் திறமையை அவர் காட்டுகிறார். 'இதற்கு முன் ஐரோப்பிய எழுத்தாளர்களோடு, அவர்களுடைய களத்திலேயே, தீரத்தோடு-ஆனால் வீணாகப்-போட்டி போட முயன்றாரே, அது இப்பாடல்களில் இல்லை. கவிதா சன்னதம் பெற இப்போது தம்முடைய நாட்டுக்கும், மக்களுக்கும், திரும்புகிறார். கீழ்த் திசை இலக்கியம் பயின்ற எந்த மேனாட்டுப் புலவனாலும் காண இயலாத ஆசிய மனத்தின் அந்தரங்கக் காட்சி, இந்த நூலில் உள்ள 'பிரஹலாத்' 'ஸாவித்ரி' முதலியவற்றிலும், சமயத்தைப் பற்றிய விசித்திரமான கற்பனையாக நிற்கும் 'யோகாத்ய உமா' என்ற பாடலும் வடிவாகின்றது. தம்முடைய தாயின் இனத்தார் பாடும் பாடல்களை,—அவற்றை நோக்கி தாரு மகிழ்ச்சியோடு எப்போதும் திரும்புவார்—தமக்குத் தாமே மேலே குறிப்பிட்டுள்ள கவிதைகளில் தாரு பாடிக் கொண்டிருக்கிறாரோ என்று தோன்றுகிறது.'[1]

தாரு ஒரு பிறவி மேதை; பிரான்ஸிடம், இங்கிலாந்திடம் மிகுந்த பற்றுடையவர்; அவ்விரு நாடுகளின் மொழிகளிலும் தேர்ந்த சுவை ஞானி; ஆயினும், உள்ளத்தில், கையாண்ட அணி களில், சிந்தை முறையில், தனித்தத்துவத்தில் அவர் ஓர் இந்தியர். இந்தியாவுக்கு அடுத்தபடி பிரான்ஸ் நாட்டை அவர் நேசித்தார். இங்கிலாந்தில் பெண்களுக்கு அதிக சுதந்திரம் இருந்த காரணத் தால், அந்த நாட்டில் வசிக்க விரும்பினார். 19-வது நூற்றாண்டின் மத்தியில், வங்காளத்தில் பெரும்பாலான மாதர் 'பர்தா' அணிந்து தம்முடைய முகத்தை மறைத்தே வெளியிற் செல்வது வழக்கம். இத்தகைய கட்டுப்பாடுகள், தாம் வெளிநாடுகளில் கண்டு மகிழ்ந்த சுதந்திரத்தை மிகவும் ஒடுக்கின என்றுதான் தாரு அடிக்கடி எண்ணினார். ஆகவே அனைத்துலக சூழ்நிலைக்கே அவர் பொருந்தியவராக இருந்தார். ஹிந்து பகைப் புலத்தோடு கிறிஸ்துவ சமயத்தை அவர் இசைத்தார். 'விஷ்ணுவை, சிவனை வணங்கும் நம்பிக்கை, மற்றைய விளையாட்டு பொம்மைகளோடு வீசி எறியப் பெற்றது. அதனினும் தூய்மையான மதம் ஒன்றுக்கு வழிவிட்டது' என்ற கருத்தை—இது காஸ் (Gosse) என்பவருடையது—தாரு ஏற்க வில்லை என்றே நினைக்கிறேன். தனக்கு அதிக நிறைவைத் தந்ததாகக்

---

[1] *'Ancient Ballads and Legends of Hindustan'* by Toru Dutt. Kegan Paul, Trench, Trubner & Co., Ltd., London, 1927, pp. xxiii and xiv.

கிறிஸ்தவ மதத்தை அவர் எண்ணினர் என்பது உண்மையே. வேதனையை எதிர்த்து நிற்பதற்கும், இளமையிலே அவரைச் சார்ந்த மரணத்தை ஏற்பதற்கும், கிறிஸ்துவின் பேரில் அவருக்கு இருந்த தெளிந்த அமைதியான நம்பிக்கை உதவியது என்பதிலும் ஐயமில்லை. ஆனல் விஷ்ணுவையும், சிவனையும் குழந்தைப் பிள்ளைகள் விளையாட்டாக அவர் கருதவில்லை. ஹிந்து கடவுளர், வீரர்கள், வீராங்கனைகள் இவர்கள் பேரில், தாருவுக்கு ஆழ்ந்த மதிப்பும், மரியாதையும் இருந்தன. இதனுல்தான், மிகுந்த ஆர்வத்தோடு, அவற்றைப் பருக நினைத்து, தாகத்தோடு, ஹிந்து புராணங்களை நோக்கி அவர் திரும்பினர். இதை காஸ் என்பவரே உணர்ந்து, தாருவைப் பற்றிய தமது மதிப்புரையின் பிற்பகுதியில், 'தாருவின், பாடல்களில், வேதத்தில் காணப்பெறும் கம்பீரமும் எளிமையும் குரல் கொடுக்கின்றன. அவற்றில் எவ்விதமான அற்ப நோக்கோ, சிறு பிள்ளைத்தனமோ இல்லை' என்று கூறுகிருர். வேத காலத்திற்கும் பிந்தி வணங்கப் பெற்ற ஹிந்து கடவுளரும் தாருவின் மனத்தை ஈர்த்தனர்.

தம்முடைய நாட்டுக் கலாசாரத்தை, இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் கலாசாரத்தோடு அவர் இசைத்துப் பார்த்தார். 'தமக்கு இயல்பாக அமைந்த இந்திய மேதா விலாசத்தால், ஆங்கிலக் கவிஞர்களின் திருக்கூட்டத்தில் ஒருவராக இருக்கும் உரிமையை அவர் தேடிக் கொண்டார்.'[1] பிஞ்சிற் பழுத்த அவருடைய கலைத் திறமை அதிசயிக்கத் தக்கதாய் இருந்தது. உலகம் இறைவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தது என்ற பாடத்தை அவர் உலகுக்குக் கற்றுக் கொடுத்தார்.

பிரஞ்சு எழுத்தாளரும், திறனய்வாளருமான ஜேம்ஸ் டார்மஸ்டெடர் (James Darmesteter) கூறுகிருர் :

'இந்த வங்க நாட்டு மகள், பாராட்டுக்குரிய, அசாதாரணமான திறமைகள் படைத்தவர்; இனத்தாலும், மரபாலும் ஒரு ஹிந்து; கல்விப் பயிற்சியினுலே ஓர் ஆங்கிலப் பெண்; உள்ளத்தால் ஒரு பிரஞ்சு மாது; பதினெட்டு வயதிலே, பிரஞ்சுக் கவிதைகளை ஆங்கிலச் செய்யுளில் இந்தியாவுக்கு அறிமுகம் செய்து வைத்தவர்; மூன்று ஆன்மாக்கள், மூன்று மரபுகள் அவரிடம் ஒன்ருய் இசைந்தன. இருபதாவது (?) வயதிலே, அவருடைய திறமை முழுதும் மலர்ந்து மணம் வீசிய நிலையிலே, அவருடைய மேதை கண்விழிக்கும் தருணத்திலே, மறைந்த இவர், இலக்கிய வரலாறு காணுத, ஈடு இணையற்ற அற்புதம்.'

---

[1] '*Life and Letters of Toru Dutt.*' Foreword by the Rt. Hon., H.A.L. Fisher, p. vii.

2. வங்காளப் பின்னணி

வங்காளத்தை பிரிட்டிஷார் கைப்பற்றியபோது, எதிர்பார்த்த அளவுக்கு மக்களிடையே எதிர்ப்புக் குரல் எழவில்லை. அதன் முக்கிய விளைவு, மக்களுடைய எண்ணங்களிலும், குறிக்கோள் களிலும் புரட்சி ஒன்றைத் தோற்றுவித்ததுதான். வங்காளத் தையும், பிரட்டனையும் அது ஒன்றாக இணைத்தது. உறங்கும் இந்தியாவை எழுப்புவதற்கு, அன்னிய வண்ணம் கொண்டதாய் இருந்தாலும் குற்றமில்லை, மறுமலர்ச்சி ஒன்று தேவை என வங்காளிகள் பலர் எண்ணினார்கள். அமெரிக்க சுதந்திரப் போர், தாருவின் சிந்தையை, எழுத்தை, அழுத்தமாக ஆண்டு தெருட்டிய பிரஞ்சு புரட்சி, பாரதத்திற்குச் சரேலெனக் கிட்டிய ஆங்கில இலக்கிய பிரஞ்சு இலக்கியச் செல்வப் பெருவளம், பாஸிடிவிஸம், யுடிலிடேரியனிஸம், தார்வினிஸம் போன்ற தத்துவங்கள், விக்டோரியா அரசி காலத்து ஆங்கில சமுதாய வாழ்வில் அமைந் திருந்த தனியானதொரு அறிவு விலாசத்தின் தூய்மை வனப்பு— இவை அனைத்தும் பாரதத்தை, சிறப்பாக வங்காளத்தை, கவர்ந்தன. 'நவீன பாரதத்தின் தந்தை' என்று போற்றப்படும் ராஜா ராம்மோகன் ராய் என்பவர்தாம், ஐரோப்பாவோடு தமக் கிருந்த தொடர்பாலும், இந்தியாவிடம் கொண்டிருந்த அன் பாலும், ஆற்றலோடு செயற்பட்டு, இந்த நாட்டில் புதியதொரு வாழ்வை ஊட்டத் தொடங்கியவர். இந்திய இலக்கியத்தில் புதியதொரு போக்கை, அவர் தோற்றுவித்தார். அந்தப் போக்கில் மேற்கும் கிழக்கும் கைகோத்து நடந்தன. சமயத்திலும், சமுதா யத்திலும் பல சீர்திருத்தங்களை அவர் கொணர்ந்தார். மாதருக்கு இழைக்கப்பட்டு வந்த கொடுமையைக் கண்டு வருந்தினார். மேனாடு களில் அக்காலத்தில் தோன்றிய சுதந்திர இயக்கங்களில், ஆழ்ந்த கவனம் செலுத்தினார். இவை யாவும் இந்திய வாழ்வைத் தொட்டுத் திசை திருப்பின. பிரஞ்சு நாட்டு சுதந்திரக் கொடியைப் பார்த்ததும் ஏற்பட்ட ஆனந்தத்தில் துள்ளிக் குதித்து, காலை முறித்து கொண் டார் என்று இவரைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. இந்த நாட் டிலே, ஒரு மகத்தான சமய, இலக்கிய விழிப்பை ஏற்படுத்துவதற்கு முன்னோடியாக, தனி ஒருவராய் நின்று அவர் செயற்பட்டார்.

அறிவுத்துறையில், சமயத்தில், சமுதாய வாழ்வில், வங்க நாடு கண்ட மறு பிறப்பு அவரையே மையமாகக் கொண்டு நிகழ்ந்தது.

1817-ம் ஆண்டில், சில வங்காளச் சீர்திருத்த வாதிகளும், பரோபகாரிகளும், நன்மனம் படைத்த சில பிரிட்டிஷாருடைய உதவியோடு, கல்கத்தாவில், ஹிந்து கல்லூரியை நிறுவினார்கள். நூறு மாணவர்கள் கொண்டிருந்த அக்கல்லூரியே முதல் ஆங்கில-வங்காளி நிறுவனம் ஆகும். அடுத்த ஆண்டில், ஸிராம்பூர் கல்லூரி தோன்றியது. வங்காளத்தின் புனருத்தாரணத்திற்காகத் தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்ட தீரப் பாதிரிகளான கியாரி, வார்ட், மார்ஷ்மன் (Carey, Ward, Marshman) ஆகிய மூவருமே இக்கல்லூரியைத் தொடங்கியவர்கள். டாக்டர் டஃப் (Dr. Duff) என்பவர் முதலிலும், பிறகு டேவிட் லெஸ்டர் ரிச்சர்ட்ஸன் (David Lester Richardson) என்பவரும் இக் கல்லூரியின் முதல்வர்களாக முக்கியப் பதவி வகித்தார்கள். தத் குடும்பத்தின் பிதாமகரும், தாருவின் பூட்டனுருமான நீலமணி தத் என்பவர், கியாரி பாதிரியின் நெருங்கிய நண்பராக இருந்தார். வங்காளத்தில் பிரிட்டிஷ் அரசு ஊன்றிய சிறிது காலத்திற்குப்பின், 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஆங்கிலக் கல்வி பெற்ற முதல் இந்தியருள் நீலமணி தத் ஒருவர். ராஜா ராம்மோகன் ராய் போன்றாரோடு சேர்ந்து, பாதிரிகளோடு இவர் நெருங்கிப் பழகினார். பாதிரிகளுடைய செல்வாக்கு ஓங்கியது. இதனால் வங்காளத்தில் தோன்றிய புதிய அறிவியக்கம், கிறிஸ்தவத்தோடு தொடர்பு கொண்டதாய் ஆயிற்று. கிறிஸ்தவ வேத நூலாகிய பைபிளை மூலத்தில் படிக்க வேண்டும் என்பதற்காக, கிரேக்க, ஹீப்ரு மொழிகளை, ராஜா ராம்மோகன் ராய் பயின்றார். மக்களிடையே, அன்னிய மொழிகளைப் பயிலும் ஆர்வம் பெருகியது. கிரேக்க, லத்தீன், பிரஞ்சு, ஜெர்மன் மொழிகளை அக்காலத்து வங்காள அறிவுலக மேதாவிகள் மிகுந்த கருத்தோடு பயின்றார்கள்.

அக்காலத்தில், இந்தியாவிற்குள் பாதிரிகள் வருவதை கிழக்கு இந்திய கும்பெனி விரும்பவில்லை. கும்பெனி அதிகாரிகளிடமிருந்து விடுபட, கியாரி பாதிரிக்கு நீலமணி தத் உதவினார். அதோடு, பிறகு புகழ் பெற்ற அப்பாதிரியைத் தம்முடைய வீட்டிலேயே வைத்து, புகலிடம் தந்து ஆதரித்தார். அப்போது, கியாரி எவ்வித ஆதரவும், வசதியும் அற்றவராய் இருந்தார். அவர் மனைவிக்கு வேறு, பைத்தியம் பிடித்திருந்தது. அவருடைய குழந்தைகள் நோயால் வருந்தினர். இந்த இக்கட்டான நிலையில், தமக்கு ஒரு ஹிந்து கனவான் அளித்த உதவியை, கியாரி ஒருநாளும் மறக்கவில்லை. மாணிக்தொல்லா தெருவில் இருந்த 'ராம்பகன்' என்ற நீலமணி தத் வீட்டில், மகிழ்ச்சியோடு, சொந்த வீடுபோல், கியாரி தங்கினார். இந்த வீடுதான், பிறகு தாருவின் வீடாயிற்று. நீலமணி தத்தின்

ஹிந்து குடும்பம் தாராள மனப்பாங்குடையது, வசதி படைத்தது. ஆடம்பரமான பூஜைகளிலும், தான தருமங்களிலும், நீலமணி தத் செய்த செலவினுல், கடைசியில் சல்லிக் காசும் இல்லாத அவல நிலே அவருக்கு ஏற்பட்டது. பணம் மிகவும் தேவைப்பட்ட அந்த சங்கடமான நிலேயில், நீலமணிக்கு கியாரி பாதிரி உதவினுர் என்று சொல்கிருர்கள். இப்படியாக, தாருவின் குடும்பத்திற்கும், பாதிரிகளுக்கும், ஆங்கில ஆர்வம் கொண்டோருக்கும் ஏற்பட்ட தொடர்பு, தாரு பிறப்பதற்கு மூன்று தலேமுறைகளுக்கு முன்னரே தோன்றியது.

ஆங்கிலத்தில் எழுதுவது இந்தியர்களே விரைவிலே கவரலாயிற்று. இவ்வாறு எழுதிய முதற் கவிஞர்களில் ஹென்றி லூயி விவியன் டெரோஸியோ (1809—1831) என்பவர் ஒருவர். அவர் ஓர் எழுத்தராயிருந்து, ஹிந்து கல்லூரியில் ஆங்கில ஆசிரியர் பதவிக்கு உயர்ந்தவர். அவருடைய தாய் இந்தியர், தந்தை போர்த்துக்கீசியர். 'ஜங்கீரா பக்கீர் முதலிய பாடல்கள்' என்பது, அவர் இயற்றிய செய்யுள் நூல்களில் அதிகப் பிரபலமானது. ஹிந்து கல்லூரி முதல்வரான டேவிட் லெஸ்டர் ரிச்சர்ட்ஸன், 'கல்கத்தா இலக்கிய கெஜட்' என்ற பத்திரிகைக்குப் பதிப்பாசிரியராக இருந்தார். அவர்தான் இவ்வாறு ஆங்கிலத்தில் எழுதிய இந்தியக் கவிஞர்களுக்கு நம்பிக்கை ஊட்டி, ஊக்கப்படுத்தி இருக்க வேண்டும். ரிச்சர்ட்ஸன் எழுதிய 'இலக்கிய இலேகள்'[1] அக்காலத்து வங்காள எழுத்தாளரிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்று, அவர்கள் போக்கைத் தெருட்டியது. 1874 டிசம்பரில் 'வங்காள மாகஸீன்' என்ற பத்திரிகையில், டெரோஸியோவைப் பற்றி, தாரு தத் ஒரு கட்டுரை எழுதினுர். காசி ப்ரஸாத் கோஷ் என்பவர் டெரோஸியோவைப் பின்பற்றி, ஆங்கிலத்தில் கவிதை எழுதிய முதல் வங்காளி ஆனுர். 1830-ஆம் ஆண்டில் 'ஷேர் முதலிய கவிதைகள்' என்ற தமது நூலே அவர் வெளியிட்டார். 1835-ஆம் ஆண்டுக்கு முன், இந்தோ-ஆங்கில இலக்கியம் படைத்தவர்கள், மோகன்லால், ஹஸான் அலி, பி. ராஜகோபால், ஆகியோர் ஆவர். 1841-ஆம் ஆண்டில், ராஜ் நாராயண் தத் என்பவர் தமது 'ஓஸ்மின்—ஓர் அராபியக் கதை'[2] என்ற நூலே ரிச்சர்ட்ஸன்னுக்கு உரிமையாக்கினுர். 'ஹிராயிக் கப்லெட்'[3] என்ற செய்யுள் வடிவில், பழைமையான நடையில் அவர், அந்நூலே எழுதியிருந்தார்.

மைக்கேல் மதுஸூதன் தத் (1827-1873) என்ற கவிஞரும் ஹிந்து கல்லூரியில் கல்வி பயின்றவரே. காசி ப்ரஸாதும், ராஜ் நாராயணனும் அவருக்கு முந்திய மாணவர்கள். மைக்கேலே

[1] *'Literary Leaves'* [2] *'Osmyn, an Arabian Tale'*

[3] 'Heroic couplet'

ரிச்சர்ட்ஸன்னுக்கு மிகவும் வேண்டிய மாணவர். 1843-ஆம் ஆண்டில் அவர் கிறிஸ்தவரானுர். பிறகு, சில ஆண்டுகள் கல்கத்தா பிஷப்ஸ் கல்லூரியில் தங்கியிருந்துவிட்டு, 1849-ம் ஆண்டில் சென்னைக்குச் சென்ருர். முதலில் அவர் ஆங்கிலத்தில் எழுதினுர். பிறகு, தாய்மொழிக்கு மாறி, சிறப்பு மிக்க வங்கக் கவிஞராகவும், நாடக ஆசிரியராகவும் விளங்கினுர்.

1876 ஜுலை மாதத்தில், தமது நண்பர் மேரி மார்ட்டினுக்குத் தாரு எழுதிய கடிதத்தில், மைக்கேலைக் குறிப்பிடுகிருர். அப்போது தான் வெளிவந்திருந்த தமது 'பிரஞ்சு வயல்களில் திரட்டிய கதிர்கள்' என்ற நூலைப் பற்றி, 'வங்காளி' என்ற பத்திரிகை வெளியிட்ட மதிப்புரையைப் பற்றிப் பேசிவிட்டு, அம்மதிப்புரை 'சிறந்த கல்விமான்களிடங்கூட அருமையாகவே காணப்பெறும் பண்பாடு தாருவுக்கு அமைந்துள்ளது' என்று பாராட்டிய போதிலும், தம்மை மைக்கேல் மதுஸூதன் தத் குடும்பத்தோடு தவறுதலாகத் தொடர்பு படுத்தியுள்ளது என்று சுட்டிக் காட்டுகிருர். அவர் எழுதுகிருர் : 'மதிப்புரையில் குறிக்கப் பெறும் மைக்கேல் எம். எம். தத்துக்கும் எனக்கும், மதிப்புரையாளர் நினைப்பதுபோல் எவ்வித மான உறவும் இல்லை.' மைக்கேலுடைய சொந்த ஊர் ஜெஸ்ஸூர் மாவட்டத்தில் உள்ள ஸாகர்தாரி கிராமம் ஆகும்.

1851-ம் ஆண்டில், தாருவின் தந்தையின் சகோதரர் ஹர் சந்திர தத் என்பவர் 'அவ்வப்போது எழுந்த கவிதைகள்', 'ஆன்மீக ஒழுக்க, கவிதை எழுத்துக்கள்,' என்ற இரு கவிதைச் சிறு நூல்களை வெளியிட்டார். இன்னெரு சகோதரரான கிரிஷ் சந்திரர் 'செரி மலர்கள்' என்ற கவிதை நூலை எழுதினுர். இவர்கள் இருவரும், தாருவின் தந்தையான கோவின் சந்திர தத், சில ஆண்டுகளுக்குப் பின் 1870-ம் ஆண்டில் வெளியிட்ட 'தத் குடும்பத் திரட்டு' (Dutt Familly Album) என்ற தொகுப்பு நூலிலும் எழுதினுர்கள். இது லண்டனில் லாங்மென்ஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப் பெற்றது. கோவின் சந்திர தத்தின் கவிதைகளும், அவருடைய மருமகன் ஓமேஷ் சந்திர தத் என்பவரின் கவிதைகளும், இத் தொகுப்பில் இடம் பெற்றன. இந் நூலுக்கு அவ்வளவு உற்சாக மான வரவேற்புக் கிடைக்கவில்லை. ஆயினும் வங்காளத்தில் இருந்த எழுத்தாளர்கள் கவனத்தை, அது கவரத் தவறவில்லை. கவிதை எழுத வேண்டும் என்று தத் குடும்பத்தினருக்கு இருந்த ஆர்வத்தை அது காட்டியது, அவ்வளவே. அதற்குமேல், அந்நூல் இலக்கியத் தகுதி எதையும் சாதிக்கவில்லை. ஆயினும் வங்காளிகள், ஆங்கிலத்தில் எழுதிய கவிதைகளில் முதற் தொகுப்பாக அமைந்து, மைக்கேல் மதுஸூதன் தத் எழுதிய 'சிறையிருந்த நங்கை' என்ற நூலைப்போல, முதிய வங்காளித் தலைமுறையின் ஆங்கிலக் கவிதைகளுக்கு எடுத்துக் காட்டாக அது நின்றது. இந்நூலில் தாருவின்

கவிதைகளோ, அவள் சகோதரி அருவின் கவிதைகளோ வெளிவர வில்லை. இங்கிலாந்தில் அப்போது இருந்த இவ்விருவரும், கவிதை எழுத அக்கறையுடன் தொடங்கியிருக்க முடியாது. 1873-ல் அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிய பிறகுதான், கவிதையை எழுதவோ வெளியிடவோ அவர்கள் எண்ணியிருக்க வேண்டும். இந்தியாவுக்கு வந்தவுடன், 'வங்காள மாகஸின்' என்ற பத்திரிகை யில் எழுத மும்முரமாக முனைந்தார்கள். அதற்கு முன்பே, இங்கி லாந்தில் இருந்த போதே பிரஞ்சு செய்யுளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க அவர்கள் தொடங்கி விட்டார்கள்.

'தத் குடும்பத் திரட்டி'ல் வெளிவந்த 197 பாடல்களில் கோவின் சந்திரர் 66-ம், ஓமேஷ் 73-ம், வழங்கினார்கள். 17-ம் நூற்றாண்டில் வழங்கிய, பழைய விசித்திரமான ஒரு நடையை ஓமேஷ் கையாண்டார். 'தத் குடும்பத்திரட்டு' திறமை பெற்ற ஒரு குடும்பத்தின் நினைவுச் சின்னமாக மட்டும் அமையவில்லை. கல்கத்தாவில், முதன் முதலாக ஆங்கில மொழி - இலக்கிய உயர் கல்வியை வழங்கிய ஆங்கில ஆசிரியர்களின் பங்குக்கும், செல் வாக்குக்கும் சான்றாக அது உதவியது. இந்த நூலைப் பற்றி, தாரு மிக உயர்வாகக் கருதினார். தாருவின் 'ஷீஃப்' (கதிர்க்கட்டு) என்ற நூலைப் பற்றி, அவருடைய நண்பர் மேரி மார்ட்டின் எழுதிய மதிப்புரையை 'க்வீன்' (அரசி) என்ற ஆங்கிலப் பத்திரிகை வெளியிடவில்லை. இது குறித்து, மேரிக்குத் தாரு எழுதிய கடிதத் தில் 'உன்னுடைய மதிப்புரையை வெளியிட "க்வீன்" மறுத்தது எவ்வளவு எரிச்சலாக இருக்கிறது! கிடக்கட்டும், விடு. அந்தப் பத்திரிகையைப் பற்றி அப்படிப் பெரிதாக நான் எண்ணியதில்லை. அது "தத் குடும்பதிரட்டை"ப் பற்றி, ஆதரவாக ஒன்றும் எழுத வில்லையல்லவா?' தத் குடும்பத்தில், இன்னொரு கவிஞர் ஸோஷி சந்திர தத் என்பவர். கோவினுடைய ஒன்று விட்ட சகோதரரும், புகழ்பெற்ற எழுத்தாளருமான ரொமேஷ் சந்திர தத் என்பவரின் தந்தைக்கு, இந்த ஸோஷி சந்திரர் சகோதரர் ஆவர். 1878-ம் ஆண்டில், 'சுமேருதர்சனம் முதலிய பாடல்கள்' என்ற இவருடைய நூல் தாக்கர் ஸ்பின்க் கம்பெனியாரால் வெளியிடப் பெற்றது. தத் குடும்ப எழுத்தாளரில் மிகுந்த புகழ் பெற்றவராய் இருந் தவர் ரொமேஷ் சந்திர தத் என்பவரே. அவர் தாருவுக்கு இரண்டு விட்ட சகோதரர். தாருவின் குடும்பத்தோடு நெருங்கிப் பழகிய வர். அவருடைய திறமையில் தாருவுக்கும் அருவுக்கும் ஒரே ஈடுபாடு.

19-வது நூற்றாண்டு, ஆங்கிலத்தை இந்தியாவுக்குக் கொணர்ந்தது என்பது மாத்திரம் இல்லை. அறிவுச் சீர்த்திருத்தம், சமயச் சீரமைப்பு, இவை மலர்ந்த வளம் மிக்க நிலமாக இந்தியா வைப் பொறுத்த வரையில் அந்த நூற்றாண்டு அமைந்தது. இக்

காலத்தில்தான், ஸம்ஸ்கிருத இலக்கியத்தைத் துருவி ஆராய ஐரோப்பியர்கள் தொடங்கி, இந்தியப் புலமையின் ஆழத்தைக் கண்டார்கள். இதற்குச் சற்று முன்புதான், கல்கத்தாவில் 'ராயல் ஏஷியாடிக் சொஸைடி' பிறந்தது. ஸர் வில்லியம் ஜோன்ஸ், ஜான் வில்ஸன், ஸர் எட்வின் ஆர்னல்ட், ஸர் வில்லியம் ஹண்டர் போன்றவர்கள் இந்தியப் பெரு நூல்களை ஆழ்ந்து பயின்று, வெளி நாடுகளில் இந்தியாவின் பழங்காலப் பெருமையைப் பற்றிய பேரார்வத்தைப் படைத்தார்கள். ஆகவே புதிய விழிப்பும், படைப்பு வளமும் கண்ட ஒரு காலத்தில்தான் தாரு வாழ்ந்தார். அந்தக் காலத்து வானில் மட்டுமன்று, அவர் பிறந்து நூறு ஆண்டுகள் கழிந்து போன இன்றைய இலக்கியப் புலத்திலும், என்றும் நின்று சுடர் விடும் நட்சத்திரமாகத் தாரு விளங்குகிறார்.

3. ராம்பகன் தத் குடும்பம்

வங்காளத்தின் பர்துவான் மாவட்டத்தைச் சார்ந்த அஜாபூர் என்ற ஊரே, தத் குடும்பத்தின் பூர்வீகக் கிராமம். அக்குடும்பம் காயஸ்த வகுப்பைச் சார்ந்தது. 1757-ம் ஆண்டு, ஜனவரி 3-ம் தேதி, அக்குடும்பத்தில் நீலமணி என்பவர் பிறந்தார். பலவகையில் சிறந்து விளங்கிய இப்பெருந்தகையே, தன் வழித் தோன்றல்கள் அனைவருக்கும் பேருக்கம் வழங்கிய மூல ஊற்றாக அமைந்தார். குடும்பத்தின் ஒரு கிளை, பர்துவானிலே தங்கியது. நீலமணியின் தந்தையோ கல்கத்தாவில் உள்ள ராம்பகனுக்கு வந்து குடி யேறினார். வந்த இடத்தில், விரிந்த மனப்பாங்குடைய அறிவாள ராகத் தமக்குப் பெயர் தேடிக் கொண்டார். அவருடைய விருந் தோம்பலும், உதாரமும் பலரை அவருடைய இல்லத்திற்கு ஈர்த்தன. அவருடைய விரிந்த, தாராளக் கொள்கைகளில் ஈடு பட்டு மகிழ்ந்து, அவரைச் சுற்றி நண்பர்கள் திரண்டனர்.

நீலமணிக்கு மூன்று ஆண் மக்கள்: ரஸமாய், ஹரிஷ், பீதாம்பர். ரஸமாயின் மூன்றாவது மகன் கோவின் சந்தர் என்பவர். இவரே தாருவின் தந்தை. இவருக்கு நான்கு சகோதரர்கள்: கிஷன் சந்தர், கைலாஷ் சந்தர், ஹர் சந்தர், கிரிஷ் சந்தர். பீதாம்பருக்கு இரண்டு ஆண் மக்கள்: ஈசன் சந்தர், ஸோஷி சந்தர். புகழ்பெற்ற இந்தியப் புராதனக் கலை இலக்கிய நிபுணரான

ரொமேஷ் சந்திர தத் என்பவர், ஈசன் சந்தரின் மகன் ஆவார். அவருடைய வீடு, ராம்பகன் இருந்த இடத்தருகில் இன்னும் நிற்கிறது. அந்த வீட்டு வாசற்கதவில், கீழ்க்கண்ட குறிப்பு பொறிக்கப் பெற்றுள்ளது.

புகழ் பெற்ற இலக்கிய எழுத்தாளர்
ஆர். ஸி. தத், ஐ.ஸி.எஸ்., ஸி.ஐ.இ.
இந்த வீட்டில் 1848—1872 ஆண்டுகளில் வாழ்ந்தார்.

ரொமேஷ் சந்திரருடைய மருமகனுன அசோக தத், புகழ் படைத்த இவ்வீட்டில் இன்றும் வாழ்ந்து வருகிறார்.

தாருவின் பாட்டனாரான ரஸமாய் தத், ஆங்கில இலக்கியமும், பொருளாதாரமும் ஆர்வத்தோடு பயின்ற மாணவர். ஆங்கிலத்தில் இவர் காட்டிய ஈடுபாட்டை, ஆங்கிலேயர் வரவேற்றது இயற்கையே. அதோடு, தாம் பெற்ற ஆங்கில அறிவை மற்றைய வங்காளிகளிடையே பரப்புவதற்கும் ரஸமாய்க்கு இவர்கள் ஆதரவு அளித்தார்கள். ஹிந்து கல்லூரி கமிட்டியின் கௌரவச் செயலாளர் பதவியை அவருக்கு வழங்கினார்கள். நாளடைவில், ஸ்மால் காஸ் கோர்ட் (சிறு வழக்கு நீதி மன்றம்) நீதிபதியாகவும், கோர்ட் ஆஃப் ரிக்குவெஸ்ட்ஸ் (வேண்டுகோள் நீதி மன்றம்) ஆணையாளராகவும் அவர் உயர்ந்தார். ரஸமாயைப் பற்றி, ரொமேஷ் சந்திர தத் சொல்கிறார் : 'தம்முடைய வீட்டில் ஆங்கில நூல்கள் கொண்ட அருமையான புத்தகசாலை ஒன்றை, ரஸமாய் வைத்திருந்தார். தம்முடைய மைந்தர்களுக்கு ஆங்கில இலக்கியத்தில் அழுத்தமான ஆர்வமும் அவர் ஊட்டினார்.' இந்த ஆர்வம் அவருடைய பேரத்திகளுக்கு (அரு தத், தாரு தத்)ப் பரம்பரைச் சொத்தாகக் கிட்டியது. தம்முடைய தந்தை நீலமணியைப் போலன்றி, வறுமைக்கு உள்ளாக்கிய பூஜைகளை, ரஸமாய் ஒதுக்கினார். இதனால், வைதீக பிராமணர்களுக்கு அவரைப் பிடிக்கவில்லை. தாரு பிறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் 1854 மே 14-ம் தேதி அவர் காலமானார். அவர் கிறிஸ்தவ வேதமாகிய பைபிளை நன்றாகப் பயின்றிருந்தார். வீட்டில் இருந்த பெண்கள் யாவரையும் பைபிளில் ஸாம்ஸ் (கீதங்கள்) என்ற பகுதியை வங்காளியில் எழுதி வைத்துக் கொள்ளும்படி செய்தார். ஸ்காட் என்பவர் எழுதிய உரை அவர்களுக்கு உதவியாய் இருந்தது.

தத் குடும்பம் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறிய வரலாறு சுவை உடையது. திரு. எஸ். டபிள்யூ. மேக்கே என்பவர், 1854 ஜூன் 29-ம் தேதியிட்ட கடிதத்தில், இது பற்றிய விவரங்களைத் தருகிறார். ரஸமாய் இறந்ததும், அவருடைய தகனக் கிரியை நடந்தது. அப்போது அவருடைய மூத்தமகன் கிஷனுக்கு நோய் கண்டது. விரைவிலே, அது காய்ச்சலாக மாற, கிஷன் இறந்தார். அவர் இறந்

த்தும், அவருடைய கடைசித் தம்பியான கிரிஷ், ஓகில்வி டெம்பிள் என்ற பாதிரிக்குச் சொல்லி அனுப்பினுர். நோய் வாய்ப்பட்டிருந்த காரணத்தால் டாக்டர் மேக்கே, கிரீஷ் வீட்டிற்குப் போக இயல வில்லை. டாக்டர் எவர்ட் என்பாரை டெம்பிளோடு போகச் சொல்லி வேண்டினுர். தம்முடைய அண்ணன் கிஷன், இறப் பதற்கு முன், மறு உலகக் காட்சியைக் கண்டதாகவும், கிறிஸ்தவத் தில் அவருக்கு நம்பிக்கை இருந்ததென்றும், ஞான ஸ்ஞனம் பெற அவர் விரும்பினுர் என்றும், பாதிரிகளிடம் கிரிஷ் கூறினுர். கிஷனுடைய மரண வேளையில், அவர் அருகிலே பாதிரிகள் வருவ தற்கு வீட்டில் உள்ளவர்கள் தடையாக இருந்தார்கள் என்றும், ஆகவே தாம் ஹிந்துவாக இருந்தபோதிலும், பரலோக பிதா, மகன், பரிசுத்த ஆவி, இப்பெயர்களைச் சொல்லி, தாமே கிஷனுக்கு ஞான ஸ்ஞனம் செய்து வைத்ததாகவும், கிரீஷ் சொன்னுர். இறப் பதற்கு முன், கிஷன், தம்முடைய குடும்பத்தாரை அழைத்து, தம்மைச் சுற்றி வைத்துக் கொண்டு, கிறிஸ்துவின் உண்மைக்குச் சான்று பகர்ந்து, அவர்கள் அனைவரையும் கிறிஸ்தவர்கள் ஆகும் படி மன்ருடி வேண்டிக் கொண்டாராம்.

தந்தையும் மூத்த சகோதரனும் மறைந்த பிறகு, மற்றைய சகோதரர்கள் கிறிஸ்தவர்கள் ஆவதில் உள்ள சாதக பாதகங்களை விவாதித்தார்கள் என்று டாக்டர் மேக்கே சொல்கிருர். குடும்பமே இவ்வாறு மதம் மாறுவதை வீட்டிலுள்ள மனைவிமார் முதலில் எதிர்த்தாலும், கடைசியில் தம்முடைய கணவன்மார் போக்கின் படி செல்ல, ஒப்புக் கொண்டார்களாம். ஆயினும், எட்டு ஆண்டு கள் கழிந்த பின்னரே, அதாவது 1862-ம் ஆண்டில் தத் குடும்பம் கிறிஸ்துவ மார்க்கத்தைத் தழுவியது. இந்தத் தாமதத்திற்குக் காரணம், முதலில் எழுந்த பெண்களுடைய எதிர்ப்பும், ஹிந்து சமுதாயத்தின் எதிர்ப்புமே என்று கொள்ளலாம். கோவின் சந்தர் க்ஷேத்ர மணி மித்தர் என்பவரை மணந்து கொண்டிருந் தார். க்ஷேத்திரமணி, பாபு பிருந்தவன் மித்தருடைய மகள். அவருக்கு வங்காளி நன்ருகத் தெரியும். ஹிந்து சமய நூல் களிலும், புராணக் கதைகளிலும் நல்ல தேர்ச்சி உடையவர். வீட்டிலே எல்லார் பேரிலும் பதிந்த அவருடைய மென்மையான செல்வாக்கும், அவருடைய பாடல்களும், கதை சொல்லும் திறமை யும் ஒன்ருகச் சேர்ந்து, புராதன இந்திய நாட்டுப் பாடல்களிடம் தாருவுக்கு ஓர் ஆழ்ந்த ஈடுபாட்டைத் தோற்றுவித்தன. தம்முடைய பிரஞ்சு நண்பர் குமாரி கிளாரிஸ்ஸா பாதர் (Clarisse Bader) என்பவருக்குத் தாரு எழுதினுர்: ‘மாலை வேளையில் எங்கள் நாட்டுப் பழம் பாடல்களை என் அன்னை பாடுவதைக் கேட்கும்போது, எனக்கு அழுகையே வந்துவிடும்.’

1862-ம் ஆண்டில், தமது கணவர் கோவின் சந்தரோடும், குழந்தைகளோடும், மற்றைய தத் சகோதரர்களோடும், அவர் தம் மனைவியரோடும், க்ஷேத்திரமணி ஞான ஸ்நானம் பெற்று, கிறிஸ்தவ ராகி விட்ட போதிலும், தத் குடும்பத்துப் பெண்கள் ஹிந்து தருமத்தையும், பழக்க வழக்கங்களையும் கைவிடவில்லை. ஆனால் க்ஷேத்திரமணி மட்டும், சிறிது காலம் கழித்து, மிகுந்த நம்பிக்கை யும், ஆர்வமும் உடைய கிறிஸ்தவராக மாறினார். கோவின் சந்தர், அவர் மனைவி க்ஷேத்திரமணி, அவர்தம் குழந்தைகள் ஆகிய இந்தக் குடும்பக் கிளை, கிறிஸ்தவத்தை ஆழ்ந்த உண்மை யான விசுவாசத்தோடு பின்பற்றியது. ஒரு சமயம், தமக்கும் தமது மனைவிக்கும் மன வேற்றுமை ஏற்படுமோ என்று கோவின் சந்தர் அஞ்சியதாகத் தெரிகிறது. இந்தக் கவலையை ஓரளவுக்குத் தாம் எழுதிய பாடல் ஒன்றில் கோவின் சந்தர் வெளியிட்டார். அப்பாடல் 'தத் குடும்பத் திரட்டு' என்ற தொகை நூலில் இடம் பெற்றது. அந்தப் பாடலின் முதற் பகுதி வருமாறு.

'இல்லை அப்படிப் பிரிந்து போகாதே.
ஒரு கணம் இரு.
நீயும் என்ன,
மற்றவர்களைப் போல்,
முகத்தைத் திருப்பிக் கொண்டு
என்னைத் தன்னந் தனியனாய்
விட்டு விடுவாயோ ?
என்னை எள்ளி நகையாடும்
அந்தக் கூட்டத்தில் நீயும் சேர்ந்து விட்டாயோ ?
வெறும் பொம்மைகளைத் தொழுவதை
தீரத்தோடு தூக்கி எறிந்து விட்டு
என் இரட்சகர் சிங்காதனத்தின் முன்
நான் மண்டியிட்டுத் தொழுதேனே—
அந்தப் புனிதமான காலை வேளையைச்
சபித்தார்களே,
அந்தச் செருக்கேறிய, இதயமற்ற கும்பலில்,
நீயும் சேர்ந்து விட்டாயோ ?'

கோவின் சந்தரைத் திருமணம் செய்து கொண்டபோது க்ஷேத்திரமணிக்கு ஆங்கிலம் தெரியாது. பிறகுதான் ஆங்கிலம் பயின்றார். பயின்றவர் 'இயேசுவின் இரத்தம்' என்ற ஆங்கில நூலை வங்காளியில் மொழிபெயர்க்கும் அளவுக்கு, ஆங்கிலத்தைச் சரளமாகக் கையாண்டார். இந்த மொழிபெயர்ப்பு நூல், கல்கத்தா 'டிராக்ட் அன் புக் சொஸைட்டி' (சமயக் கட்டுரை புத்தகக் கழகம்) யினரால் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

குறைந்த வயதிலேயே மறைந்த தம்முடைய குடும்பத்தினர் பலரைப் போலன்றி, க்ஷேத்திரமணி நீண்ட காலம் வாழ்ந்து, கிறிஸ்தவத்தில் ஊன்றிய பக்திமணியாகத் திகழ்ந்தார். அவர் மறைந்தது 1900-ம் ஆண்டில்.

தம்முடைய பெண்களை வளர்த்து ஆளாக்கியதில், தம் கணவருக்கு இருந்த பங்கும் செல்வாக்கும் க்ஷேத்திரமணிக்கும் இருந்தன. கோவின் சந்தர் தத் குடும்பத்தைப் பற்றி, ஹரிஹர் தாஸ் என்பவருக்கு, பிஷப் க்லிஃபோர்டு பின்வருமாறு எழுதினுர்: 'நான் ஒன்றை உணரக் கற்றுக்கொண்டேன். தாரு தத், தம் முடைய அறிவாற்றலைத் தம் தந்தையின் வமிசத்திலிருந்து பெற்றிருந்தார் என்ருல், அவருடைய தாயின் பக்கத்திலிருந்துதான் பெரும்பாலும் அவருக்கு ஒழுக்க அழகும், இனிமையும் கிட்டியிருக்க வேண்டும்.'

கோவின் சந்தர் உதாரகுணமும், பிறரிடம் ஆழ்ந்த பரிவும் கொண்டவர். விருப்பு வெறுப்புகளும், குறுகிய முரட்டுச் சமயப் பிடிவாதமும் அவரிடம் இல்லை. ரஸமாயின் ஐந்து ஆண் மக்களில், கோவின்தான் மிகுந்த பிரபலம் அடைந்தவர். 1836-ம் ஆண்டில், அவர் ஹிந்து கல்லூரியில் சேர்ந்தார். பேராசிரியர் டேவிட் லெஸ்டர் ரிச்சர்ட்ஸன்னுடைய அன்பும் சலுகையும் மிகவும் பெற்ற மாணவராஞர். யாவரும் ஆசைப்பட்ட இந்தப் பதவி, பிற்காலத்தில் மைக்கேல் மதுஸூதன் தத்துக்குக் கிடைத்தது. கல்லூரி நாடகங்களிலே கோவின் பங்கெடுத்துக் கொண்டார். ஷேக்ஸ்பியரை எப்படி உணர்ச்சியோடு ஒப்புவிப்பது என்பதைத் தம்முடைய ஆசிரியரிடம் கற்ருர். பிரபல பேராசிரியரான ரிச்சர்ட்ஸன்னுடைய மாணவர்களில், பியரி சரண் ஸர்கார், ககனேந்திர மோஹன் தாகூர், புதேவ் முகர்ஜி, போலா நாத் சந்தர், இவர்களைக் குறிப்பிடலாம். பார்க்கப் போனுல், அக் காலத்தில் எழுத்தாளர்களாகவும், சிந்தனையாளர்களாகவும் விளங்கிய தாரா மண்டலத்தை, ஹிந்து கல்லூரியே படைத்தது.

இளமையிலிருந்தே கோவின் சந்தர் எழுத்துலகில் துணிய முற்பட்டார். சிறு கவிதை நூலொன்றை வெளியிட்டார். 'பிளாக்வுட் மாகஸின்' என்ற பத்திரிகையில், அதற்குச் சிறிது பாராட்டுக் கிடைத்தது. 1848 டிசம்பர் இதழில், 'கல்கத்தா ரிவியூ' என்ற பத்திரிகையும் இந்நூலைப் புகழ்ந்தது. இந்நூலில் வெளிவந்த கவிதைகள், பிறகு வேறு சில கவிதைகளோடு, 'தத் குடும்பத் திரட்டு' என்ற தொகை நூலில் இடம் பெற்றன.

படிப்பு முடிந்ததும், அரசாங்க அலுவலகத்தில் பணியாற்றத் தொடங்கி, நாளடைவில் 'அஸிஸ்டன்ட் கன்ட்ரோலர் ஆப் ஜெனரல் அக்கௌன்ட்ஸ்' (கணக்கு நிர்வாக உதவி மேலாளர்) பதவிக்கு உயர்ந்தார். வங்காளிகளின் உரிமைகள் புறக்கணிக்கப்

படுவதாக, அவர் தைரியமாகக் கூறியதால், அவர் பம்பாய் நகருக்கு மாற்றப் பெற்ருர். தமது குடும்பத்தைப் பம்பாய்க்கு அழைத்துச் சென்ருர். ஆனல் தமக்குப் பதவி உயர்வு கிடைக்காத தாலும், வங்காளத்தில் தாம் குறை கூறியதன் காரணமாகத் தம்மை வெளிப்படையாக அரசாங்கம் ஒதுக்கியதாலும், தமது வேலையை ராஜிஞமா செய்துவிட்டார். இலக்கியத்தையும் சமயத் தையும் தொடருவதில் நேரத்தை செலவிட, இப்போது அவருக்குச் சுதந்திரம் கிட்டியது. வசதி படைத்தவரானபடியால், வேலை யில்லாமல் இருந்ததைப் பற்றி அவர் கவலைப்படவில்லை.

1873-ம் ஆண்டில் கோவினும் அவருடைய குடும்பமும் இங்கிலாந்திலிருந்து திரும்பிய சிறிது காலத்திற்குப்பிறகு,ரொமேஷ் சந்தர் தத் கீழ்க்கண்டவாறு எழுதினர்: 'என்னிடம் அவர்கள் எப்போதும் போல் அன்போடும், வினயத்தோடும், மரியாதை யோடும் நடந்து கொண்டார்கள். அவர்கள் உள்ளங்கள் பக்தியால் நிறைந்திருந்தன. ஆனல் இங்கிலாந்தில் முதலில் அவர்களைப் பீடித்த மரண காரணமான அந்தப் பயங்கர நோய்[1] தன்னை இனங் காட்டியது. முதலில் மூத்தவளான அரு, பிறகு திறமைசாலியான தாரு, இருவரும் நோய் முற்றி இறந்தனர். தாருவின் கவிதைகள் இங்கிலாந்தில் எட்மன்ட் காஸ் (Edmund Gosse) என்ற திறனாய் வாளரால் புகழப்பெற்றன. அங்கே, குறிப்பிட்ட வாசகர் வட்டத்தில் பாராட்டும் பெற்றன. தாரு மட்டும் இன்னும் சிறிது காலம் வாழ்ந்து முதிர்ச்சியுடன் பக்குவம் பெற்றிருந்தால், ஆங்கில இலக்கியத்தில் தமது பெயரை நிலை நிறுத்திச் சென்றிருப்பார். தம்முடைய இரு பெண்களின் மறைவுக்குப் பிறகு, சில ஆண்டுகளே, கோவின் இருந்தார். மேலும் சில ஆண்டுகளுக்குப் பின் அவருடைய விதவை, அவரைப் பின்தொடர்ந்தார்.'

4. குழந்தைப் பருவம்

கல்கத்தாவின் மத்தியில் உள்ள மணிக்தோலா தெருவில், ராம்பகன் என்ற தமது தந்தையின் வீட்டில், தாரு பிறந்நார். தாருவின் தந்தை கோவின் சந்தருக்கு மூன்று மக்கள்: அப்ஜூ என்ற

1. அருவும் தாருவும் க்ஷயத்தால் இறந்தனர்.

மகன், 1851 அக்டோபர் 18-ல் பிறந்தவன், 1865 ஜுலை 7-ல் காலமானுன்; அரு என்ற மகள், 1854 செப்டம்பர் 13-ல் பிறந்தவள், 1874, ஜுலை 23-ல் காலமானுள்; தாரு என்ற மகள் கடைக்குட்டி, 1856 மார்ச் 4-ல் பிறந்தவள், 1877 ஆகஸ்டு மாதம் 30-ல் மறைந்தாள்.

1862-ம் ஆண்டில், கல்கத்தா கார்ன்வாலிஸ் சதுக்கத்தில் உள்ள கிறிஸ்து சர்ச்சில், குழந்தைகள் மூவரோடும் தத் குடும்பம் ஞானஸ்னனம் பெற்று, கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியது. இது நடந்த சில நாட்களுக்குப் பிறகு, தாருவும் அருவும் விளையாடிக் கொண்டிருந்தபோது, அரு சரேலெனத் தாருவைக் கேட்டாள்: ‘ நீ இப்போது ஒரு கிறிஸ்தவப்பெண், இல்லையா? கிறிஸ்தவ வேத நூலாகிய பைபிலில், ஒருவர் உன் கன்னத்தில் அடித்தால், நீ அவருக்கு மறு கன்னத்தைக் காட்ட வேண்டும் என்று எழுதி இருக்கிறது. சரி, யாராவது இப்போது உன் கன்னத்தில் அடித்தார்கள் என்று வைத்துக் கொள். அவனுக்கு மறு கன்னத்தைக் காட்ட உன்னுல் முடியுமா?’

‘ ஏன் முடியாது? காட்டுவேன் ’, என்றுளாம் தாரு. உடனே எதிர்பாராத விதமாக, தாருவின் கன்னத்தில் பளீரென்று அரு அறைந்தாள். தாருவுக்குக் குபீரென்று அழுகை பொத்துக் கொண்டு வந்தது. ஆனுல், அழுதாளே தவிர, பதிலுக்கு அடிக்கவில்லை. தாருவின் வாழ்க்கை வரலாறு எழுதியுள்ள ஹரிஹர் தாஸ், தாரு மறு கன்னத்தைக் காட்டினுளா என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. தாரு, அரு, இவ்விருவரில் தங்கையாய் இருந்த போதிலும், விளையாட்டுக்களில் தாருவே அருவுக்கு வழி காட்டி அழைத்துச் செல்லுவாள், அதிக உறுதி படைத்தவள். என்றுலும், குழந்தைப் பருவத்தில், அருவே அதிக திடம் பெற்றவளாய் இருந்தாள் என்பதை இந் நிகழ்ச்சி காட்டுகிறது.

குழந்தைகளாய் இருந்தபோதே, இம் மூன்று குழந்தைகளும் மிகுந்த அக்கறையோடு படிப்பில் முனைந்தார்கள். பாபு சாஹெப் சந்தர் பானர்ஜி என்ற விசுவாசமுள்ள கிறிஸ்தவ முதியவர் ஒருவர் இவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு அமர்த்தப் பெற்றுர். இவருடைய மருமகள், டபிள்யூ. ஸி. பானர்ஜியை மணந்து கொண்டார். இந்த பானர்ஜிதான் 1885-ம் ஆண்டில், இந்திய தேசீய காங்கிரஸுக்கு முதல் தலைவராய் இருந்தவர். பாபு சாஹெப் சந்தரைக் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்திருந்தது. மிஸ் மார்ட்டினுக்கு, 1877-ல் எழுதிய கடிதத்தில், தாரு சொல்கிறுர். ‘ நாங்கள் சின்னக் குழந்தைகளாய் இருந்த போதே, பாபு எங்களுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பது வழக்கம். குழந்தைகளாகிய எங்களுக்கு அவரை மிகவும் பிடிக்கும். வயதான பிறகு,

மரியாதை கலந்த அன்பாக எங்கள் உணர்ச்சி வளர்ந்தது. அவர் அவ்வளவு உண்மையான கிறிஸ்தவர். எங்கள் களிப்பிலும், துயரத்திலும் அவர் அவ்வளவு உண்மையான பரிவு காட்டுவார். அவர் பாடம் சொல்லும் நேரத்தை, நாங்கள் ஏதாவது வம்பு பேசி எப்படிக் கழிக்க முயலுவோம் தெரியுமா? ஆனால் அவர் அவ்வள வுக்கு எங்களை விட மாட்டார். நாங்கள் நிதி இலாகாவில் வேலை பார்த்து வந்த ஒவ்வொருவரைப் பற்றியும் மிகுந்த கவலையோடு விசாரிக்கத் தொடங்குவோம். அவருக்கு உடம்பு எப்படி இருக் கிறது, இவர் என்ன செய்கிறார் என்று எல்லோருடைய அலுவல் களைப் பற்றியும் விசாரிக்கும் ஆர்வம் திடீரென்று எங்களுக்குப் பொத்துக் கொண்டு வந்துவிடும். ஆனால் அவர் இடங்கொடுக்க வேண்டுமே? அவரோடு சேர்ந்து, அவர் சொல்லிக் கொடுக்கத் தொடங்கிய சிறிது காலத்திற்குள், ஆங்கிலக் கவிஞன் மில்டனைப் பயின்று வந்தோம். அந்தக் கவிஞனுடைய 'துறக்க நீக்கம்' (Paradise Lost) என்ற காவியத்தைப் படித்தோம். திரும்பத் திரும்பப் படித்தோம். அக்காவியத்தில் முதற் காண்டமும், இரண்டாம் காண்டத்தில் ஒரு பகுதியும் எங்களுக்கு மனப்பாடமே ஆகிவிட்டது.'

தாருவும், அருவும், விரைவிலேயே, திருமதி ஸினேஸ் என்பவரிடம், வீட்டிலேயே ஆங்கிலம் பயிலவும் தொடங் கினார்கள். பியானா வாசிக்கவும் கற்றுக் கொண்டார்கள். பிறகு, ஐரோப்பாவில் தமது இசையறிவை வளர்த்துக்கொண்டார்கள். இருவரும், நன்றாக பியானா வாசிப்பார்கள், கனமான பெண் குரலில் பாடவும் பாடுவார்கள். அவர்களுடைய குடும்பத்திற்குச் சொந்த மான ஒரு தோட்ட வீட்டிலும், கல்கத்தாவில் இருந்த புராதன மான வீட்டிலும், ஐரோப்பிய, வங்காள இசை, நண்பர்கள், உறவி னர்கள் பலரோடும் அளவளாவுதல், விரிந்த புத்தகப்படிப்பு, இவற் றில் தாருவின் குழந்தைப் பருவம் இன்பமாகவே கழிந்தது. இந்த இன்பத்திற்குத் தடையாக வந்தது தாருவின் அண்ணன் அப்ஜூ இளமையிலே மறைந்த துயரந்தான். தம்முடைய உறவினர்களான தாரு, அரு இருவரைப் பற்றியும், அவர்களுடைய போக்மாரி தோட்ட வீட்டைப் பற்றியும், சுவையான ஒரு வருணனை, ரொமேஷ் சந்தர் தத்துடைய எழுத்தில் காணலாம்: 'பல ஏக்கர் விரிந்துகிடந்த தோட்டம் அது. பழ மரங்களின் நிழல் படிந்தது. அங்கே, சிறு ஓடையொன்றின் மேலே, கிராமியப் பாலம் ஒன்று இருந்தது. எங்கள் இளமையில், அப்பாலம் எங்களுக்கு மிகுந்த குதூகலம் தந்தது. தோட்டம் முழுவதிலும், எங்கு வேண்டுமானா லும், நாங்கள் போகலாம், விளையாடலாம். தோட்டத்திலிருந்த, தனக்கு மிகவும் பிடித்தமான மறைவிடங்களை, அப்ஜூ எங்களுக் குக் காட்டுவான். பாவம், சிறுவனாக இருக்கும்போதே அவன்

மறைந்தான். இந்த மறைவு அவனுடைய பெற்றோர்களுக்குத் தீராத் துயரமாக விளைந்தது. பழமரக் காட்டின் மத்தியில், சாந்தியின் நிறைவுச் சித்திரமாய், வசதியுள்ள, விசாலமான அந்த ஓரடுக்கு வீடு நின்றது. வீட்டில் தேர்ந்தெடுக்கப் பெற்ற நல்ல புத்தகங்கள் இருந்தன. கோவின் சந்தருக்கு, ஆழ்ந்து படிப்பது தான் பொழுதுபோக்கு.'

தத் குடும்பத்தின் பேரில், சில ஆண்டுகளிலேயே, சாவின் நிழல் கவியத் தொடங்கியது. அப்ஜுவின் மரணத்திற்குப் பிறகு, தம்முடைய மற்றைய மக்களையும் இழந்து விடுவோமோ என்று கோவின் சந்தருக்கு ஒரே கவலை, ஓயாத பயம். அவர்கள் தம்மிட மிருந்து சிறிது பிரிந்திருப்பதைக் கூட அவர் சம்மதிக்கவே இல்லை. அவர்களோடு இடையறாது இருக்கும் பொழுதில் ஒவ்வொரு கணத் தையும் அவர் மதித்துப் போற்றினர். அப்ஜு தன்னுடைய பதினைகாம் வயதில் மறைந்தான். இதைப் பற்றி, கோவின் ஆங்கிலத்தில் ஒரு 'ஸானட்'[1] எழுதினர். இந்தப் பாடலை, இங்கிலாந்தில், 'தத் குடும்பத் திரட்டு' வெளியானபோது, ரொமேஷ் சந்தர் தத்துக்கு அடிக்கடி கோவின் படித்துக் காட்டு வது வழக்கம். உடைந்த உள்ளத்தைக் காட்டும் அடிகளில், அந்தப் பாட்டில் அவர் கதறினர் :

'உள்ளம் உடைந்து, தன்னந் தனியனாய்
விடப் பட்டேன்.
அயர்ந்த நாட்களை, அயர்ந்த கைகளால்
எண்ணிக் கொண்டிருக்கிறேன்.'

ஆனல் ஒன்று, பிற்காலத்தில், தமது மற்றைய இரு மக்களையும் இழந்தபோது, எந்த விசுவாசம் அந்த இழப்பைத் தாங்கக் கை கொடுத்ததோ, அதே விசுவாசம் தம் முதல் மகனை இழந்த போதும் அவருக்கு இருந்தது என்பது இந்தப் பாடலில் புலனு கிறது :

'அன்பு என்றும் சாவதில்லை. அன்புக்குப் பிரிவு என்பது
தெரியாது. வேளை வருகிறது, காலைப் பொழுது விரைவில்
புன்னகையோடு வரும். அப்போது, இறைவனுடைய
அச்ச மூட்டும் சிங்காதனத்தின் முன் நிற்பேன். அவனோடு,
என் அன்பு மகனைக் காண்பேன். மீட்கப் பெற்ற உயிர்கள்
இடையறாத பிரார்த்தனையும் வாழ்த்தும் இசைக்கும்.'

இதே நம்பிக்கைதான், வாழ்க்கையிலே கண்ட பல துயரங் களில் தாருவைத் தாங்கியது, அவருடைய எழுத்துக்களில் எங்கும், இந்த மண்ணுலகிலே கழிக்கும் தளர்ச்சி தரும் நாட்களுக்குப்

---

1 **Sonnet.** பதினான்கு அடிகள் கொண்ட ஆங்கிலப் பா வகை.

பின்னர், ஆனந்தமயமான நித்திய வாழ்வு ஒன்றுள்ளது என்ற நம்பிக்கையின் தோய்வைக் காணலாம்.

குழந்தைப் பருவத்தில் இருந்த தம்முடைய மக்களைப் பற்றி, ஆச்சரிய மூட்டும் வருணனை ஒன்று தருகிறார் கோவின் : 'என் மூத்த மகன் மிகுந்த அன்பு உடையவன். எனக்கும் அவனிடந்தான் அதிக அன்பு. பார்ப்பதற்கு வளர்ந்த மனிதனாகத் தோன்றுகிறான், ஆனால் குழந்தை. நெடுங்காலம் அப்படியே இருக்கட்டும். நானே சொல்லிக் கொள்ளக் கூடாது. ஆயினும் அவனைப் போல் அவன் வயதுக்கு உயரமாய் உள்ளவர் யார், களங்க மற்றவரும் வேறு யார்? என் அடுத்த குழந்தை — அவளே என் வீட்டு அழகி — அடக்க முடையவள், அண்ணனைப் போல அவ்வளவு அன்புடையவள் என்று சொல்லமாட்டேன். ஆனால் அவள் முகமும், அடிக்கடி சிவக்கும் அவள் கன்னமும் அவள் இயல்பைக் காட்டுகின்றன. அந்தி நட்சத்திரத்தைப் போல, அமைதியும், தூய்மையும், மென்மையும் உடையவள். கடைக்குட்டியோ நோஞ்சான், கலைந்த கூந்தலும் அவளும், வனதேவதைதான். கூச்சமுடையவள். ஆனாலும் தன் மனம் போனபடிதான் இருப்பாள். கூப்பிடுகிறேனே, கவனிக்கமாட்டாள். பறவையோடோ, பூனையோடோ கொஞ்சிக் குலவிக் கொண்டிருப்பாள். ஆனால் கூர்த்த அறிவுடையவள். இதுதான் எனக்குக் கிடைத்துள்ள என் குடும்பம்.'

1869-ம் ஆண்டு மாரிக் காலத்தில் ஐரோப்பாவுக்குக் கப்பற் பயணம் மேற்கொள்ளு முன், இருந்த நாட்களை தாருவும் அவள் குடும்பமும், கல்கத்தாவில் பெல்காசியா அருகில் இருந்த ராம்பகன் என்ற வீட்டிலும், போக்மாரி என்ற வீட்டிலும் கழித்தார்கள். தாருவுக்கு மிகவும் பிடித்திருந்தது, அவர்களுடைய தோட்ட வீடு. பின்னர் எழுதிய பல கவிதைகளில், இந்த வீட்டை அவள் வருணித்திருக்கிறாள் :

' என்ன ஜாஜ்வல்யமான மரங்கள் ! பார்க்கும் விழிகள் தங்கிக் களிக்கும் இருண்ட சால் மரம். நீண்டு உயர்ந்த தூண்போல் நிமிரும் பாக்கு. அதன் முடியிலே சிறகெனக் கிளைகள். இலேசான இலைகளுடன் அகன்று நிற்கும் புளி. வெளிர்த்த மேனியோடு, இள வாசம் வீசும் கசப்பு வேம்பு. மணப்பெண்போல், அலங்காரம் பூண்டு, சிவப்பு மலர்கள் இரத்தினம் போல் மின்ன நிற்கும் சீமுல மரம் ஆல மரத்து நெடுங் கூடாரம், அதனுள் சேனைகள் கூடத் தங்கலாம். கூடாரத்தின் மேற்கட்டியில் சிறு சிறு கிழிசல், அந்தியின் சௌந்தர்யத்தைக் காட்ட,

'மேலே புல்புல் பாட, தென்றலில் அசைந்தாடும் மூங்கில்கள். மாந்தோப்பின் அடர்ந்த இருண்ட வட்டம். கூச்சலிடும் காக்கைகளின் வீடு. சண்பகம், தென் கடற் பைன் மரம். தோடெனத் தொங்கும் மலர்கள் உடைய நாகசூர் மரம். அனைத்தையும்

பிடித்துத் தொங்கி, இலை வீடு சமைக்கும் காட்டுத் திராட்சை. ஸம்ஸ்க்ருத கவிதைப் புகழ் கண்ட சிரீஷ மரம். அதன் மலர்களை கிராமப் பெண்கள் விரும்பி அணிவார்கள். பூதம்போல் வலிமை உடைய அரசமரம். சடை சடையாகக் கூந்தல் உடைய கருவேல மரம். இவையும் இவற்றைப் போல் ஆயிரம் ஆயிரம் மரங்களும் சிவப்புத் தலைக் கவசமோ, பொன் முடியோ, பச்சைப் பசும் சுட்டியோ சூடி, மாலைப் பொழுதின் பழுப்பு நிழல்களில் அந்த இளைஞன் முன் எழுந்தன.[1]'

இந்தியாவின் அழகிய மரங்களைக் கூர்ந்து கவனித்து அவற்றிடம் அன்பு செலுத்திய ஒருவரே, இவ்வளவு துல்லியமாக அவற்றை வருணிக்க முடியும். தாருவின் புகழ் பெற்ற 'சவுக்க மரம்' என்ற கவிதை, மரங்களுக்கும் அவருக்கும் இருந்த அந்தரங்க ஆன்ம உறவைக் காட்டுகிறது.

'போக்மாரி' வீட்டைப் பற்றி, தாரு எழுதியுள்ள ஸானெட், அவருடைய கவிதைகளிற் சிறந்த ஒரு பாடல். போக்மார் வீட்டின் விசாலமான தோட்டத்தில், தத் குடுமபக் குழந்தைகள் நண்பர்களோடும், உறவுக் குழந்தைகளோடும் விளையாடி மகிழ்ந்ததைக் கற்பனை செய்து பார்க்க முடிகிறது :

'பச்சை இலைக் கடல் ஒன்று
எங்கள் தோட்டத்தைச் சுற்றி வளைக்கிறது.
ஒரே மாதிரியான அலுப்புத் தட்டும்
பச்சையன்று.
பல வண்ணங்கள் ஒன்றையொன்று தூக்கிக் காட்டுவதாய்
அங்கே நிறைந்தன............'

'புளிய மரத்தின் நளினமான இளம் பச்சை,
மாந்தோப்பின் ஆழ்ந்த பசுமை.
சாம்பல் வண்ணத் தூண்களைப் போல
இடை இடையே எழுந்த கமுகு.
நிச்சலமான குளங்களின் கரையில்
சிவந்து, சிவந்து,
எக்காள ஒலிபோல் திடுக்கிடச் செய்யும்
சிவப்பைக் காட்டி
குனிந்து, கவிந்த சீமுல் மரங்கள்.
ஆனால், இவற்றையெல்லாம்
அழகில் விஞ்சின,
கிழக்கே அடர்ந்த மூங்கில் அணிகள்.
அவற்றூடே உள்ள இடைவெளியில்
நிலா எட்டிப் பார்த்தது.

---

[1] நாட்டுப் பாடல்கள், பக்கம் 79—80.

வெண் தாமரை வெள்ளிக் கிண்ணமாக மாறியது.
இங்கே அழகு மதுவைப் பருகி மயங்கியே விழலாம்.
அல்லது, வியப்புடன்,
இந்த ஆதி சொர்க்கத்தை
பார்த்து, பார்த்துப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.' [1]

போக்மாரி தோட்ட வீடு, தாரு மறைந்த பிறகும், பலருடைய கவனத்தைக் கவர்ந்தது. அதைக் காண, வேற்று நாட்டவர் பலர் விரும்பினார்கள். அப்படி விரும்பி வந்தவர்களில் ஒருவர், தாருவைப் பாராட்டியவருள் ஒருவர், மிஸ் (செல்வி) எலிசபெத் எஸ். காட்டன் என்பவர். 1907-ம் டிசம்பர் மாதத்தில், தாரு மறைந்து முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் கல்கத்தாவுக்கு வந்தார். ஹரிஹர தாஸ் என்பவருக்குக் கீழ்க் கண்ட கடிதம் எழுதினார் :

அன்பார்ந்த ஐயா,

பல ஆண்டுகளாக, தாருவின் மேதா விலாசத்தோடு தொடர்புடைய புனிதத் தலமாகவே கல்கத்தாவை எண்ணி வந்திருக்கிறேன். முடியுமானால், அவர் வாழ்ந்த வீட்டைக் காணவே வந்துள்ளேன். அங்கிருந்துதானே, அவருடைய மேதை, விலை மதிப்பதற்கரிய கவிதைக் கனிகளை, இவ்வளவு தானா, இன்னும் இல்லையா என்று துயருறும் உலகத்திற்கு விட்டுச் சென்றது.

எட்மன்ட் காஸ் குறிப்பிடுகிறாரே, ஸம்ஸ்க்ருத இலக்கியத்தின் ஆழங்காணா மாயங்களுக்குள் தாரு அழுந்தியதாக, அந்தத் தோட்ட வீட்டைக் காண விரும்புகிறேன்' [2]

பிறந்த நாட்டில் கழிந்த தாருவின் இந்த ஆதர்சக் குழந்தைப் பருவம், அன்னிய நாடுகளில் முதிர்வதற்குக் காத்திருந்தது. தம்முடைய குழந்தைகளுக்கு பிற நாட்டுப் பயணமும், கல்வியும் தரக் கூடிய வாய்ப்புக்களை அளிக்க வேண்டும் என்று கோவின் உறுதி பூண்டிருந்தார். தாருவும் அவள் சகோதரியுமே, முதன் முதலிற் கருங்கடலைத் தாண்டிய வங்காளிப் பெண்கள். அவர்களுடைய நண்பரான திருமதி பார்ட்டன் என்ற பாதிரி எழுதினார் :

'அவர்கள் (தாருவின் தாய் தந்தையர்) தம்முடைய இரு புத்திசாலிப் பெண்களுக்கும், முடிந்த அளவு சிறந்த கல்வியைத் தர வேண்டும் என்று உறுதியாக எண்ணினார்கள். எங்கள் துணையை வாய்ப்பாகப் பயன் படுத்திக் கொண்டு, 1869 மாரிக் காலத்தில், வீடு திரும்பிய எங்களோடு ஐரோப்பாவிற்கு வந்தார்கள். என் கணவர் கூறியதை ஏற்று, எங்களோடு நைஸ் (Nice) நகருக்கு வந்து,

---

1 நாட்டுப் பாடல்கள், பக்கம் 135.

2 'தாரு தத்தின் வாழ்க்கையும் கடிதங்களும்.' அனுபந்தம் II, பக்கம் 356.

(அங்கே என்னுடைய பெற்றோர் அப்போது வசித்து வந்தார்கள்) மூன்று, நான்கு மாதங்கள் தங்கினார்கள் என்பது என் ஞாபகம். அங்கே வசித்து வந்த பலருக்கு, தத் குடும்பத்தை அறிமுகம் செய்து வைத்தோம். அவர்கள் எல்லோரும் விரைவிலேயே பிரஞ்சு மொழியைக் கற்றுக் கொண்டார்கள்.'

தாருவுக்கும், அருவுக்கும் பிரஞ்சு நாட்டின்மேல் ஒரே மோகம், அவ்வளவு மதிப்பு. இந்திய நாட்டின்பேரில் அவர்களுக்கு இருந்த அன்புக்குப் பிறகு, அவர்கள் மனத்தை மிகவும் கவர்ந்தது பிரான்ஸ் தேசமே. பிரஞ்சு மக்களும், தாருவைத் தங்கள் நாட்டினராகவே, பிற்காலத்தில் கருதினார்கள். இளம் பிராயத்திலேயே (தாருவுக்கு அப்போது பதின்மூன்று வயது) பிரஞ்சு மண்ணை மிதித்த தாரு, மிக விரைவில், இலகுவாக, பிரஞ்சு மொழியைக் கற்றாள். வாழ் நாள் முழுவதும் பிரஞ்சு இலக்கியத்தை ஆரப் பருகினாள். பிரான்ஸ் தேசத்தை மிக மிக மதித்துப் பாராட்டினாள்.

5. பிரான்ஸ் நாடு

தத் குடும்பத்தினர் மர்ஸேல்ஸ் துறைமுகத்தில் இறங்கி, நைஸ் நகரத்திற்குச் சென்றார்கள். அங்கே 1870 வசந்த காலம் வரையில் தங்கினார்கள். தாருவும், அருவும் பள்ளி ஒன்றிற் சேர்ந்து ஆர்வத் தோடு பிரஞ்சு மொழி பயின்று, விரைவில் அம்மொழியில் வல்லுனர்கள் ஆனார்கள். இவ்விரு சகோதரிகளும் படித்த பள்ளி இது ஒன்றுதான். கோவினுக்குப் பாடம் சொல்லி வந்த திருமதி ஷ்வாயே (Madame Schwayer) என்பவரிடம் தீவிரமாகப் பிரஞ்சு பயில்வதற்காக, இந்தப் பள்ளியிலிருந்து விலகினார்கள். தாருவும், அருவும் இப்போது பிரஞ்சு இலக்கியத்தில் ஆழத் தலைப்பட்டார் கள். பிரஞ்சு புரட்சி, தாருவை வெகுவாகக் கவர்ந்தது. அக்கால பிரஞ்சு இலக்கியத்தில் எங்கும், சுதந்திர ஆர்வம் விஞ்சி நின்றது. ஜார்ஜ் ஸான்ட் என்பவருடைய நாவல்கள், பெண் விடுதலையைப் பற்றிப் பேசிய காரணத்தால், இந்தியாவுக்கு அப்போது தேவை யாய் இருந்த ஒன்றை வழங்கின. பிரான்ஸ் நாட்டவளாக ஆக வேண்டும் என்றுகூடத் தாரு விரும்பினார். அவருக்கு பிரான்ஸ் தேசத்தில் அவ்வளவு ஈடுபாடு. தமது தினசரிக் குறிப்பில் தாரு எழுதினார் : ' நான் அசையா உறுதி படைத்த பிரஞ்சு மகள்.'

நைஸ் நகரில், ஹெல்வெடிக் ஹோட்டலில் அவர்கள் தங்கினார்கள். இங்கிருந்து, கல்கத்தாவில் இருந்த தமது ஒன்றுவிட்ட சோதரனை அருண் சந்திர தத் என்பவருக்கு, தாரு எழுதினார்: 'கடிதம் வந்தபோது, ஹோட்டல் பொது அறையில் நாங்கள் உணவருந்திக் கொண்டிருந்தோம். எங்களுக்குப் பசியை வளர்க்க, ஹார்ப், வயலின் என்ற வாத்தியங்களில் இரண்டு இசைவாணர் வாசித்துக் கொண்டிருந்தார்கள். இது பிரஞ்சு வழக்கம். 'கார்னிவல்' என்ற விழாவைப் பார்க்க நாங்கள் சென்றோம். அந்த விழாவில், மக்கள், உடம்பிலே வண்ணம் பூசிக் கொண்டு, முக மூடி அணிந்து, ஒருவர்மேல் ஒருவர் மிட்டாய்களை வீசி எறிந்து களித்தார்கள். இந்த விழா 'லென்ட் நாட்கள்'[1] வருவதற்குமுன் நடைபெறுகிறது. கத்தோலிக்கர்களானபடியால், லென்ட் நாட்களை, மிகுந்த கட்டுப்பாட்டோடு நோன்பாகக் கழிக்க வேண்டியிருக்கும் என்று கருதி, நோன்பு வருவதற்குச் சற்று முந்தி, இந்த விழாவைக் கொண்டாடிக் குதூகலப்படுகிறார்கள்.'

கார்னிவல் விழாவைக் காண, சேறும் சகதியுமாய் இருந்த சாலைகளில் அவர்கள் நடந்து சென்றார்கள். ஆடையெல்லாம் ஒரே சேறாகிவிட்டது. ஒரு வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டு, அவர்கள் செல்ல நேர்ந்தது. வண்டி அவ்வளவு சௌகரியமாக இல்லை. ஆனால் கல்கத்தாவில் வாடகை வண்டிகளிற் சென்று பழகியவர்கள், 'இங்கே உள்ள வண்டிகள் கல்கத்தாவில் உள்ள சிறந்த வண்டிகளுக்கு இணையானவை' என்று கருதினார்கள். திரு எலியட் என்ற நண்பர் ஒருவரோடு, தாருவும், அருவும் விழாக் காணப் போனார்கள். எலியட், திருமதி பார்ட்டனுடைய சகோதரர், பஞ்சாபில் ஐ.சி.எஸ். அதிகாரியாய் இருந்தார். எலியட்டோடு, அருவும் தாருவும் ஒரு மேடைமீதேறி, அங்கிருந்த நாற்காலிகளில் நின்றுகொண்டு, விழாக் காட்சிகளையெல்லாம் கண்டார்கள். தாருவின் பெற்றோர் வண்டியிலேயே தங்கிவிட்டார்கள்.

பிரான்ஸில், அவர்களுடைய நண்பர்களில் ஒருவர், — ஒரு டாக்டருடைய மனைவி, — அரு, தாரு, இவர்களை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது — இருவரையும் 'ஆங்கிலத்தில் பேச வேண்டாம், பிரஞ்சிலேயே பேசுங்கள்' என்று வற்புறுத்தினார். அப்போதுதான், பிரஞ்சு மொழிப் பயிற்சி எவ்வளவு கூடுமோ அவ்வளவு கிட்டும் என்பது அவருடைய எண்ணம். அருவும், தாருவும் எத்தனை பிசகுகள் போட்டாலும், டாக்டர் மனைவி 'பலே, பலே' என்றுதான் சொல்லுவாராம்.

---

[1] கிறிஸ்தவர்கள் நோன்பிருக்கும் நாட்கள்.

அந்தக் காலத்தில், இங்கிலாந்தைவிட பிரான்ஸ் நாடே பலவகையிலும் அதிகமாகப் பயன் தருவதற்கு வாய்ப்புப் பெற்றிருந்தது. பிரஞ்சு மக்கள் வாழ்க்கையை, தாரு ஆராய்ந்து பார்த்தார். பிரஞ்சு இளம் பெண்களுடைய குணவிலாசமும், ஒழுக்க முறையும் தாருவின் மனத்தில் ஆழ்ந்து பதிந்தன. நவீன வங்காளப் பெண்கள், பழைய குடும்பங்களில், எந்தக் கட்டுப்பாட்டோடு வளர்ந்தார்களோ, அதே நிலையைத்தான் தாரு பிரான்ஸிலும் கண்டார். இதனால், தாம் எழுதிய நாவல் ஒன்றின் தலைவியாக ஒரு பிரஞ்சுப் பெண்ணையே கற்பனையால் அமைத்துக் கொண்டார். 'செல்வி டி. அர்வர்ஸின் தினசரிக் குறிப்பு' (The Journal de mlle D'Arvers) என்ற நாவலில் வரும் மார்கரீதே (Maurguerite) என்ற பாத்திரம், நைஸ்நகரத்திலே, தாரு சந்தித்த பிரஞ்சுப் பெண்களை முன்மாதிரியாகக் கொண்டு, அருமையாக வரையப் பெற்ற சித்திரம். அந்தப் பாத்திரத்தைத் தாருவாகவே எண்ணவும் இடமிருக்கிறது. இங்கிலாந்திலேதான், நாவலில் வருணிக்கப் பெறும் வீடு இருந்தபோதிலும், பிரஞ்சு வாழ்க்கையை நாவலின் பொருளாகவும், பிரஞ்சுப் பெண்ணை அதன் தலைவியாகவும், தாரு தேர்ந்தெடுத்தது, பிரஞ்சு மக்களுடைய குடும்ப வாழ்க்கையில் தாரு எவ்வளவு ஒன்றி இருந்தார் என்பதையே காட்டுகிறது.

பிரஞ்சு இலக்கியத்தோடு தாருவுக்கு இருந்த தொடர்பினால் மிகவும் கவரப்பெற்ற ஜேம்ஸ் தார்ம்ஸ்டெட்டர் (M. James Darmesteter) என்பவர் சொல்கிறார் : 'பிரான்ஸிலே தாரு வசித்த அந்தக் குறுகிய காலத்தைப் பற்றி இன்னும் விவரமான செய்திகள் கிடைத்தால் வரவேற்கவே தோன்றுகிறது. தாருவின் கருத்தையும், கற்பனையையும், பிரான்ஸிலே கழித்த நாட்கள் ஆச்சரியமான முறையில் உருவாக்கின. பிரஞ்சு மொழி அவருக்கு மிகவும் பிடித்த மொழி ஆயிற்று. பிரான்ஸ் நாடு அவர் தேர்ந்து விரும்பிய நாடாயிற்று'.[2]

நைஸ் நகரில், 'ஆங்கில உலாவு பாதை' என்ற சாலையில், தத் குடும்பத்தினர் உலவச் சென்றார்கள். வண்ணம் நிறைந்த அந்த மெடிட்டரேனியன் நகரக் காட்சியைக் கண்டு, அதை மிகவும் விரும்பினார்கள். நீலக்கடல், பளபளத்த போகன் வில்லாக் கொடிகளும் மலர்களும், சிவப்பு ஓடு வேயப் பெற்று, புது வண்ணம் தீட்டப் பெற்ற சிறு பங்களாக்கள், படிப்படியாக அமைந்த குன்று மேடுகளை ஒட்டி அணைத்து நின்ற காட்சி, திராட்சைத் தோட்டங்கள், பழமரத் தோப்புகள், விசாலமான சாலைகள்—இவையெல்லாம் அவ்விரு கவிதை உள்ளங்களை எவ்வாறு விம்மியெழச் செய்தன

---

1 'ஆங்கில இலக்கியக் கட்டுரைகள்' (Essais de Literature Analaise) பக்கம் 271

என்று நாம் கற்பனை செய்து கொள்ளலாம். கான்ஸ், மொனுக்கோ இவ்விரு இடங்களும்—இவற்றைப் பார்க்கச் சென்றார்கள் என்பது தெரிகிறது—அவர்களைப் பரவசப் படுத்தின. பிரஞ்சு வாழ்க்கை, கலாசாரம் இவற்றை அவர்கள் ஆரப் பருகினர்கள். ஆனால் தென் பிரான்ஸின் இதமான தட்ப வெப்ப நிலைகூட அருவுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. தாருவைவிட, அவள் அவ்வளவு பூஞ்சையாக இருந்தாள். அவளுக்கு உடம்பு சரியில்லாமற் போயிற்று. பிறகு குணமாயிற்று. மறுபடியும் நோய் கண்டது. பிரான்ஸை விட்டுப் போக வேண்டும் என்பது தெளிவாயிற்று. அதனல் என்ன? பிரான்ஸில் கழித்த சில மாதங்களின் அனுபவம், அரு, தாரு இவர்கள் நெஞ்சில் ஆழப் பதிந்தது.

பாரிஸ் வழியாக, தம் குடும்பத்தை இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்வதென, கோவின் தீர்மானித்தார். பிரான்ஸே அருவுக்கு ஒத்துக் கொள்ள வில்லையே, இன்னும் குளிரும் ஈரமும் மிகுந்த இங்கிலாந்து அவளுக்கு எப்படி சரிப்பட்டு வரும் என்பதை கோவின் எண்ணிப் பாராதது வியப்பாகவே உள்ளது. தங்கள் பழைய நண்பர் திருமதி பார்ட்டனேடு, தத் குடும்பத்தினர் பயண மானர்கள். 1870-ம் ஆண்டு வசந்த காலத்தில் இங்கிலாந்தை அடைந்தார்கள்.

தாரு, அரு, இவர்களைப் பற்றி திருமதி பார்ட்டன் எழுது கிறார்: 'அவர்களுக்குக் கலையிலும் சரித்திரத்திலும் இருந்த அறிவு அபாரமானது. அவர்கள் தந்தையிடமிருந்தே இவ்வறிவைப் பெற்றார்கள். எனக்கு நினைவு வருகிறது: ஒரு நாள் தத் குடும்பத்தினரோடு, நைஸ் நகரில், கானன் சில்டர் என்பவர் வீட்டுக்குச் சென்றோம். தத் குடும்பத்தினரை அறிமுகப்படுத்திவிட்டுப் போவதாக இருந்தோம். மேசைமீது வெண்கலச் சிலையொன்று இருந்தது. 'சாகும் கிளேடியேட்டர்' [1] என்ற சிற்பத்தின் பிரதி அது. அதை திரு. பார்ட்டனே, திரு. தத்தோ (யாரென்று இப்போது ஞாபக மில்லை) தொட்டு காட்டி 'இதைத் தெரிகிறதா?' என்று அருவையும் தாருவையும் பார்த்துக் கேட்டார்கள். துளிகூடத் தயங்காமல், இரு பெண்களும் ஒரே மூச்சில் பதில் அளித்தார்கள்: 'இது சாகும் கிளேடியேட்டராகத்தான் இருக்கும்.'

கோவின் சந்ததரை பாரிஸ் நகரம் மிகவும் கவர்ந்தது. 'யார் என்ன மறுத்தாலும் என்ன, பாரிஸ், உலகின் தலைநகரந்தான். அழகிலும், வசதியிலும். தட்ப வெப்ப நிலையிலும், நகரங்கள்

---

1 பண்டைய ரோமப் பேரரசில், கிளேடியேட்டர்கள் என்ற அடிமைகளைப் பணக்காரர்களும், மேல் வகுப்பினரும் வைத்திருந்தார்கள். கிளேடியேட்டர்களை விளையாட்டரங்கில் மோதவிட்டுச் சாகும் வரையில் ஒருவரோடொருவர் சண்டைபோடச் செய்வது ரோமாபுரி வழக்கம்.

அனைத்திலும் சிறந்தது பாரிஸ் நகரமே' என்று எண்ணிய அவர், அந்நகரில் தங்கத் தீர்மானித்தார். ஆனால் தங்கவில்லை. 'நீண்ட காலம் தங்கிய பிறகு, இங்கிலாந்துக்குப் புறப்பட்டார்கள்' என்று ஹரிஹர தாஸ் கூறிய போதிலும், பிரான்ஸில் நான்கு மாதங்களே அவர்கள் தங்கினார்கள். அந் நான்கு மாதங்களிற் பெரும் பகுதி நைஸ் நகரிலே கழிந்தது.

முடிவில், பொலோன் மார்க்கமாக இங்கிலாந்துக்குப் பயணமானார்கள். பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலே உள்ள 'பிரிட்டிஷ் சானல்' என்ற கடற்பகுதியை அவர்கள் தாண்டியதைப் பற்றி, சுவையான ஒரு கட்டுரை 'வங்காள மாகஸின்' என்ற பத்திரிகையின் 1874 பிப்ரவரி இதழில் வெளிவந்துள்ளது. அந்தக் கட்டுரையில் கோவின் சொல்கிறார்: 'இந்தியாவிலிருந்து மார்ஸேல்ஸுக்கு நாங்கள் பி அண்ட் ஓ கம்பெனியார் கப்பலில் சென்றோம். அக்கப்பலில், உணவு, தங்கும் இடம், உபசாரம் எல்லாவகையிலும் நாங்கள் எல்லா வசதிகளையும் பெற்றோம். மொகலாயப் பேரரசர் அல்லது எகிப்து வைஸ்ராய் போல நாங்கள் நடத்தப் பெற்றோம்.' இந்தப் பயணத்தை, பிரிட்டிஷ் சானலைக் கடந்த பயணத்தோடு கோவின் ஒப்பிட்டுப் பார்க்கிறார். சானலைக் கடந்த கப்பற் பயணம் மிக மிக அசௌகரியமாய் இருந்தது என்று அவர் கருதினார். தாக்கரே[1] வருணித்துள்ள நகரமாயிற்றே, வினோதமான பழங்காலத்து நகரமாய் இருக்கும், அதன் கடைத் தெருவில் சுற்றி, ஏதாவது அருமையான பொருள்கள் வாங்கலாம் என்றெல்லாம் பொலோன் நகரைப் பற்றி, கோவின் எண்ணி இருந்தார். ஆனால், உண்மையில் அது, மாலுமிகள் தங்குவதற்கென்றே கட்டப் பெற்ற சிறு வீடுகள் நிறைந்த மோசமான சிற்றூராகக் கோவினுக்குத் தோன்றியது. வெய்யில் அடித்து, வானமும் தெளிந்திருந்தபடியால், பொலோன் நகரத்தில், காலத்தை வீணாக்காமல், சானலைக் கடந்து இங்கிலாந்து செல்லத் தீர்மானித்தார்கள். கடந்து, ஃபோக் ஸ்டோனை அடைந்ததும், அங்கே தங்காமல், லண்டன் நகருக்குச் செல்லும் ரயிலைப் பிடித்தார்கள்.

சில மாதங்கள்தான் பிரான்ஸில் தத் குடும்பத்தினர் தங்கினார்கள் என்றாலும், அந் நாட்டில் தாருவுக்கு ஏற்பட்ட ஈடுபாடு, பிரஞ்சு மொழி, பிரான்ஸின் இயற்கை எழில், இவற்றின் எல்லைக்குள் மட்டும் அடைபடவில்லை. செல்வி கிளாரிஸ்ஸா பாதர் (Mll Clarisse Bader) இது பற்றிக் குறிப்பிடுகிறார்: 'அவள் (தாரு) எங்கள் நாட்டை நேசித்தாள். அந்த அன்பு எங்கள் நாட்டு வேதனையிலும் பங்கு கொண்டது. பிரான்ஸுக்கும் பிரஷ்யாவுக்கும்

[1] வில்லியம் மேக்பீஸ் தாக்கரே, 19-ம் நூற்றாண்டு ஆங்கில நாவலாசிரியர்.

நடந்த போரில்,[1] பிரான்ஸிடம் தாரு மிகுந்த பரிவு காட்டினர். தாருவுக்கு அப்போது பதினன்கு வயதுதான் என்றாலும் பிரஞ்சு அரசியலில் அவர் தீவிர கவனம் செலுத்தினர். பிஸ்மார்க்கின் 'இரும்பு இரத்த'க் கொள்கைக்கு அவர் எதிராகவே இருந்ததாகத் தோன்றியது. ஒருபோதும் பிஸ்மார்க்கைப் பெயர் சொல்லி அவர் குறிப்பிடவில்லையென்றாலும், பிரான்ஸின் தலைவிதியை எண்ணி அவர் புழுங்கினர்.'

பிரான்ஸுக்கும் பிரஷ்யாவுக்கும் போர் மூண்டதும், தாரு எழுதினர் : 'என் உள்ளம் முழுவதும் பிரான்ஸ் பக்கமே உள்ளது.' பிரஞ்சு சரித்திரத்தில் தாருவுக்கு இருந்த ஈடுபாடு அவ்வளவு அதிகம். அதனல், 1851-ம் ஆண்டில் பிரஞ்சு சட்ட சபையில், விக்டர் ஹ்யூகோ (Victor Hugo) நிகழ்த்திய உரையொன்றை மொழிபெயர்த்து, 'இன்றைய வரலாற்றில் ஒரு காட்சி' என்ற தலைப்பில், 'வங்காள மாகஸின்' என்ற பத்திரிகையில், வெளியிட்டார். அந்த உரையில், பிரஞ்சு அரசியல் சட்டத்தில் சில மாறுதல்களைக் கொணர முனைந்த முயற்சியை, ஹ்யுகோ வன்மையாகக் கண்டித்தார். இம்மாறுதல்கள், லூயி நெப்போலியனை பிரான்ஸ் தேசத்தில் அரசனுகச் செய்துவிடும் என்று அவர் அஞ்சினர். விக்டர் ஹ்யூகோ தீவிரக் குடியரசுவாதி. பேரரசன் ஒருவன் கீழ் அரசாங்கம் நடைபெறுவதை அவர் கட்டோடு வெறுத்தார். விக்டர் ஹ்யூகோவின் கருத்துக்களை, தாரு ஆதரித்தார் என்றே தோன்றுகிறது. பிரஷ்ய அரசோடு பிரான்ஸ் போர் புரியத் திட்டமிடுவதை எதிர்த்து, 1870-ம் ஆண்டில் தியர் (Thier) என்பவர் ஆற்றிய உரையொன்றின் மொழிபெயர்ப்பும், 'வங்காள மாகஸினி'ல் வெளிவந்தது. அன்னிய நாட்டைச் சேர்ந்த தாரு, பிரஞ்சு சரித்திரத்தில் இவ்வளவு ஆர்வம் காட்டியது, பிரான்ஸு நாட்டோடு அவர் எவ்வளவு ஒன்றிப் போயிருந்தார் என்பதையே காட்டுகிறது.

1871 ஜனவரி 29, 30 தேதிகளில் தினசரிக் குறிப்பில் தாரு எழுதியுள்ளது, ஒரு பிரஞ்சு தேச பக்தருடைய நாட்டுப் பற்றும் பிரஞ்சு நாட்டிடம் தாருவுக்கு இருந்த அன்பும் ஏறக்குறைய ஒரே மாதிரி இருந்தன என்பதைக் காட்டுகிறது. அவர் எழுதுகிறர் : 'பாரிஸ் நகரில் சில நாட்களே தங்கி இருந்தோம். ஆனலும் எவ்வளவு அழகாக இருந்தது! என்ன தெருக்கள்! எவ்வளவு பெருமை வாய்ந்த படைகள்! நகரங்களில் முதல் நகரமாக விளங்கிய அது, இப்போது எவ்வளவு வேதனை நிறைந்த இடமாகி விட்டது!' சமயத்திற்கு மாருக பிரான்ஸ் நடந்து கொண்டதால்,

---

[1] இந்தப் போரில், பிஸ்மார்க் என்ற பிரஷ்யத் தலைவர் பிரான்ஸைத் தலைகுனிய வைத்தார்.

கடவுள் விதித்த தண்டனையே அந்நாட்டின் வீழ்ச்சி என்று தாரு நினைத்தார். 'பிரான்ஸ் நாடே! நீ எவ்வளவு தாழ்ந்து விட்டாய்! இந்த அவமானத்திற்குப் பிறகாவது, கடந்த சில நாட்களில் இருந்ததைவிடக் கடவுள் நம்பிக்கையிலும், அவர் பணியிலும், நீ சிறந்து நிற்பாயாக! ஏழை பிரான்ஸ் நாடே, என் இதயம் உன்னை எண்ணி இரத்தம் சிந்துகிறது.'

1870-ம் ஆண்டில், பதினைந்தே வயதான தமது இளம் பிராயத்தில், தாரு எழுதிய கவிதை ஒன்று, அவருடைய முதிர்வுக்கும், பிரஞ்சு நாட்டின்மேல் அவருக்கிருந்த அன்புக்கும் சான்றாக உள்ளது:

பிரான்ஸ்
1870

சாகவில்லை, இல்லை, இல்லை,
அவள்[1] ஒருநாளும் சாகமுடியாது.
மூர்ச்சைப் போட்டிருக்கிறாள்,
அவ்வளவுதான், இரத்தம் இழந்த காரணத்தால்.
அவளைப் பார்த்தும் பாராமற் போகிறாள் இங்கிலாந்து,
லெவைட் ஒருவனைப் போல.
உதவிசெய்ய வா, நல்ல சமேரியா[2].
ஐயோ, உதவிசெய்ய ஒருவரையும் காணோம்,
இந்த இரத்தப் பெருக்கைத்
தடுத்து நிறுத்தப்போவது யாரோ?
அவளுடைய கூந்தலை ஒதுக்கி விடு,
அது அவள் கண்ணை மறைக்கிறது.
முகத்திலே தண்ணென்று நீரை அடி.
தன் இரத்தத்திலேயே முழுகி
பேச்சு மூச்சின்றிக் கிடக்கிறாள்.
அவளுக்குத் திராட்சை ரசம் தாராளமாகக் கொடு.
இதைச் செய்ய ஒருவருமில்லை,
ஒருவரும் இதைக் காதிற்கூட வாங்கவில்லை.
மனித அணியின் முதலில் நிற்பவளே,
நீயா இப்படி என்றென்றும் மயங்கி விழுந்து கிடப்பது?
சிந்தனை, சுதந்திரம், சத்தியம்,
இவை அவிந்து போனால்

1 பிரான்ஸ் நாடு குறிக்கப் பெறுகிறது.

2 கள்ளர்களால் அடியுண்டு வழியிலே கிடந்த ஒருவனை லெவைட் வகுப்பைச் சேர்ந்தவன் பார்த்தும் பாராமற் போனான். சமேரியன் ஒருவன் அவனுக்கு உதவி செய்தான். இது கிறிஸ்தவ வேதத்தில் வரும் கதை.

இருட்டில் அவிந்து மறுபடியும் உழல்வதைத் தவிர
எங்களுக்கு வருங்காலம் ஏது, உய்வேது ?
இல்லை, அவள் அசைகிருள்.
அவள் விழியிலே தீ மூள்கிறது.
உடைந்த வாள்தான், ஆனல் எச்சரிக்கை,
எச்சரிக்கையாய் இருங்கள்.
ஒரு நாழிகை ஏதோ தவறிப் போனதைப் பெரிதுபடுத்தி
பிரான்ஸைச் சுற்றி நின்று
அடில்லாவின்[1] களியாட்டக் கும்பலாக,
கெக்கலி கொட்டத் துணிவீர்களா ?
பார், பார், இதோ எழுந்து நிற்கிருள்.
இப்போதும் போருக்கு ஆயத்தமாக,
மறுபடியும் வலிமையோடு எழுந்துவிட்டாள்.
உலகெலாம் ஒளி வீசி விளங்கும்
அவள் நெற்றி நட்சத்திரம்
மறுபடியும் மின்னுகிறது.
நாடுகளே, வணங்குங்கள், தலை வணங்குங்கள்.
அவளே உங்களைத் தலைமைதாங்கி
அழைத்துச் செல்லட்டும்.'

6. இங்கிலாந்து

லண்டன் மாநகரில், சாரிங் கிராஸ் ஹோட்டலில், தத் குடும்பத்தினர் முதலில் தங்கினார்கள். 1869-ம் ஆண்டில், தமது ஐ.ஸி.எஸ். பரீட்சைக்காக இங்கிலாந்து வந்திருந்த ரொமேஷ் சந்திர தத், கிராஸ்வனர் ஹோட்டலில், அவர்களுக்கு முதலில் அறைகள் பிடித்து வைத்திருந்ததாகச் சொல்கிறார். பிறகு பிராம்ப்டன் பகுதியில் தனி வீடொன்றை (9. சிட்னி பிளேஸ், அன்ஸ்லோ ஸ்கொயர்) அமர்த்திக் கொண்டார்கள். இங்கே, அருவும் தாருவும் பிரஞ்சு கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் வேலையைத் தொடங்கினார்கள். ரொமேஷ் சந்திர தத் கூறுகிறார் : ' அடிக்கடி

[1] அடில்லா என்பவன் மத்திய ஆசியப் படைகளோடு, ஐரோப்பாவின் தெற்கு நாகரிக நாடுகளிற் புகுந்து அட்டகாசம் செய்தவன்.

அந்த வீட்டுக்கு அவர்களைச் சந்திக்கச் சென்றேன் என்றும், என்னுடைய சகோதரிகள் முறையான தாருவோடும், அருவோடும் இன்பகரமாகப் பொழுது போக்கினேன் என்றும் சொல்லத் தேவையில்லை. கோவின் சந்தரும், அவருடைய குடும்பத்தினரும், வழக்கம் போல், இலக்கிய விசாரத்திலும், சமயப் படிப்பிலும், நேரம் முழுவதும் முனைந்திருந்தார்கள். விசுவாசமுள்ள பல கிறிஸ்தவர்களோடு பழக்கம் ஏற்படுத்திக் கொண்டார்கள். " தத் குடும்பத் திரட்டு" வெளிவந்ததும், கோவின் எனக்கு ஒரு பிரதி தந்தார். தந்ததோடு, அந்நூலில், தம்முடைய கவிதைகளைச் சுட்டிக்காட்டி, தம்முடைய மகனைப் பற்றித் தாம் எழுதியிருந்த பாடலை, கண்ணீர் மல்க, படித்தும் காட்டினார்.'

தாருவின் இன்னொரு ஒன்றுவிட்ட சோதரனான அருண் சந்திர தத், அவருடைய முக்கிய நண்பராக இருந்தார். ஐரோப்பாவிலிருக்கும் அவருக்கு அடிக்கடி தாரு கடிதம் எழுதுவது வழக்கம், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கோர்ப்பஸ் கிருஸ்டி கல்லூரியில் அவர் பயின்றார். பிறகு இங்கிலாந்திலேயே தங்கி, ஆங்கிலப் பெண்ணொருத்தியை மணந்துகொண்டு, டாக்டராகப் பணியாற்றி, நன்மதிப்பும் பெற்றார்.

அருவும், தாருவும், லண்டனில் சந்தோஷமாகவே இருந்தனர். பிரபலமான பலரை அறிமுகம் செய்து கொண்டார்கள். ஸர் ஜார்ஜ் மக்ஃபாரன் அவர்களில் ஒருவர். அவருடைய மனைவி, அருவுக்கும், தாருவுக்கும் வாய்ப்பாட்டு கற்றுத்தந்தார். இன்னொரு முக்கியஸ்தர் ஸர் பார்ட்டில் ஃப்ரேரே என்பவர். அவர் 1862-ம் ஆண்டிலிருந்து, 1867-ம் ஆண்டு வரை, வங்காள கவர்னராய் இருந்தவர். இப்படிப் பல நண்பர்கள். ஃப்ரேரே குடும்பத்தோடு விம்பில்டன்னில் பல நாட்கள் இன்பமாகக் கழித்ததாகத் தாரு சொல்கிறார். இன்னொரு நண்பர் செவாலியர் டி சாட்டலேன் என்பவர். இவர், ஷேக்ஸ்பியரை பிரஞ்சு மொழியில் பெயர்த்த பிரபலமானவர்களில் ஒருவர் : விக்டர் ஹ்யூகோவின் நண்பர்.

அருவே மூத்தவள். ஆனால் சிந்தனையில் அவள் இளையவளாகவே தோன்றினாள், கருதப் பெற்றாள். எந்த விஷயத்திலும், படிப்பிலுங்கூட, தாருவே முன்னின்று அருவை அழைத்துச் செல்வார். இச் சகோதரிகளிடையே இருந்த அன்பும் சகஜபாவமும் பூரணமானவை. ஹரிஹரதாஸ் கீழ்க்கண்ட உரையாடலைக் குறிப்பிடுகிறார் :

ஜி. ஸி. தத் : ' என்ன அரு. எல். பிரபுவை (1864-67 ஆண்டுகளில் இந்தியாவில் ராஜப்பிரதிநிதியாக இருந்த லாரென்ஸ் பிரபு) அவர் கல்கத்தா வந்தபோது சந்திக்க வேண்டும் என்று விரும்பினாயே, இதோ நம்முடைய விருந்தினராக வந்திருக்கிறார்.'

எல். பிரபு : ' என்னைப் பார்க்க விரும்பினாயா ? நல்லது, பார். என்ன பார்க்கிறாய் ? வயதாகி, உடைந்து, தளர்ந்துபோன இந்தக் கிழவனைத்தானே ? கையிலே அது என்ன புத்தகம் ?'

அரு : ' அதுவா ? மிஸ் முலாக் (Miss Mulock) எழுதிய '' ஹாலிஃபாக்ஸ் பிரபு '' என்ற நாவல்.'

எல் பிரபு : ' அப்படியா ? நீ நாவல்கள் அதிகமாகப் படிக்கக் கூடாது, தெரியுமா ? சரித்திர நூல்கள் படிக்க வேண்டும்.'

அரு ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவளுக்காக, தாரு பதில் அளித்தார் : ' எங்களுக்கு நாவல்கள் என்றால் பிடிக்கும்.' ' ஏன்? ' என்று கேட்டார் எல். பிரபு. புன்னகையோடு, தாரு கூறினார் : ' ஏனா ? நாவல்கள் உண்மை, சரித்திரங்கள் பொய்.'

பல ஆண்டுகளுக்குப் பிறகு, இதைப் பற்றி, தாரு எழுதிய பிரஞ்சு நாவலுக்கு குறிப்புரை வழங்கிய செல்வி கிளாரிஸ்ஸே பாதர் என்பவர் சொல்கிறார் : ' இவ்வாறு முரண்தொடை ஒன்றைப் பதிலாக வழங்கிய தாரு, அதன் மூலம் வரலாற்றைவிடப் புராணத்தை விரும்பும் கவிதையுள்ளம் படைத்த இந்து இனத்தின் உண்மையான மகள் என்பதை நிரூபித்துவிட்டார். '

தாருவின் தலைமையைக் கண்டு, அருவோ அவர் தந்தையோ குறைப்பட்டுக் கொள்ளவில்லை. நாளாவட்டத்தில், அருவுக்கு, தாருவே ஆதாரமாய், அவர் பேரில் எதற்கும் சாய்ந்து நிற்கும் வழக்கம் அதிகமாயிற்று. யார் மூத்தவள் என்றுகூடப் பலர் கேட்டார்கள். இரு சகோதரிகளில், அருவே அதிகமான பெண்மைப் பாங்கு உடையவள். தாருவின் நினைவாற்றல், யாரும் நம்பக் கூடாத அளவுக்கு விஞ்சி இருந்தது. தம்முடைய மொழிபெயர்ப் புக்களை யெல்லாம் அப்படியே ஒப்பித்துவிடுவார். ' எதையும் மேலெழுந்தவாறாகத் தாரு விடுவதில்லை. சிரமப்பட்டுத் துல்லிய மாகக் கற்றுவிடுவாள் ' என்று கோவின் சொல்லுகிறார். அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் இவற்றைப் பார்த்து, சந்தேகம் தோன்றும்போதெல்லாம் தாரு போக்கிக் கொள்வாராம். உடனே குறிப்பெழுதியும் வைத்துவிடுவாராம். பிரஞ்சு, ஆங்கில, வடமொழிச் சொற்களைப் பற்றி, தாருவுக்கும் கோவினுக்கும் ஏதாவது தகராறு வந்தால், தாருவின் முடிவே அநேகமாக சரியாக இருக்கும். இந்த விளையாட்டுச் சண்டைகளில் பணயம் ஏதாவது வைத்தால், தாருவே வெற்றி பெறுவார். எப்போதாவது தோற்றால், தாரு என்ன செய்வார் என்பதைக் கோவின் சொல் கிறார் : ' தாரு தோற்றுப்போனால் என்ன செய்வாள் என்பதைப் பார்க்க வேடிக்கையாய் இருக்கும். ஒளிவீசும் புன்னகையோடு, நரைத்துப் போன என் கன்னத்தைத் தன் மெல்லிய விரல்களால் தடவுவாள். பிறகு, அவளுக்கு மிகவும் பிடித்த கவிஞரான எலிஸபெத் பாரட் ப்ரௌனிங் கவிதைகளிலிருந்து ஏதாவது இது

மாதிரி சொல்லுவாள் : '' கூட்டாளியே, நீர் மூத்தவர், என்னை விடப் புலமை உடையவர், அதோடு ஆண்மகன்.'' அல்லது இதைப் போல ஏதாவது வேடிக்கையாகச் சொல்லிவிடுவாள்.'

கல்கத்தா, தலைமை நீதி மன்றத்தில் நீதிபதியாக, 1837-1843 ஆண்டுகளில் இருந்த ஸர் எட்வர்ட் ரயான் என்பவரோடு, தத் குடும்பத்தினர் மிகுந்த நட்புப் பூண்டிருந்தனர். அவர் நாவலாசிரியர் டிக்கன்ஸ், நாவலாசிரியர் தாக்கரே மற்றைய பிரபல விக்டோரியா காலத்து எழுத்தாளர்களுடைய நண்பர். ஸர் எட்வர்ட்டைக் கண்டு பேசிய நிகழ்ச்சி ஒன்றை நினைவு கூர்ந்து, 1878 ஜூலை மாத 'வங்காள மாகஸினி'ல், கோவின் எழுதுகிறார் : 'அருவையும், தாருவையும் பார்த்து ஸர் எட்வர்ட் கேட்ட கேள்விகளும், சட்டுச் சட்டென்று தாரு தந்த பதில்களும் நினைவு கூரத்தக்கவை. இதோ ஒரு கேள்வி: ''தாக்கரேயின் பெண்களை உங்களுக்குத் தெரியுமா? உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில்தான் வசிக்கிறார்கள்.'' தாரு அவர்களைச் சந்தித்ததில்லை. (பிறகு கேம்பிரிட்ஜில் தாக்கரேயின் மனைவியைச் சந்தித்தார்). '' தாக்கரேயின் நாவல்களில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது?'' என்று ஸர் எட்வர்ட் வினவ, தாரு உடனே பதிலளித்தார்; '' எஸ்மன்ட் தான்........பென்டென்னிஸ் நிறைய பேருக்குப் பிடித்திருக்கிறது. ஆனால், எஸ்மன்டே, பென்டென்னிசைவிட எவ்வளவோ உயர்ந்த கலைப்படைப்பு''.'

அக்டோபர் 7-ம் தேதி, தம்முடைய ஒன்றுவிட்ட சகோதரன் அருண் என்பவருக்கு, தாம் சுளுக்கினால், இரண்டு வாரம் வீட்டிலேயே அடைத்துக்கிடந்ததாகத் தாரு எழுதினார். ப்ராம்ப்டன் வீட்டில் பியானோ இல்லை. 'அப்பா ஒரு பியானோவை வாடகைக்கு எடுக்கப் போகிறார்.' திருமதி லாலெஸ் என்பவர் அருவுக்கும், தாருவுக்கும், வீட்டில் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியையாக அமர்த்தப் பெற்றார். இன்னொரு ஒன்றுவிட்ட சகோதரர் ஒமேஷுக்கு, இதே சமயத்தில் எழுதிய ஒரு கடிதத்தில், தாருவும் அருவும் லண்டனில் ஒவ்வொரு நாளையும் எவ்வாறு கழித்தார்கள் என்று விவரம் தரப் பெறுகிறது. அவர்களுக்கிருந்த வேலைகளின் பட்டியலைப் பார்க்கும் போது, நோயுற்ற இரண்டு பெண்களுக்கு இத்தனை வேலைகளும் மிகுந்த சிரமமாகவும், அவர்கள் சக்திக்கு மீறியதாகவும் தோன்றுகின்றன. ஆனால் பின்னர், இந்தியாவில், இதைவிடக் கடுமையாக, கால அட்டவணைப்படி தாரு உழைத்தார். இந்த வேலைப் பொறுப்புக்களையெல்லாம் தாரு தாமாகவே அமைத்துக் கொண்டாரா அல்லது கோவின் குறித்தபடியா என்று சொல்வது கடினம். அநேகமாக, தாருவே இப்படித் தமக்கு நாள் முழுவதும் ஆற்றவேண்டிய வேலைகளை அமைத்துக் கொண்டிருக்கலாம். ஒமேஷுக்கு அவர் எழுதினார்:

'கடிதம் எழுதக்கூட நேரமில்லை. நாள் முழுவதையும் படிப்பிலே செலவழிக்கிறோம். காலையில் ஏழு மணியிலிருந்து ஏழரை மணிவரையில் பியானோ சாதகம். ஏழரை மணிக்குக் காலை உண்டி. அது முடிந்ததும் பைபிள் வாசிப்பு. எட்டரை மணிக்குள் அநேகமாக அது முடிந்துவிடும். பிறகு, ஒன்பதரை மணி வரையில் மறுபடியும் பியானோ சாதகம். அதன் பிறகு நான் டைம்ஸ் பத்திரிகை படிப்பேன். எனக்கு இப்போது நடக்கும் போரைப் பற்றி அறிவதில் மிகுந்த ஆர்வம். உன்னைவிட எனக்கு இந்தப் போரைப் பற்றி நிறையத் தெரியும். பத்து மணிக்கு திருமதி லாலெஸ் வருவார். அவர் மூன்றரை மணிக்குப் போவார். நான்கு மணிக்கு, அப்பாவுடன் ஏதாவது படிப்போம். வெள்ளிக்கிழமையானால், திருமதி மாக்ஃபரென் பாட்டு சொல்லிக் கொடுக்க வருவார். திங்கட் கிழமைகளில், திரு பௌரிடம் இசைப் பயிற்சி பெறப் போவோம். திரும்பி வந்து, பியானோ வாசிப்போம்.'

பிரஞ்சு படிப்பும் முன்னேறிக் கொண்டிருந்தது. ஓமேஷுக்கு எழுதிய கடிதத்தைப் பக்தி நிறைந்த சொற்களோடு தாரு முடிக்கிறாள்: 'கடவுள் உன்னைப் பாபத்திலிருந்தும், அபாயத்திலிருந்தும் காப்பாற்றட்டும்.'

லண்டன் வீட்டில், தத் குடும்பத்தினர் இத்தாலியன் ஒருவனை வேலைக்காரனாக அமர்த்தி இருந்தார்கள். பிரஞ்சு மொழியில் சரளமாகப் பேசுவதில் முன்னேறுவதற்காக, அவனிடம் பிரஞ்சிலேயே அவர்கள் பேசுவதுண்டு. இஸபல் என்ற அவர்களுடைய சமையற்காரி, இந்திய முறையில் சமைப்பதற்கு விரைவில் கற்றுக் கொண்டாள். 'எங்கள் உணவு மேசையில், ஆட்டிறைச்சி கட்லெட், ரோலி-போலி [1] இவற்றோடு வங்காள உணவுகளான குச்சோரியும், கீரை சுச்சூரியும், அம்போலும் பரிமாறப் பெறும். நயமாக இல்லையா?' மாரிக்காலத்தில், இருமுறை விழுந்த பனியைப் பற்றியும், பனிப் பந்துகள் எறிந்து விளையாடிக் களித்ததைப் பற்றியும் தாரு குறிப்பிடுகிறாள். எப்போதாவது, நாடகம் பார்க்கச் செல்வார்கள். அவர்கள் பார்த்த நாடகங்களில் 'ஆமி ராப்ஸார்ட்' (Amy Robsart), 'முதுவேனிற் கனவு' (A Mid-Summer Night's Dream) இரண்டும் இருந்தன.

1871-ம் ஆண்டில், தத் குடும்பத்தினர், கேம்ப்ரிட்ஜ் நகருக்குச் சென்றார்கள். அங்கே பார்க்கர்ஸ் பீஸ் என்பதற்கு எதிரே இருந்த ரீஜன்ட்ஸ் வீதியில் தங்கினார்கள். பெண்களுக்கென்று நிகழ்த்தப் பெற்ற உயர்தரச் சொற்பொழிவுகளை, தாருவும், அருவும் உற்சாகத்தோடும் சிரத்தையோடும் கேட்டுப் பயனடைந்தார்கள். திரு போகல் என்ற பிரஞ்சு ஆசிரியரைப் பாடம் சொல்ல அமர்த்திக்

---

[1] ஆங்கில உணவு வகை ஒன்று.

கொண்டார்கள். கேம்ப்ரிட்ஜ் நகரில் தாருவை மிகவும் கவர்ந்தது, அவருக்கும் மேரி கார்ட்டின் என்பவருக்கும் ஏற்பட்ட நட்புத் தான். இது வாழ்நாள் முழுதும் நீண்ட உறவாய் வளர்ந்தது. இரு நண்பர்களுக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்து நினைவில் இருத்தக் கூடிய ஒன்று; சாகாவரம் பெற்ற தன்மை வாய்ந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு, தாருவின் வாழ்க்கை வரலாற்றை, ஹரிஹரதாஸ் எழுத முற்பட்டபோது, செய்தி களைத் தொடுக்க அவருக்கு உதவியவர் செல்வி மார்ட்டின் ஆவார். 1913-ம் ஆண்டில், கல்கத்தாவில் செல்வி மார்ட்டினை ஹரிஹர தாஸ் சந்தித்தார். தாருவின் வாழ்க்கை வரலாற்றை எழுதப் போவதாகத் தெரிவித்தார். ' தாரு தத்தின் வாழ்க்கையும் கடிதங் களும் ' என்று ஹரிஹரதாஸ் இயற்றிய நூலில் கீழ்க்கண்ட சமர்ப்பணம் காணப்படுகிறது :

அவருடைய அன்புக்குகந்த இந்திய நண்பரான
தாரு தத்தைப் பற்றிய இந்த நூல்
மேரி இ. ஆர். மார்ட்டின் அவர்களுக்கு
அவர் காட்டிய பரிவுக்கு நன்றிக் காணிக்கையாகப்
படைக்கப் பெறுகிறது.

மேரி மார்ட்டின், ரெவரன்ட் ஜான் மார்ட்டின் என்பவருடைய ஒரே மகள் ஆவார். ரெவரண்ட் ஜான் மார்ட்டின் கேம்பிரிட்ஜ் ஸிட்னி ஸஸெக்ஸ் கல்லூரியைச் சேர்ந்தவர், ஸெண்ட் மாத்யூஸ் தி கிரேட் என்னும் இடத்தில் விகார்[1] ஆக 1850-1884 ஆண்டுகளில் பணியாற்றியவர். 1872-ல் இருவரும் சந்தித்தபோது, மேரிக்கு பதினைந்து வயது, தாருவுக்கு பதினறு வயது. பிறகு மேரி ஒரு பாதிரியாஞர். தாரு மறைந்த பல ஆண்டுகளுக்குப் பிறகு 1910-ம் ஆண்டிலும், 1913-ம் ஆண்டிலும் கல்கத்தாவுக்கு வந்தார். முதன் முதலில் கேம்பிரிட்ஜில் தாரு மேரியைச் சந்தித்தபோது, மேரி, மால்வர்ன் வெல்ஸ் என்னும் இடத்தில் பள்ளியில் பயின்று கொண்டிருந்தார்.

கேம்பிரிட்ஜில், தத் குடும்பத்தினர் சந்தித்த மற்றொரு நண்பர் லக்னௌவைச் சேர்ந்த பிஷப் க்லிப்போர்டு என்பவர். இவரைத் தத் குடும்பத்தினர் கேம்பிரிட்ஜில் பேராசிரியர் கோவெல் வீட்டில் சந்தித்தனர். பேராசிரியரும், அவர் மனைவியும், தத் குடும்பத்தின ரோடு அன்னியோன்னியமாகப் பழகத் தலைப்பட்டது, கல்கத்தா ராஜதானிக் கல்லூரியில் பேராசிரியர் பணியாற்றிய காலத்தில்.

கேம்பிரிட்ஜிலிருந்து, ஸெண்ட் லியோனார்ட்-ஆன்-ஸீ என்னும் இடத்திற்கு, தத் குடும்பத்தினர் சென்று தங்கினார்கள். இங்கே, திரு. கிரார்ட் என்பவரிடம் பிரஞ்சு மொழி பயிலுவதைத்

[1] கிறிஸ்தவ குருமார் பதவிகளில் ஒன்று.

தொடர்ந்தார்கள். அவர் வாரம் இரண்டு அல்லது மூன்று முறை வருவார் என்றும், தமக்கும் தம் தந்தைக்கும் பிரஞ்சு பாடம் நடத்துவார் என்றும், ஒரு கடிதத்தில் தாரு குறிப்பிடுகிறார். அரு பலவீனமாக இருந்ததால், அப்போது பிரஞ்சு பயிலவில்லை. திரு. கிரார்ட் கவிதையில் மிகுந்த ஆர்வங்கொண்டவர். 'தத் குடும்பத் திரட்டி' லிருந்து, மூன்று கவிதைகளை அவர் பிரஞ்சில் மொழி பெயர்த்தார். ஸென்ட் லியோனர்ட்-ஆன்-ஸீயில் தாருவும் அருவும் சேர்ந்து ஒரு புகைப்படம் பிடித்துக் கொண்டார்கள். இப் படந்தான் பிறகு கல்கத்தாவிலிருந்து செல்வி பாதருக்கு அனுப்பப் பெற்றது. இந்தப் படத்தில் அரு உட்கார்ந்திருக்கிறார். தமது பத்தொன்பது வயதைவிட மூத்தவராயும், தளர்ச்சியோடும் தோன்றுகிறார். தாருவோ, குதூகலமாகவும், சக்தியும் உயிர்த் தத்துவமும் பொங்கி வழிபவராகவும் காட்சி தருகிறார். அவ ருடைய கருங்குழல், இரு தோள்களிலும் விழுந்து புரண்டு ஓடுகிறது. அவருடைய அழகிய முகத்தில் கூர்த்த அறிவு பளிச் சிடுகிறது. அப்போது தாருவுக்கு வயது பதினேழு. இந்தப் படத்தில் தாருவைப் பார்த்து, ஐந்து ஆண்டுகளில், க்ஷயரோகத் தால் இவர் இறந்துவிடுவார் என்று சொல்வது கடினம். அருவுங் கூட, இன்னும் இரண்டு ஆண்டுகள்தான் வாழ்ந்திருப்பார் என்று சொல்லும் அளவுக்கு, அவ்வளவு நோயாளியாகப் படத்தில் தோன்றவில்லை. இரு பெண்களும் வித விதமாக விரிவாகக் கொசுவம் வைத்த விக்டோரியா காலத்து கௌன்களை அணிந்திருக் கிறார்கள். ஏன் அவர்கள் புடவை அணியவில்லை என்றும், கல்கத்தாவுக்குத் திரும்பிய பிறகுங்கூட, அவர்கள் இந்திய உடை அணிந்தார்களா என்றும் கேட்க வேண்டி இருக்கிறது.

'ஹேஸ்டிங்ஸ் அருகே' (Near Hastings)[1] என்ற தாருவின் பாடல், 'ஹிந்துஸ்தானத்துப் புராதன நாட்டு, புராணப் பாடல்கள்' என்ற நூலில், 'பலதுறைப் பாடல்கள்' என்ற பகுதியில் இடம் பெறுகிறது. அவருடைய கவிதைகளில் உயர்ந்தது என்று இந்தப் பாடலைச் சொல்ல முடியாவிட்டாலும், இதைத் தாரு எழுதியபோது, அருவின் உடல்நிலை எப்படி இருந்தது என்பதையும், ஒரு சிறு உதவியைக்கூடத் தாரு எவ்வளவு மதித்தார் என்பதையும், பாடலின் மூலமாக உணர முடிகிறது :

ஹேஸ்டிங்ஸ் அருகே,
கூழாங்கல் நிறைந்த கடற்கரையில்
நாங்கள் அலைந்தோம்.
இலையுதிர் காலத்தின் அழகிய உச்சிப்பருவம்,
சீமை இலந்தை பழுக்கும் நேரம்.

---

[1] இங்கிலாந்தில் உள்ள ஊரின் பெயர்.

தொலைவிலே, வானும், கடலும்
ஒன்றாய்க் கலந்திருந்தன.
பகல் முழுவதும் ஓய்ந்து விட்டது.
தூரத்திலிருந்து
நகரம் தன் முனகல்களை அனுப்பியது.
அன்னியர்கள், ஆகவே தனியாய் இருந்தோம்.

மெதுவாக நடந்தோம்.
நோயுற்று, தளர்ந்து, மயங்கிய நிலையில்
எங்களின் ஒருத்தி கீழே அமர்ந்தாள்.
அவளுக்குக் குறைகூறும் இயல்பு இல்லை.
நிழல்கள் பழுப்பாய் இருண்டன.
யாரோ ஓர் அம்மையார் எங்களைக் கடந்து சென்றாள்.
இளம் வயதினர் இல்லை.
ஆனால், அடடா, அவர் முகத்தின் மென்மை,
முக்தியுற்றோர் தூய்மையும் எழிலும்
நிறைந்த அவர் நடை,
அதை எந்த ஓவியனும் வரைந்ததில்லை
கவிஞனும் பாடியதில்லை.
எங்களைக் கடந்து சென்றார்
திரும்பவும் வந்தார்.
ஒரு பார்வையில்,
நாங்கள் அன்னியர்கள் என்றும்
எங்களில் ஒருத்தி வேதனைப் படுகிறாள்
என்றும் உணர்ந்தார்.
'பிரான்ஸிலிருந்து வந்தவர்களா?'
என்று கேட்டார்.
ஏதோ சிறிது பேசினோம்.
கண்ணீரால் நனைந்தனவோ
என்று ஈரம் படிந்து தோன்றிய
சில ரோஜா மலர்களை
என் சகோதரியிடம் கொடுத்துவிட்டு
அவர் சொன்னார்;
'பிரியமானவர்களே,
கடவுள் உங்களுக்கு அருளட்டும்.'

ரோஜாக்கள் இனிமையாய் இருந்தன.
ஊரிலே, அகன்ற குளங்களிலிருந்து
எங்கள் அறைகளை அலங்கரிக்கப் பறிப்போமே
அந்தத் தாமரை மலர்களைப் போல,
அவ்வளவு பெரியனவாய்,

பூரண மலர்ச்சியோடு
விளங்கின அந்த ரோஜாக்கள்.
ஆனால் அவற்றைவிட
முன்பின் தெரியாத எங்களுக்கு
அவற்றை அளித்த அன்பு
எவ்வளவோ இனிமையானது.
உலகைக் காக்கவந்த அவனே [1]
இந்த வண்மையை,
தான் ஏற்ற கடனாக மதிப்பான்.

அம்மையார் பெயர் எனக்குத் தெரியாது.
அவர் முகத்தை இனிக் காணவும் போவதில்லை.
ஆனால், ஆனால்,
அவரை அப்படி நேசிக்கிறேன்.
இறைவன் அருள் பெற்று
என்றென்றும் அவர் ஆனந்தமாய் இருக்கட்டும்.
அவர் நினைவு என்றும் அகலாது.
என்னுடைய வாழ்வு என்ன துயரம் வந்து
இருண்டாலும்
என் இதயத்தில் அந்த ரோஜாக்கள்
என்றும் வாடாமல் மலரும்.

கேம்பிரிட்ஜில், தத் குடும்பமும், மேரி மார்ட்டின் குடும்பமும் 1872 டிசம்பரில் இருந்து, 1873 ஏப்ரல் வரையில் அநேகமாக ஒவ்வொரு நாளும் சந்தித்தன. மேரியின் தாய் எழுதியுள்ள தினசரிக்குறிப்பில், தத் குடும்பத்தைப் பற்றிய பல குறிப்புக்கள் உள்ளன. நீண்ட நேரம் ஒன்றாய் உலாவப்போதல், நெருங்கிய முறையில் ஒன்றாகத் தேநீர் அருந்துதல், கணப்படியில் ஒன்றாக அமர்ந்து, மாலைப் பொழுதைப் போக்குதல் - இவற்றைப் பற்றி யெல்லாம் அக்குறிப்புக்கள் பேசுகின்றன. ஸென்ட் லியனார்டுக்கு, தத் குடும்பம் சென்றதும் இரண்டு குடும்பங்களும் மறுபடியும் சந்திக்கவில்லை. மேரி சொல்கிறாள்: ‘இதனாலேயே நாங்கள் பரிமாறிக் கொண்ட கடிதங்கள் நெருக்கமும் அந்தரங்கமும் மிகுந்து விளங்கின.’

1873 செப்டம்பரில், பிஷாவார் என்ற பி அன்ட் ஒ (P & O) கப்பலில், கோவின் தம் குடும்பத்தாரோடு, இந்தியாவுக்குத் திரும்பினார்.

---

[1] கிறிஸ்து பெருமான்.

7. வீடு திரும்புதல்

வேற்று நாட்டிலிருந்து, இந்தியாவில் உள்ள நண்பர்களுக்கும் உறவினருக்கும் பல கடிதங்கள் தாரு எழுதியிருந்தபோதிலும் அவை காப்பாற்றி வைக்கப் பெறவில்லை. ஆனால் இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு, மேரிக்குத் தாரு எழுதிய கடிதங்கள் அனேகமாக அனைத்தும் பொக்கிஷம் போலத் காக்கப்பெற்று, ஹரிஹரதாஸ் தாருவைப் பற்றி எழுதிய வாழ்க்கை வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. 1873 செப்டம்பரிலிருந்து தொடங்கி, 53 கடிதங்கள் தாருவால் மேரிக்கு எழுதப் பெற்றன. விலைமதிப்பதற்கரிய இக் கடிதங்களே தாருவை உண்மையாகக் காட்டுகின்றன. கற்பதிலும், எழுதுவதிலும் ஒரு தாகமே கொண்ட, கூர்த்த அறிவொளி விளங்கும் இளம்பெண் ஒருத்தி, அக்கடிதங்களில் தோன்றுகிறாள்.

எளிமையான அக்கடிதங்கள், ராம்பகனிலும், போக்மாரி தோட்ட வீட்டிலும் நடைபெற்ற தாருவின் வீட்டு வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்றன. ஐரோப்பாவுக்குத் திரும்பவேண்டும் என்று தாரு ஆசைப்பட்டாலும், மறுபடியும் கல்கத்தாவை விட்டுப் போவதற்கு அவருக்கு நேரவில்லை.

கல்கத்தா வாழ்க்கை தாருவுக்குச் சுவையுடையதாய், எழுச்சி ஊட்டுவதாய்த்தான் இருந்தது. தம் பெற்றோர், தாம் வளர்த்து வந்த பிராணிகள், உறவினர் பலர், புகழ்படைத்த நண்பர்கள், புத்தகங்கள், தமது எழுத்து வேலை — இவற்றிடையே மகிழ்ச்சிக்குக் குறைவில்லை, ஆயினும் அவ்வாழ்க்கையில் அவலமும் தோன்றியது. ஐரோப்பாவிலிருந்து திரும்பிய ஒரு வருடத்திற்குள், அரு காச நோய்க்குப் பலியானாள். அவளைக் காப்பாற்ற முடியவில்லை.

மேரியிடமிருந்து தாரு எதையும் ஒளிப்பதில்லை. அவளிடம், அன்புடைய தம் இதயத்தின் துயரங்களையும், மகிழ்ச்சிகளையும் அப்படியே கொட்டி விடுவார். ஏதோ இரண்டு பெண்கள் உலகியல் வாழ்க்கையைப் பற்றி அந்தரங்க எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வதோடு இக்கடிதங்கள் நின்றுவிடவில்லை. அவற்றில் ஒரு தனிக் கலாசார, இலக்கிய முத்திரை தென்படுகிறது. ஹரிஹரதாஸின் கருத்துப்படி 'தாருவின் மேதாவிலாசம் மாத்திரம்

முதிர்வதற்கு அனுமதிக்கப் பெற்றிருந்தால், அவருடைய கடிதங்கள் ஆங்கில இலக்கியத்தில் உன்னதமான நிரந்தர இடம் பெற்றுத் திகழ்ந்திருக்கும்.'

தாருவின் வருணனை, அசையாமல் உள்ள இயற்கைக் காட்சிகளின் எழிலை அநேகமாகத் தொட்டுவிடும் ஆற்றல் ஒளி வாய்ந்தது. இடை இடையே அவருடைய விஞேதமான கருத்துக்களும், விக்டோரியன் எழுத்தாளரிடம் காணப்பெறும் தனி நகைச் சுவையும் வந்து வந்து வருணனைக்கு உரமூட்டிய போதிலும், கடிதங்களில் கருத்து தாறுமாருகப் பின்னி, சிந்தனை ஒழுங்கின்றிக் கிடக்கிறது. இது, கடிதங்களின் இலக்கியத் தன்மையைக் குறைக்கிறது. கடிதத்தின் ஒரு பாராவில் தாம் வளர்க்கும் பூனைக் குட்டியைப் பற்றிப் பேசுவார். உடனே ஒரு பிரஞ்சு கவிஞனுடைய கவிதை நலங்களைப்பற்றி விவரிக்கத் தொடங்குவார். தம் நோயைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போதே, சரேலென சமுதாயப் பிரச்சினை ஒன்றைப் பற்றிய தம் கருத்தை வெளியிடுவார். ஆனால் இந்தத் தொடர்பு முறிந்த போக்கு, எத்தனை விதவிதமான விஷயங்கள் ஒரே காலத்தில் தாருவின் வாழ்க்கையிற் கவிந்து, அவரை ஈர்த்தன என்பதைக் காட்டுகிறது. குழந்தையின் பேச்சைப் போல, தட்டுத் தடையில்லாமல் தானே பொங்கிவரும் அவர் எழுத்து, அவர் கடிதங்களில் தனியான சுவையூட்டி, வாசகர் கவனத்தைக் கடைசிவரையில் கவர்ந்து நிற்கிறது.

புத்தகங்கள், இன்னும் புத்தகங்கள், எழுத்து, மேலும், எழுத்து — இதுவே தாருவின் ஆசை. அதே நேரத்தில், தமது நண்பருக்கு உகந்த, எல்லா வகையிலும் பூரணமான கண் நிறைந்த கூட்டாளியாகவும் இருக்க ஆசைப்பட்டார்.

ஜிப்ரால்டரிலிருந்தும், அலெக்ஸாண்டிரியாவிலிருந்தும் முதற் கடிதங்கள் பிஷாவர் கப்பலில் எழுதப்பெற்றன. அந்தக் கப்பலில், கடற் பயணத்தின்போது நடைபெற்ற சம்பவங்களைப் பற்றித் தான் அவை பேசின. ஏதோ சிறிது, கடற் பயணத்தால் ஏற்படும் சுகக் குறைவு ஏற்பட்டது என்ருலும், தாருவின் உடல்நிலை நன்ருகத் தான் இருந்தது. இருந்தும், அவ்வளவு மகிழ்ச்சியோடு அவர் இருக்கவில்லை. அருவுக்கு உடம்பே சரியில்லை. கோவின் இந்தியாவுக்குத் திரும்பியதற்குக் காரணமே, அரு கடுமையான நோயில் விழுந்ததுதான். இங்கிலாந்தில் இன்னெரு மாரிக் காலத்தைக் கழித்து, தப்பிப் பிழைக்க அருவால் முடியாது என்று டாக்டர்கள் கருதினர்கள். தாருவுக்கு தம் நண்பரை மறுபடி காணப் போவதில்லை என்று, எதிர்காலத்தைப்பற்றி நெஞ்சை உறுத்திய ஏதேதுவோ எண்ணங்கள்.

1873 டிசம்பரில், தாருவின் கடிதங்கள் தொடங்கின. காலேயில் நான்கு நாள் தங்க வைக்கப் பெற்ருலும், கடைசியாக, தத்

குடும்பத்தினர் சிலோனில் இறங்கினர். ஒரு நாள் அங்கே மகிழ்ச்சிகரமாகக் கழிந்தது. பல பறவைகளை, அரு தம்மோடு கொணர்ந்திருந்தார். அவற்றில் சில இறந்துவிட்டன, ஒரு சில லின்னட்டுகளும், கோல்ட்ஃபின்சுகளும், கானரிகளும் மட்டும் உயிரோடு இருந்தன.

இந்தியாவுக்கு வந்ததும், தத் குடும்பத்தினரின் உறவினர் பலப்பலரும் அவர்களை உற்சாகமாக வரவேற்றார்கள். அவர்கள் விட்டுச் சென்ற வளர்ப்புப் பிராணிகளும், பறவைகளும், குதூகல வரவேற்புத் தந்தன. சில ஆண்டுகளுக்கு முன் சின்னஞ் சிறிதாய் இருந்த குழந்தைகள், இப்போது கொஞ்சம் வயதாகி, அத்தைகளை விடமாட்டோம் என்று பிடித்துக் கொண்டன. அருவும், தாருவும் மீண்டும் இங்கிலாந்திற்குப் போகவே கூடாது என்று சாதித்தன.

டிசம்பர் மாதமாய் இருந்தாலும், தாருவின் அழகிய வீட்டுத் தோட்டத்தில், ரோஜா, செம்பரத்தை, மேரி கோல்ட், ஆஸ்டர் முதலிய மலர்கள் மண்டி இருந்தன. இங்கிலாந்திலிருந்து, விதைகளும், வேர்களும், செடிகளும் ஏராளமாக அம்மா கொணர்ந்திருந்தாள்.

'இப்போதுதான் ஹையஸின்த் மலர்ச் செடிகள் வளரத் தொடங்கி உள்ளன. இங்கிலாந்துச் செடிகளை இந்தியாவிற் பயிர் செய்யும் முயற்சியில் அம்மா வெற்றி பெறுவாள் என்றே நம்புகிறேன். அல்லி வெண் மலர்களும், இரத்தமாய்ச் சிவந்த தாமரைகளும் நிரம்பி, எங்கள் குளங்கள் மிக அழகாக உள்ளன.'

அரு, கினிபிக்குகள் (வெள்ளைப் பன்றி வகை) வளர்த்தாள். அவை அளவில்லாமற் பெருகின. ஆகவே, தாரு அவற்றை விற்றுக் 'கொள்ளை லாபம்' அடிக்க முடிந்தது என்று கோவின் சிரித்துக்கொண்டே சொன்னார். வளர்ப்பதற்கு சீமை வாத்துக்களும் அருவுக்குத் தரப்பெற்றன. 'எங்கள் தோட்டத்தில் மூன்று நான்கு குளங்கள் இருந்தபடியால், வாத்தோ, சீமை வாத்தோ வளர்ப்பது சௌகரியமாய் இருந்தது.' 'கொய்யா (இங்கிலாந்தில் உள்ள பியர் பழத்தைப் போன்றது), வாழை, ஆரஞ்சு (இந்த மாதிரி ஆரஞ்சு உனக்கு இங்கிலாந்தில் கிடைக்காது)', இப்படி வகைவகையாய், பழங்கள் ஏராளமாகக் கிடைத்தன. போக்மாரி தோட்ட வீடு மாம்பழங்களுக்குப் பெயர் போனது.

இவ்வாறு, இங்கிலாந்திலிருந்து திரும்பிய பின் தத் குடும்பத்தினர் நான்கு ஆண்டுகளுக்கு நடத்திய அமைதியான, நிறைந்த வீட்டு வாழ்க்கை, மேரிக்கு தாரு எழுதிய கடிதங்களில் சித்திரிக்கப்படுகிறது.

---

1 சில வகைப் பறவைகள்.

மாஜா என்ற பூனை - வீட்டில் வளர்த்து வந்தது - இறந்து போயிற்று. வீட்டில் ஒரே வருத்தம். பதினொரு வருடம் செல்ல மாக வளர்ந்த பூனை. குளத்தங்கரையில், ஜௌ மரமொன்றின் கீழே அந்தப் பூனை புதைக்கப் பட்டது. அம்மாவும், அப்பாவும் சடங்கின்போது இருந்தார்கள். தாருவும், அருவும் இல்லை. அவர்களிருவருக்கும் சுகவீனம். பசுமாடு கன்று போட்டது. நல்ல செய்தி, எல்லோருக்கும் நல்ல பால் கிடைக்கும். தானே அந்தப் பசுவைக் கறக்க அரு விரும்பினாள். தோட்டத்தில் முள்ளம் பன்றி ஒன்று பிடித்தார்கள். ரோஜாக்கள் எழிலுடன் விளங்கின. 'எங்கள் நாட்டு மலர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இங்கிலீஷ் பூக்களுக்கு மணமே இல்லை என்று தோன்றுகிறது' கோழி வளர்த்தார்கள். புதிதாகக் குஞ்சு பொரித்ததும், கிடைத்த கோழிக் குஞ்சுகளை, மாடியில் நோயாய்ப் படுத்திருந்த தாரு பார்ப் பதற்காக அம்மா அனுப்பினார். ஒவ்வொரு நாளும் அவர்களுக்குப் புத்தம் புதிய முட்டைகள் கிடைத்தன.

'அரு இதுவரை பெரிய மீன் எதையும் பிடிக்க முயன்றதில்லை. உடம்பு தேறியதும் அதைச் செய்யப் போகிறாளாம். இப்போது முயன்றால், கொக்கியில் சிக்கிய பெரிய மீன், தப்பிக்க முயன்று ஓடும்போது, தன்னையும் சேர்த்துத் தண்ணீருக்குள் இழுத்துச் சென்றுவிடும் என்று அரு சொல்கிறாள். நானும் இதே காரணத் திற்காகப் பெரிய மீன் பிடிக்கப் போவதிலிருந்து விலகி இருக்கிறேன்.'

புளிய மரத்தில் பழத்துக்காகக் குரங்குகள் கூடின. மாஜாவின் குட்டி அசாத்தியமாய் விளையாடுகிறது. சில நாட்களாக, உடம்பு சரி இல்லாததால், தாரு கீழே இறங்கிப்போய் பியானோ வாசிக்கவில்லை. இங்கிலாந்துக்கு இனிப் போகக்கூடிய அளவுக்கு உடம்பு எங்கே சரியாகப் போகிறது என்று தாரு கை விரிக்கத் தொடங்கி விட்டாள். 'நாங்கள் இங்கிலாந்துக்குப் போக முடியுமா, தெரியவில்லை. இங்கே உள்ள எல்லாவற்றையும் விற்று விட்டு இங்கிலாந்துக்குப் போய் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விடலாமா என்று அப்பா சொல்கிறார். எங்கே போனாலும் எங்களுக்கு இறைவன் அருளட்டும்.'

தத் குடும்பத்தினருடைய வீட்டு வாழ்க்கை அமைதியும் அளவும் கொண்டிருந்தது. அம்மா பாடுவாள். எவ்வாறு மூன்று குழந்தைகளும் அப்பாடல்களை உன்னிப்பாகக் கேட்பார்கள் என்பதை தாரு தாபத்தோடு நினைவு கூர்கிறார், 'அருவின் மறை வுக்குமுன், கல்கத்தாவில், அவர் அனுபவித்த மகிழ்ச்சிகரமான குழந்தைப் பருவத்தைப்பற்றி, 'சீதா' என்ற அவருடைய கவிதை குறிப்பிடுகிறது :

மங்கலான அறையில்,
களிப்பு நிரம்பிய மூன்று குழந்தைகள்.
கண்ணை அகல விரித்து,
அவை என்ன அப்படிப் பார்க்கின்றன ?
அடர்ந்த, அடர்ந்த காடு,
வெயிலின் கதிர் உள்ளே நுழையாத வனம்.
மத்தியில் திறந்த இடம்.
வானளாவும் மரங்களைத் தழுவும் கொடிகளில்
பிரும்மாண்டமான மலர்கள்.
அருகில், சலனமற்றுத் தெளிந்த ஏரியில்
வெண் அன்னங்கள் ஊர்கின்றன.
அதோ, அந்தப் புதரிலிருந்து
விர்ரென்று மயில் தாவுகிறது,
மஞ்சட் கதிர்த்திட்டுக்கள்
அசைந்து மின்னுகின்றன.
விசித்திரமான ஓம குண்டங்களிலிருந்து
நீலப் புகை இலேசாக எழுகிறது.
அங்கே துறவி-கவிஞன் அமைதியில் வாழ்கிறான்.
ஆனால் இந்த அழகி யார் ?
ஏன் அழுகிறாள் ? அவள் அழுகை வீண்போகவில்லை.
அதோ பார்,
அவள் வடிக்கும் ஒவ்வோர் கண்ணீர்த்துளிக்கும்
மூன்று ஜோடி இளம் விழிகளில்
கண்ணீர் பொங்கி விழுகிறது.
மூன்று இளஞ் சிரங்கள், துயரிற் கவிழ்கின்றன.
பழங்கதை, பழைய, பழைய கதை.
இக்கதையைப் பாடும் பாடலை,
சீதையை என்றோ பழங்காலத்திலிருந்து
உயிர் பெற்றுக் கண்முன் வரச்செய்யும் இந்தப் பாடலை,
ஒரு தாய் பாடுகிறாள்...
பாடல் மோனத்தில் கலக்கிறது.
அது வரைந்த சித்திரம்
குழந்தைகளின் கண்களில் இருந்து கரைகிறது.
ஆனால் பகல் வரும் வரையில்
அதை அவர்கள் கனவிலே காண்பார்கள்.
அன்றுபோல், மறுபடியும், அந்திவேளையில்
அந்தக் குழந்தைகள், தாயின் பக்கத்தில்
இனி என்று கூடப் போகிறார்கள் ?

வங்க மொழியில் பாடிய அத்தாயின் பாடல்கள் எவ்வளவு கண்முன்னே சித்திரமாய் விரிந்திருக்க வேண்டும்! ஒவ்வொரு

நாளும், அந்திவேளையில், பழைய பாடல்கள் பாடப்பெற்றபோது தாரு கண் கலங்கியதில் வியப்பில்லை.

ஒவ்வொரு நாளின் திட்டத்தில், வாசிப்பு முக்கிய பங்கு வகித்தது. இந்த ஆர்வத்தை, தந்தை கோவின் ஊக்கினார். ராம் பகன் வீட்டிலிருந்த புத்தகங்கள் அனைத்தும், தோட்ட வீட்டுக்கு மாற்றப்பெற்றன. தோட்ட வீட்டில் இடம் அதிகமாக இருந்தது. தம் மனம் நிறையும் வரையில், தாருவால் வாசிக்க முடிந்தது. 'எங்கள் புத்தகங்கள், கல்கத்தா புத்தகசாலைப் புத்தகங்கள், (அப்பா அந் நூலகத்தில் ஒரு பங்குதார்), புத்தகங்களுக்குக் குறைவே இல்லை' என்று தாரு எழுதுகிறார். தாரு வேகமாக வாசிக்கும் ஆற்றல் உடையவர். இது பற்றித் தாரு சொல்கிறார்; 'ஒரு புத்தகத்தை என்னால் வேகமாக வாசிப்பதற்கு முடிந்தது. காரணம் என்ன தெரியுமா? பொழுது நிறைய இருந்தது. விருந்து, டென்னிஸ் போன்ற விளையாட்டு, கூட்டாஞ்சோறு, இவற்றி லெல்லாம் செலவழியும் நேரமெல்லாம், படிப்பிலே கழிந்தது. மற்றொன்று. நான் எப்போதுமே, குழந்தையிலிருந்தே ஒரு புத்தகப்புழு.' 'ரெவு த தோ மான்டே' என்ற பத்திரிகையின் பிரதிகள் தவறாமல் அவரால் பெற முடிந்தது. தவிர லண்டனி லிருந்து, ஹாச்சட்ஸ் நிறுவனத்தார், பிரஞ்சு ஆங்கிலப் புத்தகங் களை அனுப்பிவந்தனர். இதனால் தற்கால நூல்களோடு தொடர்பு அறாமல் அவரால் காக்கமுடிந்தது. திருமதி பிரௌனிங், கார்லைல், பிரான்ட்டே சகோதரிகள். பைரன், தாக்கரே, காலிரிட்ஜ், தென்னிஸன், ஜார்ஜ் எலியட், லிட்டன், மற்றும் பல ஆங்கில எழுத்தாளர்களை அவர் அடிக்கடி குறிப்பிடுகிறார். பிரஞ்சு மொழியில் அவர் வாசிப்பு இன்னும் விரிவாகவும், ஆழமாகவும், இருந்தது. மோலியேருடைய நகை இயல் நாடகங்களிலும், மிகுவே எழுதிய 'பிரஞ்சு புரட்சியின் வரலாறு' என்னும் நூலிலும், ரொஸேல் எழுதிய கட்டுரைகளிலும், விக்டர் ஹ்யூகோவின் நாவல்களிலும், 'பிரனீஸ் மலை சஞ்சாரம்' என்னும் தெயின் எழுதிய நூலிலும், ஸென்தினேயின் 'ஸால்' என்ற புத்தகத்திலும் அவர் ஈடுபட்டு இன்புற்றார். பிரஞ்சு ரொமான்டிக் எழுத்தாளர் நூல்களும், பர்னஸியர்கள் என்ற எழுத்தாளர் இயற்றிய நூல்களும் எப்போதும் தாருவின் கையிலே இருந்தன.

வீட்டிலே, நண்பர்களும், உறவினரும் தாருவின் பேரில் அன்பு சொரிந்தனர். 'அவள் மென்மையான மலர்போல் இருந்தாள், பாதி மலர்ந்த ரோஜா அரும்பாக, அவருடைய இந்திய வீட்டை, தாரு மணத்தால் நிரப்பினார்.' வயதானவர்களும்; இளம்பிராயத் தினரும் அவரை, 'டிடி' (சகோதரி) என்ற அழைத்தார்கள். அவருடைய பாட்டனார், அத்தையர், மாமன்மார் அனைவரும் அப்படித்தான். அவருக்கு இளகிய மனம். யாரிடத்தும் பிரியமாய்

இருப்பார், அதோடு, அதிசயிக்கத்தக்க அளவு அடக்கம். டாக்டர் ஹண்டர் என்பவர் ஏன் தம் குடும்பத்துடைய அறிமுகத்தைப் பெற விரும்பினார் என்று தாருவுக்குப் புரியவில்லை, சொல்கிறார்: 'டாக்டர் என்னுடைய திறமையைப் பிரமாதப்படுத்துகிறார். எனக்கு ஒரே வெட்கமாய் இருக்கிறது. அப்படி என்ன செய்து விட்டேன்? மொழிபெயர்ப்புப் புத்தகம் ஒன்று எழுதினேன், அவ்வளவுதானே? டாக்டர் ஹண்டர் எத்தனையோ புத்தகங்கள் எழுதி இருக்கிறாரே!'

தமது ஒதுங்கிய வாழ்வின் சின்னஞ் சிறு நிகழ்ச்சிகளில் ஆனந்தம் அடைந்து, இவ்வாறு தம் குடும்பத்தினரிடையே தாரு வாழ்ந்தார். கவிஞர் என்ற முறையிலே அவருக்கு வந்த புகழை யெல்லாம், டம்பம் எதுவுமின்றி ஏற்றுக்கொண்டார். அவருடைய தேவைகள் மிகச் சில — அவர் வளர்த்த கானரி பறவைக்கு ஒரு கொசுவலை, அதிகாலையில் தம்முடைய குதிரைகளோடு சிறிது நேரம், சிமுல் மரத்து ஒளி மலர்களைக் கண்டு மகிழ்ச்சி, தாய் பாடும் ஒரு பாடல், சாவின் வாசலில் படுத்திருக்கும்போது, தம் கையில், தந்தையின் கை படுவது — இவ்வாறு தாரு தம்முடைய குறுகிய வாழ்வை வாழ்ந்தார். அவருடைய மரணத்திற்குப் பிறகு, செல்வி கிளாரிஸே பாதர் அவரைப் பற்றி என்றென்றும் மங்காத எழுத்துச் சித்திரம் ஒன்று தருகிறார்: 'மனம்விட்டு நேருக்கு நேர் பேசும் பாங்கு, பளீரென எதையும் தொடும் உணர்வு, யாரையும் வசீகரிக்கும் குண நலம், எளிமை — இவையே தாரு. இவையே அவரை என் நெஞ்சில் இடம்பெறச் செய்து விட்டன.'

8. பெண்மையின் தலைவாசலில் மறைந்தாள்

தத் குடும்பத்தினர் இந்தியாவுக்குத் திரும்பிய சில மாதங்கள், அருவும், தாருவும் மொழிபெயர்த்த பிரஞ்சு கவிதைகளைத் திரட்டு வதிலும், அவற்றை 'வங்காள மாகஸீ'னுக்கு 'கவிதை மூலை'யில் வெளியிடுவதற்கு அனுப்புவதிலும் கழிந்தன. தாருவிடமிருந்து புதிய-மொழிபெயர்ப்புக்கள் இடையறாது பெருகிவந்தன. அரு

சில மொழிபெயர்ப்புக்களைச் செய்தார். 1874-ம் ஆண்டு முதற் பகுதியில், 'வங்காள மாகஸினி'ல், இக் கவிதைகள் வெளிவரத் தொடங்கின. இந்த நிலையில்தான், 'அறிவாற்றல் முயற்சி வேகக் கனவிலும், கற்பனைப் படைப்பிலும், தாரு இறங்கினுள். இந்த நாற்பத்தைத்து மாதங்களின் தனிமை வாழ்வில், தாரு சாதித்ததை எண்ணும்போது, அவருடைய மெலிந்த, பரபரப்பு மிகுந்த உடல், எவ்வாறு இம்முயற்சியின் பெரும் பாரத்தைத் தாங்கியது என்று வியக்காமல் இருக்க முடியாது.'[1]

1874-ம் ஆண்டு ஆரம்பத்தில், அரு, தாரு இருவரும் நோய்வாய்ப் பட்டார்கள். காசநோயின் தொடக்க நிலைகளில் தாரு வருந்தத் தொடங்கினுர். மூன்று மாதங்களுக்குப் பிறகு, மார்ச் மாதத்தில் சிறிது உடல்நலம் மீண்ட பின்னர், இருமல் சிறிது குறைந்திருந்தது என்றும், உடற்கனம் அதிகரித்திருந்தது என்றும் மேரிக்குத் தாரு எழுதினுர். மே மாதம் வந்ததும், வங்காளத்தின் ஈரமற்ற வெப்பத்தின் காரணமாக, அநேகமாக பூரண சுகம் அடைந்தார். எதிர்பார்த்த அளவுக்கு, அரு குணமடையவில்லை.

பிறகு, இருந்தாற்போல இருந்து, அரு இறந்தார். மன முடைந்த தத் குடும்பத்தினர் ஆறுதலுக்குத் தம் சமய நம்பிக் கையையே நாடவேண்டி இருந்தது. இந்த நம்பிக்கையின் வேகம், தாருவை இருமடங்கு வேலை செய்ய ஊக்கியது. செப்டம்பரில், ராம்பகனிலிருந்து, மேரிக்குத் தாரு எழுதினுர்: 'இதற்குமுன் எழுதமுடியவில்லை. எங்களிடமிருந்து அருவை இறைவன் அழைத்துச் சென்றுவிட்டான். எங்களுக்கு இது கடுமையான சோதனை. ஆயினும் அவன் திருவுளப்படியே எதுவும் நடக்கட்டும். அவன் எதைச் செய்தாலும் எங்கள் நன்மைக்கே என்பது எங்க ளுக்குத் தெரியும். சென்ற ஜுலை மாதம் 23-ம் தேதி காலை பதினெரு மணிக்கு, அரு எங்களைப் பிரிந்தாள். கடைசிவரையில், அமைதியோடும், மகிழ்ச்சியோடுந்தான் இருந்தாள். கடைசி நாட்களில், காய்ச்சலும், வயிற்றுமந்தமும், மிகுந்த ஓய்ச்சலும் அவளை வருத்தின. பாலத்திற்கப்பால் உள்ள எங்கள் இடுகாட்டில், என் சகோதரனுக்கருகில் அவள் இடப்பெற்ருள். எங்கள் சிறு குடும்பத்தின் உயிரும் ஒளியுமாக விளங்கிய அவள் இல்லாமல், நாங்கள் தனியே விடப்பட்டதுபோல் உணர்கிருேம். அவள் எப்போதும், மகிழ்ச்சியும், குதூகலமும் நிரம்பியவளாகவே இருந்தாள். பிரியே, எங்களை அவ்வப்போது நினைத்துக்கொள்.'

நோய்ப்பட்டிருந்தாலும், ஆண்டுத் தொடக்கத்தில், தாருவும், அருவும், தமது இலக்கிய வேலையில் நன்ருக முனைந் திருந்தனர். வங்காள மாகஸீனுக்கு, அரு ஏழு கவிதைகள்

---

[1] நாட்டுப் பாடல்கள்

அனுப்பினுள். 'ஷீஃப்' (கதிர்க்கட்டு) என்ற கவிதைத் திரட்டில் வெளியான சில பாடல்கள் அரு எழுதியவை. ஏப்ரல் மாதத்தில், அரு மொழி பெயர்த்த விக்டர் ஹ்யோகோவின் 'காதலிக்குக் காலைப் பாடல்' முதன்முதலில் வெளி வந்தது. இது எட்மண்ட் காஸின் கவனத்தைக் கவர்ந்தது. இப்பாடலைத் தாரு எழுதியதாகத் தவறுதலாக அவர் நினைத்தார். உண்மையில், சில கவிதைகளை இயற்றவே அருவுக்கு நேரம் இருந்தது. அவற்றில் ஒன்றே இந்தப் பாடல். 'ஹிந்துஸ்தானத்து நாட்டுப் பாடல் களும், புராணங்களும்' என்ற நூலுக்கு எழுதிய முகவுரையிலும், 'எக்ஸாமினர்' என்ற பத்திரிகையில், 'ஷீஃப்' (கதிர்க்கட்டு) என்ற நூலுக்கு அவர் எழுதிய மதிப்புரையிலும், இந்தப் பாடல் முழுவதையும் மேற்கோளாக அவர் தருகிறார் :

ஏனடி இன்னும் உன்கத வடைந்தே
இருப்பதோ? நெடுந்தொலைக் கிழக்கு
வானிலே சிவப்புக் கனன்றது. புதுமை
வாரியே விடுதலை வடிவாய்
வீசிடும் காலைக் காற்று. இனும் உனது
கதவடைத் திருப்பதும் அழகோ?
ஆசையாய் ரோஜா மலரினை எழுப்பும்
அலர் பொழுதினை எழுப்பாதோ?
ஒளியும் இன்இசையும் அன்பும் ஒன்ருக
உனை வரவேற்கவே துடிக்கும்.
வெளியிலே மலரும் உதயச் செஞ்சிவப்பும்,
வியன்சிறை விரித்துயர் வானில்
பண்பகர் வானம்பாடியின் பாட்டும்,
பஞ்சை என் உளத்தெழும் அன்பும்,
எண்ணி இம்மூன்றும் உனை எதிர்பார்த்தே
எழுந்தன நீ உணராயோ?
பிரிந்து நாம்நின்ருல் நமக்கென இயற்கை
பேணிய இலட்சியம் இழப்போம்.
மருந்தென வருநம் விதியை ஏமாற்றி
மயங்குவ திற்பயன் உளதோ?
என்றன தன்புன் உயிர்க்கென உன்றன்
எழில் என திருவிழிக் கென்ன
முன்னரே விதித்த முறையிது தன்னை
முழுவதும் உணர்ந்திடல் அரிதோ?
அன்னமே என்னைக் கேளடி, துயிலில்
ஆழ்வதை விடுத்தெழு. அழுதே
இன்னமும் காத்து நிற்கிறேன் இங்கே.
எங்கடி, எங்கு நீ போனுய்?

இது முதல்தரமான கவிதை. இந்தியாவிலிருந்து வந்த சிறு புத்தகத்தைப் பிரித்துப் பார்த்ததும், இந்த அருமையான பாடலைக் கண்ட எட்மண்ட் காஸ் தம் கண்களையே நம்பவில்லை என்பதில் என்ன வியப்பு? புத்தகம் கைக்கு வந்ததும், படுமட்டமாகத்தான் இருக்கும் என்று அவர் எண்ணினர். 'எக்ஸாமினர்' பத்திரிகையின் ஆசிரியரான திரு மின்டோ தான், அதை விரும்பாத காஸின் கையில் புத்தகத்தைத் திணித்து 'இதை வைத்து ஏதாவது செய்ய முடியுமா பார்' என்று சொன்னர். 'எக்ஸாமினர்' அலுவலகத் திற்குக் காஸ் போயிருந்தார். 1876 ஆகஸ்டு மாதம் புத்தகங்கள் வெளிவராத வறட்சிக்காலம். காஸ் சொல்கிறர் : 'எனக்கு புத்தக வெளியீட்டுக் காரர்கள் மேல் ஒரே எரிச்சல். இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறர்கள், மதிப்புரை எழுதப் புத்தகமே இல்லையே என்று அவர்கள் மேற் பாய்ந்தேன். அப்போது, சிறிய, இருண்ட பார்சல் ஒன்றைத் தபாற்கார்ரர் கொணர்ந்தார். பார்சலில் வியப்பூட்டும் இந்தியத் தபால் முத்திரை இருந்தது. பிரித்தேன். கவர்ச்சி இல்லாத ஆரஞ்சு வண்ண அட்டை. பவானிபூரில் அச்சிடப்பெற்றது. புத்தகத்தின் தலைப்பு "பிரஞ்சு வயல்களில் திரட்டிய கதிர்க் கட்டு."'

பார்ப்பதற்கு மோசமாய், முகவுரையோ, முன்னுரையோ இல்லாமல், சுமார் இருநூறு பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகம் குப்பைத்தொட்டியில் எறிவதற்கே தகுதி பெற்றது. 'இதுவே அதன் தலைவிதி' என்று காஸ் நினைத்தார். ஆனல் புத்தகத்தைப் பிரித்தார். 'காதலிக்குக் காலைப் பாடல்' என்ற செய்யுளைக் கண்டார். 'இவ்வளவு நல்ல கவிதை கிட்டினல், புத்தகம் எங்கே அச்சானல் என்ன, வாட்மேன் காகிதத்தில் ரூவேரே அச்சிட்டால் என்ன, பவானிப்பூரில் உள்ள ஓட்டை அச்சகத்தில் மங்கிய எழுத்தோடு வெளிவந்தால் என்ன ?' என்று எண்ணினர்.

'வங்காள மாகஸ்னி'ல் வெளிவந்து 'கதிர்க்கட்டில்' இடம் பெற்ற அருவின் மற்றைய பாடல்கள் வருமாறு: ஜென்ஸுல் எழுதிய 'என் கிராமம்'; பெரங்கர் எழுதிய 'என் தாயின் பிறந்த நாள்', 'சிட்டுக் குருவிகள்'; திருமதி வியோ வின் படைப்பான 'இன்பம் நாட்டைவிட்டுப் போதல்','காலிநெட்டே','சிறையுண்ட வனதேவதை'. ஆக, இறப்பதற்குமுன் அரு எழுதிய கவிதைகள் ஏழு; ஆனல் ஒன்ருவது 'காதலிக்குக் காலைப் பாடல்' என்பதன் உயர்வைத் தொடவில்லை.

அருவின் மறைவுக்குமுன், 'வங்காள மாகஸீனு'க்குத் தாருவும் ஏழு கவிதைகள் எழுதினர். தாருவின் மொழிபெயர்ப்புக்களில், பாராட்டுப் பெற்றுப் பலருக்குத் தெரிந்த பாடல் 'இலை' என்பது :

காம்பிலிருந்து பிரிக்கப்பெற்ற
உலர்ந்துபோன மஞ்சள் இலையே,

இவ்வளவு வேகமாய் எங்கே போகிறாய்?
உயர்ந்து பெருமிதத்தோடு நிமிர்ந்த
தேக்க மரத்தைப் புயல் சாடியது,
கொடுமையாக மோதிச் சுழன்றது.
வீணாய் முயன்றேன் தப்பிப் பிழைக்க.
வீழ்ந்தேன், அன்று தொடங்கிய தென் துயர்.
மாறி அடிக்கும் மூர்க்கக் காற்று
அங்கும் இங்குமாய் என்னைத் தூக்கி
எறிந்தது, மலைமேல், பள்ளத்தாக்கின்
மேலே, வனத்தின் மேலே, ஓகோ
பறந்தேன். கேளிதோ, ஊதைகள் ஊதல்.
எங்கே என்னை அவையும் அழைத்துச்
செல்லுமோ, அங்கே செல்லுவேன். என்றும்
குற்றம் குறைகள் சொல்லுவதில்லை.
ரோஜாவும் ஒருநாள் போகவே வேண்டும்,
லாரலு[1]க்கும் அதே கதிதான், அறிவேன்.
இங்கே உள்ள அனைத்தும் அப்படித்தான்.
ஆகவே, இங்கே இருக்க
வீணாய் நானேன் வெதும்ப வேண்டும்?

9. தனிமையில்

அருவின் மறைவுக்குப் பிறகு, ராம்பகனில், வாழ்க்கை பழைய தினசரிப் போக்குக்குத் திரும்பியது. கோவினும், அவர் மனைவியும், எஞ்சியுள்ள ஒரே மகளும், தங்கள் துயரத்தைத் தங்களுக்குள்ளேயே ஆழப் புதைத்து, ஆண்டவனுக்காகவும், தாங்கள் மேற்கொண்ட புலமைத் துறைப் பணிக்காகவுமே வாழ்வது என்று உறுதி பூண்டார்களோ என்று கூடத் தோன்றியது. தாரு, தாம் பின்பற்றிய வழக்கமான துறைகளில் உறுதியாக நடந்தார். இங்கிலாந்தின் பேரில் தமக்கும் தந்தைக்கும் இருந்த அன்பைப் பற்றி மேரிக்கு எழுதினார். தம் தந்தைக்கு இங்கிலாந்தில் வெஸ்ட்மூர்லான்டு என்ற பகுதியே மிகவும் பிடிக்கும் என்றும், அதற்குக்

[1] லாரல் என்பது ஒருவகைப் புதர்.

காரணம் விண்டர்மியரில் கவிஞர் வர்ட்ஸ்வர்த் வாழ்ந்ததும், கெஸ்விக்கில் கவிஞர் ஸதே தங்கியிருந்ததும் ஆகும் என்றும் தாரு குறிப்பிட்டார். ஆருப் பசியோடு நூல்களை வாசித்து வருவதில் ஈடுபட்டிருந்தார் என்றாலும் பொழுது போகாதது போல் தாருவுக்குத் தோன்றியது. தமது கணிதப் பயிற்சியைப் புதுப்பிக்க நினைந்தார். அக்காலத்தில், தெற்கு வங்காளம் பஞ்சத்தால் பீடிக்கப் பெற்றது. இதற்கு முன் ஏற்பட்ட மற்றொரு பஞ்சம் தாருவின் நினைவுக்கு வந்தது: "பெண்களும், ஆண்களும், குழந்தைகளும், எலும்புக் கூடுகளாக மெலிந்து போனார்கள். உடம்பில், எலும்புகள் வெளியே துருத்திக் கொண்டு நின்றன. சோற்றைக் கண்டதும், எப்படிக் காணாதது கண்டது போல் அவர்கள் உண்ணத் தலைப்பட்டார்கள் என்பதைப் பார்க்கும் போது, வேதனையாய் இருந்தது. பெற்ற தாய் குழந்தையின் கையிலிருந்து அது தின்னப் போவதைப் பிடுங்கிக் கொண்டாள். சில சமயம், எங்கள் தோட்டத்தில், ஒவ்வொரு நாளும் காலையில் கிடைக்கும் சிறிது அரிசிக்காகவும், பருப்புக்காகவும், சில நாட்கள் மக்கள் தங்குவதுண்டு."

1874-ம் ஆண்டில், கல்கத்தாவுக்கு வந்த பிஷப் க்லிஃபோர்டு நான்கு ஆண்டுகள் அங்கே தங்கினார். தத் குடும்பத்தினருடைய வீட்டு வாழ்க்கையைப் பற்றிச் சில சுவையான செய்திகளை அவர் தருகிறார். தத் குடும்பத்தினர் வழக்கமாகத் தொழுவதற்குச் செல்லும் மிஷன் மாதாகோவிலில், அவர் குருவாக இருந்தார். கேம்பிரிட்ஜில் தத் குடும்பத்தினரோடு ஏற்பட்ட நட்பை, அவர் இப்போது புதுப்பித்துக் கொண்டார். அரு மறைந்த நான்கு மாதங்களுக்குப் பிறகு, தத் வீட்டுக்கு கிலிஃபோர்டு வந்தார். பல ஆண்டுகளுக்குப் பின்னர், ஹரிஹர தாஸுக்கு அவர் எழுதினார்: 'அடிக்கடி தத் குடும்பத்தினரை நான் சந்தித்தேன். அவர்களைச் சந்திப்பதும், அவர்களோடு அளவளாவுவதும், எனக்கு எப்போதும் மகிழ்ச்சியைத் தந்தது. திரு கோவின் தத் நிரம்பிய வசதி படைத்தவர், சிறந்த பண்பாடு உடையவர். இலக்கியம், பொது மக்களுக்கு சேவை, இவை இரண்டிலுமே அவருக்கு நாட்டம். கீழ்த்திசை மொழிகளும், மேனாட்டு மொழிகளும், சமமாகத் தெரிந்த மொழி இயல் அறிஞர். திருமதி தத், வங்காளி மொழியைத் தவிர வேறு மொழி பேசியதில்லை என்றே எண்ணுகிறேன். ஆனால், அவருக்கு, ஓரளவு ஆங்கிலம் புரியும் என்பதில் ஐயமில்லை.'

சில மாதங்களுக்குப் பிறகு, தத் குடும்பத்தினர் போக்மாரி தோட்ட வீட்டுக்கு மறுபடியும் போனார்கள். இதற்கு முன் அங்கே அவர்கள் போகாததற்குக் காரணம், அவ்வீட்டில் ஒவ்வொரு மூலையும் முடுக்கும் அருவின் நினைவைக் கொணர்ந்தன. இதை அவர்களால் தாங்க முடியவில்லை. தம்முடைய 'இனிமையான

பாங்கால்' அவ்வீட்டை, அரு நிரப்பி இருந்தார். இப்போதுதான் ஸம்ஸ்கிருதம் பயிலத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் தாரு வின் மனத்திற் கவிந்தது. இந்தியாவின், பெருமை வாய்ந்த அப் புராதன மொழியைக் கற்பதில், தாருவுக்கு உதவ வேண்டும் என்ற ஆர்வத்தோடு கோவின் இருந்தார். இருவரும் சேர்ந்து கற்கும் புதுமையால், தமக்கும் தம் மகளுக்கும் உள்ள உறவு இன்னும் உரம் பெறும் என்று அவர் நினைத்தார். இதைப் பற்றி 'என் தந்தை', 'வாழ்வு மரம்' என்ற கவிதைகளில் தாரு அழகாகக் குறிப்பிடுகிறுர். 'என் தந்தை' என்பது 'கதிர்க்கட்டு' என்ற தொகை நூலில் கடைசிக் கவிதையாக இடம் பெற்ற போதிலும், அது மொழிபெயர்ப்பற்ற, சொந்தப் படைப்பு 'வாழ்வு மரம்' என்பது 'நாட்டுப் பாடல்கள்' என்ற நூலில் வெளிவந்தது. இப் பாடல் முழுவதும் அப்படியே, 'இந்திய இலக்கியம்'[1] என்னும் நூலில் இடம் பெற்றது.

வாழ்வு மரம்

நல்ல பகலொளி, ஓய்ச்சல்.
கண்ணை மூடிப் படுத்திருந்தேன்,
தூங்கவில்லை.
என் கை தந்தையின் கையில் இருந்தது.
அவர் அருகில் இருப்பதை உணர்ந்தே இருந்தேன்.
இவ்வாறு, ஒன்றும் பேசாமல்,
மணிக் கணக்காய், மோனத்தில் கழித்தோம்.
ஒருவர் இதயத்தில் எழுந்த எண்ணம் ஒவ்வொன்றும்
பேசாமலேயே மற்றவருக்குத் தெரிந்தபோது
பேச்சுக்குத் தேவை ஏது?
எங்கள் நாடி அசைவுகள் இசைந்து
ஒரே தாளத்தில் துடித்தன.
சரேலென விசித்திரமான ஒளி ஒன்று
பொங்கிப் பரந்தது.
காட்சி மாறியது.
நான் விழித்துக்கொண்டு விட்டேன்.
என்னைச் சுற்றிப் பரந்த வெளி,
எல்லையில்லாமல் விரிந்தது, விரிந்தது,
அப்படி விரிந்தது.
அதன் மேலே அந்த அற்புத ஒளி.
என்ன பிரகாசம்!
தெளிந்த, மேகமற்ற, உறைபனிக்கால இரவில்

---

[1] 'இந்திய இலக்கியம்', லண்டன், 1900. பதிப்பாசிரியர் ஜூலியன் ஹாதார்ன்.

வானிலிருந்து பனிவயல்களின் மேலே விழுமே
அந்த நட்சத்திர ஒளியைப் போல் இருந்தது.
அந்தப் பரந்த வெளியின் மத்தியில் —
நான் விழித்துக்கொண்டுதான் இருந்தேன்,
கனவில்லே, நேரிற் பார்த்தேன், —
அடர்ந்து விரிந்த கிளேகளோடு ஒரு மரம்.
அதன் இலேகள் மங்கிய வெள்ளி,
பளபளத்த உயிர்த் தங்கம்.
அவை மின்னின.
அந்தப் பேரொளியைச் சொல்லச் சொற்கள் இல்லே.
மரத்தின் அருகே, தேவதூதன் ஒருவன் நின்ருன்.
மரத்திலிருந்து சில சிறுதளிர்களே எடுத்து
என் தலேயில், சுற்றிக் கட்டினுன்.
அடேயப்பா, அந்த விசித்திர இலேகள்
உடம்பைத் தொட்டதும் என்ன இன்பம், என்ன இன்பம் !
என் தலேவலித் துடிப்பு நின்றது.
உடம்பிலே காய்ச்சல் எதுவும் இருப்பதாகக் காணேம்.
அது இருந்ததாகவே தெரியவில்லே.
' ஓ, என் தந்தையின் நெற்றியிலும்
இந்த இலேகளேச் சூட்டு ' என்று கூவினேன்.
தேவதூதன் ஓர் இலேயை எடுத்தான்.
மெல்ல என் தந்தையின் நெற்றியைத் தொட்டான்.
பிறகு மிருதுவான குரலில்
இரகசியம் போலச் சொன்னுன் :
' இல்லே, இப்போது இல்லே. '
அந்தத் தேவதூதன் முகத்தைப் போல
அவ்வளவு அழகுடைய முகத்தை
நான் கண்டதே இல்லே.
அந்த முகத்தில்தான் எவ்வளவு தூய கனிவு,
எவ்வளவு தெய்விக அன்பு !
வியப்போடு சிறிது நேரம், கண்கொட்டாமல்
பார்த்துக் கொண்டிருந்தேன்.
பிறகு, சரேலென்று
கண்ணீர் படிந்து மங்கிய என் விழிகளேத் திறந்தேன்.
அந்த ஒளி,
ஆழ்ந்த பனித்தரையின்மேல் விழும்
நட்சத்திர ஒளியைப் போன்ற
அந்தப் பிரகாசம், சரேலென மறைந்தது.
அந்தத் தேவதூதன் முகம்,
கண்ணுக்குத் தெரியவில்லே, தெரியவே இல்லே...

பொறுமையாய் என் படுக்கையருகில்
தன் கையால் என் கையைப் பிடித்துக்கொண்டு,
அழுந்தப் பிடித்துக்கொண்டு,
என்னையே பார்த்திருந்த
என் தந்தையைக் கண்டேன்.

இந்தப்பாடல், மெய்ஞான உணர்வுக் கவிதை வரம்பைத் தொடுகிறது. என் கருத்தில், தாருவின் பாடல்களில், இதுவே சிறந்தது. இங்கே அவர் காணும் தரிசனம், இறைவனுடைய அன்பு உலகத்தை, ஆங்கிலக் கவிஞன் பிளேக் எட்டிப் பார்த்துப் பெற்றனே, அந்தக் காட்சியைப் போல் உள்ளது. எல்லையற்ற ஆனந்தத்தின் மணிமுடியில் நிற்கும்போதும், தம்முடைய தந்தையை மறவாமல் நினைந்து, அவருக்கும் தன் பேறு கிட்ட வேண்டும் என்று மன்றாடினரே, அது, தாம் போய்விடுவோம், தந்தை துயரத்தில் தனியே விடப்படுவார் என்பதையே அவர் எண்ணி எண்ணி மறுகினர் என்பதைக் காட்டுகிறது. அவர் கண்ட தெய்வக்காட்சி கோவினுக்குக் கிட்டவில்லை, அதற்கு இன்னும் வேளை வரவில்லை.

தாருவின் செய்யுள்களைப் படித்துப் பார்க்கும்போது அவற்றிலும், அவர் எழுதிய பிரஞ்சு நாவலிலுங்கூட, அடிக்கடி மறு உலகக் காட்சி நிலைக்குத் தாரு சென்றுர் என்பதற்குச் சான்று நிறையக் கிடைக்கிறது. உடம்பு மெலிய, மெலிய, அவர் நிச்சல மான ஒரு நிலையைத் தொட்டார். சகோதரியின் மறைவுக்குப் பிறகு, மேலும் மேலும் தம்மை இறைவனுடைய திருவுள்ளத்திற்கு ஒப்படைத்தார், இறைவனுக்கும் தமக்கும் உள்ள ஒருமைப் பாட்டை மேலும் அழகாக உணர்ந்தார். யாரும் அறியாத தத்து வத்தோடு நெருக்கமாக ஒன்றி ஒன்றி, மெய்யுணர்வு வரும் வரை, அவருடைய பாடல்கள் தனி வலிமை பெற்று, தாமாகவே பெருகின. இதை அவருடைய ‘நாட்டுப் பாடல்களி’ல் காணலாம். மனிதத்துவத்திற்கும், தெய்விகத்திற்கும் உள்ள நெருங்கிய ஒட்டுதல், அவருடைய கவிதைகளில், திரும்பத் திரும்பத் தென்படு கின்றது. மண்ணுலகிற் காண இயலாத இந்த ஆற்றலால், அவரு டைய பாடல்கள் முன்னினும் தங்குதடை இல்லாத ஓட்டமும், முதிர்ச்சியும் பெறுகின்றன. மண்ணுலக மக்களுக்கும் கடவுளர்க்கும் ஹிந்துக்கள் கண்ட உறவுக்களுக்களை, அவருடைய ‘நாட்டுப் பாடல்களி’ல் அவர் ஆழமாகச் சென்று இனங்காண்கிறர். சாவின் தெய்வமான யமனை, சாவித்திரி தொடர்ந்து செல்கிறள். தன்னு டைய கணவன் உயிரைத் திரும்பக் கேட்கிறள். மரண உலகின் அரசனைக் கண்டு, அவள் அஞ்சவில்லை. மாறுக

‘நல்ல மனத்தின் சக்தி அவ்வளவு பெரியது. அது
என்றென்றும் எம்மை ஆட்கொள்ளப் பிரார்த்திக்கிறேம்’.
என்று கூவுகிறள்,

மரணமே ஒரு நன்மைதான். ஆகவே அஞ்ச வேண்டியதே இல்லை. ‘சாவே, எனக்குத் தளர்ச்சியே இல்லை.’ இதே போலவே ராஜரிஷி ‘தம்முடைய உயிரின் பேரில் முழு ஆதிக்கம் செலுத்த முயல்கிறார்.’ உண்மையில், தாருவின் ‘நாட்டுப் பாடல்களி’ல் மெய்யுணர்வுக் கருத்துக்கள் நிறைய உள்ளன. ஏதோ ஒன்றை பலியிட்டுவிட்ட உணர்வை, சாவு தருவதில்லை. மாறாக, நிரந்தர வாழ்வு காணும் ஒளியின் உலகில், மீண்டும் பிறக்கும் அனுபவத்தையே தருகிறது. இந்த ஒளியைப் பற்றித்தான் தூய யோவான் (St. John) கூறுகிறார்: ‘அது இருட்டில் வீசுகிறது. அது தன் ஆதிக்கத்தில் முழுமை பெறுகிறது. எத்தனை பேர் அதைப் பெறுகிறார்களோ, அத்தனை பேரும் இறைவனுடைய மக்கள் என்ற நிலையை அடைந்து, அந்த அதிகாரத்தைப் பெறுகிறார்கள்.’

தாருவின் கவிதைகள் பல, ‘வங்காள மாகஸினி’ல் வெளி வந்தன. அருவின் மறைவுக்குப் பிறகு, டி.டி. (T.D.) என்ற புனைபெயரின் கீழே, வந்துகொண்டும் இருந்தன. இக்காலத்தில், இரண்டு மூன்று செறிவார்ந்த கவிதைத் துணுக்குகளைத்[1] தாரு மொழிபெயர்த்தார். ஆனால், எடுப்பான நகைச்சுவையும் செறிவும் இல்லாததால், அவை நன்றாக அமையவில்லை. தாருவின் உயர்ந்த எழுத்துக்களாக அவற்றைக் கருத முடியாது. மொழி பெயர்ப்பிலுங் கூட ‘எபிக்கிராம்’ எழுதி வெற்றி பெறும் அளவுக்கு, தாருவின் ‘ரொமான்டிக்’[2] பாங்கு இடந்தரவில்லை.

லியான்தே த லிஸ்லே என்பவர் எழுத்தில் தாருவுக்கு மிகுந்த ஈடுபாடு. அவருடைய பாடல்கள் சிலவற்றை மொழிபெயர்த்து, அவரைப் பற்றி ஒரு கட்டுரையும் தாரு எழுதினர். அது ‘வங்காள மாகஸீனி’ல் 1874-ல் வெளிவந்தது. இந்த பிரஞ்சு கவிஞரிடம், தாருவுக்குத் தனிப் பிடிப்பு இருந்தது. அக் கவிஞருடைய ‘வால்மீகியின் மரணம்’ என்ற கவிதை இந்தியர் என்ற முறையில் தாருவைக் கவர்ந்தது. தாருவின் கட்டுரையைப் பற்றி, எட்மண்ட் காஸ் சொல்கிறார்: ஆங்கிலச் செய்யுள் வடிவில் உள்ள மொழிபெயர்ப்புக்கள் எடுத்துக் காட்டுகளாக அமைந்த இந்த ஆய்வை, ஜோஸஃபின் ஸுலரியைப் பற்றிய கட்டுரை தொடர்ந்தது. ஸுலரியிடம், தம்முடைய முதிர்ந்த பக்குவ நிலையில், தாருவே காணக்கூடியதைவிட, அதிகமான நலன்களை இக் கட்டுரையில் அவர் காண்கிறார். துணை ஏதுமின்றி எழுதப் பெற்ற இத்திறனாய்வுக் கட்டுரைகளில் வலிமையும், வேலைப்பாடும் உள்ளன. சுவையும், இப்போது பச்சாத்தாபமும்

---

[1] இவற்றை எபிகிராம் (**Epigram**) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இது நம்முடைய திருக்குறளைப் போன்ற கவிதை வகை.

[2] ‘ரொமான்டிக்’ (**Romantic**) கவிதை என்பது பல தனிப பண்புகள் கொண்ட, மேனாட்டுக் கவிதை மரபுகளில் ஒன்றைச் சேர்ந்தது. கற்பனை வளமும், எங்கோ உள்ள இலட்சிய எழில் நாட்டைத் தேடிச் செல்லும் வேகமும் வாய்ந்தது.

நமக்கு இக் கட்டுரைகளால் ஏற்படுகின்றன. அவருடைய எழுத்து, சகோதரி அரு, இருபதாவது வயதில் காலமான பிறகு, இன்னும் அதிகமான தனிமையில் எழுந்தது '[1].

1874-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் தேதி, மேரி மார்டினுக்கு எழுதிய கடிதத்தில் தாரு கூறுகிறார் : ' இருநூறு பாடல்களை பிரஞ்சிலிருந்து மொழிபெயர்த்தவுடன், அவற்றை ஒரு புத்தகமாக வெளியிடுவதாக அப்பா சொல்கிறார். திரு டே[2] என்பவர் ஆசிரியராக உள்ள ' வங்காள மாகஸீனு ' க்கு இப்போது மொழிபெயர்ப்புக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறேன். திரு டே ஒரு சுதேசி கிறிஸ்தவ குரு. இருநூறு பாடல்கள் தயாரானதும், திரட்டி வெளியிடலாம் என்று அப்பா எதிர்பார்க்கிறார்.' அந்த மாதம் வெளிவந்த 'வங்காள மாகஸீனி'ல், லூயி விவியன் தெரோஸியோ' என்பவரைப் பற்றி, தாரு ஒரு கட்டுரை எழுதினார்.

1875-ம் ஆண்டு தொடக்கத்தில் மேரிக்கு எழுதிய இன்னொரு கடிதத்தில், ' வங்காள மாகஸீன் ' பேரில், தாரு குறை சொல்கிறார் : ' உன்னால் நம்ப முடிகிறதா? இன்னும் ' வங்காள மாகஸீன்' டிசம்பர் இதழ் வெளிவரவில்லை. ' கல்கத்தாவில் அச்சகங்கள் அவ்வளவு மெதுவாக வேலை செய்தன.

1874-ம் ஆண்டு முடிவுக்குள், தாரு மறுபடியும் நோயால் மிகவும் அவதியுற்றார். படுத்த படுக்கை, இருமினால் இரத்தம் வந்தது. அடிக்கடி காய்ச்சலும் இருந்தது. ஆயினும், வெளி நாடுகள் செல்லலாம் என்று நம்பினார். டாக்டரும், அடுத்த ஆண்டு வசந்தத்திற்குள், உடம்பு தேறிவிடும், போகலாம் என்றார்.

10. 1875-ம் ஆண்டு

1875 ஜனவரி முதல் தேதியில், நண்பர் மேரிக்குத் தாரு புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்து எழுதியிருந்தார். ஆனால் பிப்ரவரியில் மறுபடியும் நோயில் விழுந்தார். வசந்தம் வந்தது. ஆனால் வெளிநாடு

---

[1] ' நாட்டுப் பாடலகள் ', தாரு, எட்மண்ட் காஸ் முன்னுரை.

[2] லால் பிகாரி டே கிறிஸ்தவ மார்க்கத்தைத் தழுவிய முதல் வங்காளிகளில் ஒருவர். திரு டஃப் (Mr. Duff) என்பவரிடம் கல்வி பயின்றவர். கார்ன்வாலிஸ் தெருவில் இருந்த சுதந்திர மிஷன் சர்ச்சில், மினிஸ்டராக (குருவாக)ப் பணியாற்றினார். சிறந்த எழுத்தாளராகக் கருதப் பெற்றார். ஆங்கிலத்தில் நாவல் ஒன்றெழுதி 50 பவுன் பரிசு பெற்றார். ' வங்காள உழவர் வாழ்க்கை ' ' வங்காள மக்கள் கதைகள் ' என்ற நூல்களின் ஆசிரியர்.

செல்ல எவ்வித ஆயத்தமும் செய்யப்பெறவில்லை. தாருவுக்குத் தொடர்ந்து உடம்பு குணமில்லாமல் இருந்ததால், வெளிநாடு செல்லும் திட்டம் கைவிடப்பட்டது. எலிஸபெத் பாரட் பிரௌனிங் கவிதைகளில் தாரு அச்சமயம் ஆழ்ந்திருந்தார். அக் கவிதைகள் அடங்கிய புத்தகத்தை தாருவுக்கு 'அம்மா' கொடுத்திருந்தார். டிக்கன்ஸ் எழுதிய 'ப்ளீக் ஹவுஸ்' என்ற நாவலையும் அப்போது படித்துவந்தார். 'வங்காள மாகஸீனு'க்கு பிரஞ்சிலிருந்து மொழிபெயர்ப்புக்களும் அனுப்பிக் கொண்டிருந்தார். இங்கிலாந்திலிருந்து புதிய புத்தகங்கள் ஒரு கட்டு வந்து சேர்ந்தன.

அந்த ஆண்டு நவம்பரில், வேல்ஸ் இளவரசர் (ஏழாவது எட்வர்ட்) இந்தியாவுக்கு வருவதாக இருந்தது. தாரு அதை எதிர்பார்த்தபோதிலும், அதனால் இங்கே ஏற்பட்ட பல விளைவுகளைப் பற்றித் தமது கருத்துக்களைத் தெரிவிக்கிறார். ஜூலை மாதத்தில், தாருவின் பாட்டி இறந்தார். ஆனால் தாருவால், ஈமச் சடங்குகளுக்குப் போக இயலவில்லை, நோய் அவ்வளவு கடுமையாக இருந்தது. மார்பிலே பிளாஸ்திரி போட்டிருந்தார்கள். நுரையீரல் வியாதிகளுக்கு அக்காலத்தில், இந்த வேதனை தரும் முறைதான் சிகிச்சையாய் இருந்தது.

செப்டம்பருக்குள், வேல்ஸ் இளவரசர் வருகிறார் என்று கல்கத்தாவில் ஒரே பரபரப்பு. வரவேற்புக் குழுவில் அங்கத்தினராக இருப்பதற்கு, கோவின் அழைக்கப் பெற்றார். இதைத் தவிர, தாருவின் வாழ்க்கை வழக்கம்போல், அமைதியாகவே ஓடிற்று. தமது அன்றாட வேலைத் திட்டத்தைப் பற்றி அட்டவணை ஒன்றைத் தாரு தருகிறார் : 'நாங்கள் மிக அமைதியாக வாழ்கிறோம். எழுதுவதற்குச் செய்தி ஏதும் இல்லை. காலையில் நாலரை மணிக்கு எழுகிறேன். எழுந்ததும் இரண்டு கோப்பை சாக்கலேட் தயார் செய்கிறேன், ஒன்று அப்பாவுக்கு, ஒன்று எனக்கு. பிறகு உடை உடுக்கச் செல்கிறேன். நான் வருவதற்குள், அப்பாவும், அம்மாவும் எழுந்து விடுவார்கள். அப்பா தமது காலைச் சுருட்டு பிடித்துக் கொண்டிருப்பார். பிறகு, படியேறி வீட்டின் மேற்றளத்திற்குச் செல்வேன். விடியற்காலையில் அங்கே தண்ணென்றிருக்கும். பிறகு பாகதேக்கும், பினூரவுக்கும்,[1] கருவாட்டுத் துண்டுகள் ஒருசில போடுவேன். இறங்கி வந்து, கீழே உள்ள இந்த அறையில் சன்னலருகில் 'அமர்ந்து' கொள்வேன். இங்கிருந்து, ஜென்டில், ஜுனெட் என்ற எங்கள் குதிரைகளுக்குக் காணமும், தவிடும், மதுரமான ஒட்ஸ் மா அடையும் தருவதைப் பார்த்துக் கொண்டிருப்பேன். அந்த ஒட்ஸ் மா அடை, கோடைக்காலத்தின் வெப்பத்தைத் தவிர்த்து, குளிர்ச்சி உண்டாக்க, இங்கே இந்தியாவில் குதிரைகளுக்குக் கொடுப்பது வழக்கம்'.

---

[1] வளர்ப்புப் பூனைகள்.

குதிரைகளுக்குத் தீனி கொடுத்த பிறகு, தாரு காலை உணவு கொள்ளச் செல்வார். அதன் பிறகு அம்மாவோடு வீட்டுவேலை சிறிது நேரம். 'சாதாரணமாக, ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு உட்காருவேன். அல்லது, பூனைக்குட்டிகளோடு, கால் மணி நேரம் விளையாடிக் கொண்டிருப்பேன். அப்பா ஏதாவது எழுதிக் கொண்டிருப்பார். அல்லது இந்தியன் 'டெய்லி நியூஸ்' நாளிதழைப் புரட்டிக் கொண்டிருபார். பன்னிரண்டு மணிக்கு பகற் சாப்பாடு. அதன் பிறகு, மூன்று மணி வரையில், ஏதாவது படிப்பேன், அல்லது எழுதுவேன். மூன்று மணிக்கு கஸ்டர்ட் ஆப்பிளோ, படேவியன் ஆரஞ்சோ ஒரு துண்டு எடுத்துக் கொள்வேன். ஐந்து மணிக்கு, உடை மாற்றிக் கொண்டு, நாங்கள் வெளியே போவோம், நான் வண்டியிலே காற்றுடப் போய் வருவேன், அப்பாவும் அம்மாவும் என் பெரியப்பாவின் தோட்டத் திற்குப் போவார்கள். ஏழு மணிக்கு, இரவு உணவு; எட்டரை மணிக்கு ஒரு கோப்பை தேத் தண்ணீர். பத்து மணிக்கு படுக்கை.'

தாருவின் மொழிபெயர்ப்புக்களில், யுஜீன் மானுயல் எழுதிய 'ஆன்மாவின் வரலாறு' (*History of a Soul*) ஒன்று. இறைவனுடைய அலகிலா மருமங்களிலும், வரம்புடைய இவ்வுலகிற்கும், வரம்பிலா அவ்வுலகிற்கும் உள்ள உறவிலும் தாருவுக்கு இருந்த நாட்டத்தை அம்மொழிபெயர்ப்பு காட்டுகிறது :

கூட்டத்திலிருந்து, ஏதோ ஓர் உயிரை
இறைவன் பொறுக்குகிறான்.
துக்கத்தின் வழியே, கொடுமையின் வழியே
மெல்ல இலட்சியத்தை நோக்கி, வழி பிசகாமல்
அதை அழைத்துச் செல்லுகிறான்.
காந்தம் இழுக்கும் ஊசிபோல்
அங்கே அது வந்து சேர்ந்ததும்,
தன் கைத்திறனைப் பார்த்து, தானே மகிழ்ந்து
இறைவன் புதிதாகப் புன்னகை புரிகிறான்.
இவ்வாறுதான் ஓர் ஆன்மா
இறைவன் பட்டறையில் வடிவாகிறது.

இளவரசரைப் பெருமைப்படுத்தும் வகையில், கல்கத்தாவில் பிரமாதமான வாண வேடிக்கை ஏற்பாடாகி இருந்தது. இதைப் பற்றித் தாரு சொல்கிறார் : 'எடின்பரோ கோமகன், 1869-ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்தபோது, வாண வேடிக்கைக்கு 9000 பவுன் செலவழித்தார்கள் என்று நினைக்கிறேன். இது பணத்தை உண்மையிலேயே புகையாக்குவது அல்லவா?' தாருவை குதிரைப் பந்தயம் பார்க்க அப்பா அழைத்துச் செல்வதாய் இருந்தது. தாரு சொல்கிறார் 'போவதற்கு எனக்குக் கொள்ளை ஆசை.'

இதற்குள் 'பிரஞ்சு வயல்களில் திரட்டிய கதிர்க்கட்டை'த் தாரு எழுதி முடித்துவிட்டார். அப்புத்தகத்தில் கடைசிக் கவிதையாக உள்ளது ஒரு 'ஸானட்'. அது மொழிபெயர்ப்பன்று. சொந்தப் படைப்பு. சில திறனாய்வாளர்கள் அதை உயர்ந்த மாசுமறுவற்ற கவிதையாகக் கருதுகிறார்கள் :

மலர்கள், பிறந்த மண்ணிலே,
தமது கிளைகளோடு இருக்கும்போது,
மிக்க எழிலோடு விளங்குகின்றன.
பறித்துவிட்டால், சாம்புகின்றன,
இயற்கை தீட்டிய வண்ணங்களை இழக்கின்றன.
எவ்வளவோ முயன்று, கருத்தோடு
மாலைகளாய்க் கட்டினாலும் அப்படித்தான்.
கூச்சலையும் குழப்பத்தையும் எங்கோ விட்டு விட்டு
இருளும், வெயிலும் மாறிமாறி வரும்
இப்பள்ளத்தில் நடப்பது ஆனந்தம்.
மலர்கள் இவ்விடத்தைச் சொர்க்கம் ஆக்குகின்றன.
அவற்றைப் பறித்து
என் கொள்ளையைத் திரட்டுகிறேன்.
என்னைவிட யாருக்கும் தெரியாது,
பறிக்கும்போதே இவை வாடும் என்பது.
இவற்றின் சோபை எப்படி மங்குகிறது !
இம் மலர்களுக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமா ?
அவை பிரகாசமாய் மலரும் இடந்தான்
உனக்குத் தெரியுமே ! நினைவைக் கேள்.
திக்கும் உன் கவிதைக்கு அவள் உதவுவாள்.

புத்தக வேலை முடிந்துவிட்டதால், தாருவுக்கு வேலை ஒன்றும் இல்லை. ஸம்ஸ்க்ருதம் பயின்று, தம் நெடுநாளைய ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளத் திரும்பினார். 'அப்பாவும் நானும் ஸம்ஸ்க்ருதம் பயிலப் போகிறோம்.' டிசம்பர் 4-ம் தேதி, பயிற்சியைத் தொடங்கினார். இராமாயணத்தையும், மகா பாரதத்தையும் மூலத்தில் பயில வேண்டும் என்பது தாருவின் பேரவா.

இடையே, தினசரித் திட்டம் ஒழுங்காக நடந்து வந்தது. அவ்வப்போது வெளியிலிருந்து நண்பர்கள் வந்தார்கள். இங்கிலாந்திலிருந்து செல்வி ஆடா ஸ்மித் என்ற நண்பர் கல்கத்தாவுக்கு வந்திருந்தார். அவரை, தத் குடும்பத்தினர் போக்மாரி தோட்ட வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். வெளி நாட்டிலிருந்து வந்த விருந்தினருக்கு, தாருவின் அத்தை, தம்முடைய நவரத்தினங்கள் உள்ள நகைப் பெட்டியைக் காட்டினார். செல்வி ஸ்மித்தை, போக்மாரி வீடும் தோட்டமும் மிகவும் கவர்ந்தன. 'இந்த

பூலோக சொர்க்கத்தை விட்டுவிட்டு, எதற்காக வெளிநாடு செல்ல, தத் குடும்பத்தினர் விரும்பினார்கள்' என்று சொல்லி ஸ்மித் ஆச்சரியப்பட்டாள்.

வேல்ஸ் இளவரசரை வரவேற்க, பெரிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. டிசம்பர் மாதத்தை ஒட்டி, ராஜாக்களும், மகாராஜாக்களும் கல்கத்தாவுக்கு வந்து கொண்டிருந்தார்கள். கோட்டையும், அடுத்த விடுதிகளும், புதிய வண்ணம் பூசப் பெற்றன. பெரிய வரவேற்பு வளைவுகள் எழுந்தன. இத்தனைக்கும் இளவரசர் கல்கத்தாவில் ஒரு வாரந்தான் தங்குவதாக இருந்தது. இதற்கு இத்தனை ஆர்ப்பாட்டம். தமக்கு முத்தாலும், மணியாலும் ஆன ஆடை ஒன்றைத் தயாரிக்க, ஒரு ராஜா கட்டளை இட்டார். இதற்குப் பதினைந்து லட்ச ரூபாய் செலவு. தம்முடைய ராஜ்யத்தில் இளவரசர் தங்குவதற்கு, முப்பது லட்ச ரூபாய் செலவழிக்க அவர் தயாராய் இருந்தார்.

இந்த சமயத்தில்தான், தாருவின் பிரஞ்சு மொழி பெயர்ப்பு நூலை வெளிக் கொணர, புத்தகம் வெளியிடுபவர் ஒருவரிடம் கோவின் அதைக் காட்டினார். ஆனால் கல்கத்தா பதிப்பகங்களின் உரிமையாளர்கள் சிறிது பயந்த சுபாவம் உடையவர்கள். கோவின் முதலில் சந்தித்தவர் இன்னொருவரிடம் கை காட்டினார். இப்படியாக, தாருவின் முதற் புத்தகம் வெளியிடப் பெறாமல், வெளிவரும் என்ற நம்பிக்கைகூட இல்லாமல் ஓராண்டு கழிந்தது.

தாரு ஸம்ஸ்க்ருதம் பயில்வதில் முழு மூச்சோடு முனைந்தார். மொழிகளைக் கற்பதில் அவருக்கிருந்த பேராற்றலால், சிறிது காலத்திற்குள், ஸம்ஸ்க்ருதத்தை சரளமாக படிக்க அவரால் முடிந்தது. பத்து மாதங்களே அவருக்குக் கிடைத்த நேரம். அதற்குள் மறுபடியும் அவர் உடல்நலம் விரைவிலே குன்றியது. டாக்டரின் ஆலோசனையின்படி, செப்டம்பர் மாதம், ஸம்ஸ்க்ருதம் பயில்வதை அவர் விட்டுவிட வேண்டி வந்தது. ஸம்ஸ்க்ருதம் மிகக் கடினமாக இருக்கிறது என்று தமது நண்பரிடம் தாரு ஒப்புக் கொண்டார். இருந்தாலும் அம்மொழியில் ஆட்சி செலுத்தலாம் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் அம் மொழியைப் பிழையறக் கற்பதற்கு, ஆறு, ஏழு வருடங்கள் ஆகலாம் என்பதை அவர் உணர்ந்தார் ஸம்ஸ்க்ருதப் பயிற்சி தொடங்கியபோது, தாருவின் ஆர்வத்தைக் கண்டு, அவருக்குப் பாடம் சொல்லிய பண்டிதர் மிகவும் மகிழ்ந்தாராம். அவருடைய உழைப்பையும் ஊக்கத்தையும் பார்த்து, பெரிய சாதனைகளை அவரிடம் எதிர் பார்த்தாராம். தேவையான நேரம் மட்டும் தாருவுக்குக் கிடைத்திருந்தால், எவ்வளவு பெரிய ஸம்ஸ்க்ருதப் புலவராகத் தான் அவர் ஆகியிருக்கமாட்டார்? 1876 ஜூலையில் அவர் எழுதுகிறார்: 'ஸ்ம்ஸ்க்ருதத்தை விட்டு விடலாம் என்று நினைக்கிறேன்.'

ஸம்ஸ்க்ருத இலக்கணம் அவருக்குக் கடுமையாக இருந்தது. 'ரிஜுபாட'த்தில் மூன்று பாகங்களை முடித்துவிட்டு காளிதாஸனுடைய 'சாகுந்தல'த்தைத் தொடங்க இருந்தார்; ஆனால் அதற்குள்ளே, அவருடைய படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க நேர்ந்தது.

11. இருபது வயதில்

இளவரசர் வந்தார், போனார். போனதும், பெரிய காரியத்தைச் சாதித்து விட்டதைப் போல், தன்னைத்தானே தட்டிக் கொடுத்துக் கொண்டு, ஆரவாரமும், களியாட்டமும், வரவேற்பு ஆடம்பரமும் திகட்டின போல, கல்கத்தா நகரம் அடங்கியது. 1876 ஜனவரி மாதம் 11-ம் தேதியில் தாரு எழுதுகிறார்: 'போன திங்கட்கிழமை இளவரசர் போனார். அவரை நன்றாய்ப் பார்த்தேன். சிரித்த முகம், பொதுவாகச் சற்று அழகுடையது, விளையாட்டுத் துடிக்கும் நீல விழிகள். நல்ல சிவப்பு. ஆனால் தலையில் சிறிது வழுக்கை.' பெல்காசியாவில் நடைபெற்ற வரவேற்பில், மறுபடியும் அவரைத் தாரு பார்க்க நேர்ந்தது. இந்திய மக்களுடைய டாம்பீகச் செலவைக் கடுமையாகத் தாக்கி, அதைப் பற்றித் தாரு சொல்கிறார்: 'காஷ்மீர் மகாராஜா, குறைந்தது நாற்பது லட்சம் பெறுமான அங்கி அணிந்திருந்தார். போதாதா? அதோடு, இளவரசருக்குக் காணிக்கைகள் வேறு சமர்ப்பித்தார்: நூற்றியொரு காஷ்மீர சால்வைகள், வைரமும், மணிகளும் இழைத்த தங்க ஹுக்கா, தங்கத் தாலான தேத்தண்ணீர் பாத்திர வரிசை, சாப்பாட்டுத் தாம்பாள வரிசை, இன்னும் என்னென்னவோ, கதையிலும் கற்பனையிலும் வரும் பொருள்கள்.'

பாபு ஜகதானந்த முகர்ஜி, தம்முடைய வீட்டுக்கு இளவரசரை அழைத்து, தம் குடும்பத்துப் பெண்டிர் சிலரை அவருக்கு அறிமுகம் செய்வித்து, கல்கத்தாவில் பெரிய பரபரப்பை உண்டாக்கி விட்டார். அக்காலத்தில், வங்காள சமுதாயத்தில், அநேகமாகப் பெண்டிர் அனைவரும் 'பர்தா' அணிவது வழக்கம். ஆகவே பாபு ஜகதானந்தா, ஹிந்து சம்பிரதாயம் ஒன்றை மீறிவிட்டதாகத் தாரு சொல்கிறார். ஹிந்து சமுதாயத்திற்குப் பெருத்த அவமானத்தையும், பழியையும், பாபு தேடித்தந்து விட்டதாகப் பல வங்காளிகள் கருதினார்கள். தனிப்பட்ட முறையில், ஒருவர் வீட்டுக்கும்

இளவரசர் போகவில்லை. ஜகதானந்தா வீட்டுக்கு மட்டும் போனார். தம் வீட்டுப் பெண்டிரை அறிமுகம் செய்து வைப்ப தாக, ஜகதானந்தா சொன்னதே இதற்குக் காரணம், இது மன்னிக்க முடியாத குற்றம் என்று ஒரு பத்திரிகை குறை கூறியது. இதன்பிறகு, இந்த நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து, ஒரு நாடகம் மேடையிலே நடத்தப் பெற்றது. உடனே நார்த்புருக் பிரபு பிரிட்டிஷ் ஆட்சியின்பேரில் துவேஷம் மூட்டும் எந்த நாடக மும் நடிக்கப்படாது என்ற சட்டம் இயற்றினார். தாருவுக்கு இது வெல்லாம் வேடிக்கையாகப் பட்டிருக்க வேண்டும். அவருடைய அடக்கமான நகைச்சுவையோடு, தாரு ஒரு கதை சொன்னார்: 'இளவரசர் முப்பட்டைக் கண்ணாடிக் காம்பஸ்[1] ஒன்றைப் பார்த் தாராம். பக்கத்திலிருந்த பையனை 'இது என்ன?' என்று கேட் டாராம். பையன் 'இது ராயல் கம்-கம்-பாஸ்',[2] முப்பட்டைக் கண்ணாடிப் பெருமானே' என்று சொன்னானும்.'

கடைசியாக, தாருவின் புத்தகம் வெளியிடும் பருவத்தை அடைந்தது. தாரு மும்மரமாக அச்சுப் பிரதிகளைத் திருத்துவதில் ஈடுபட்டார். அச்சுப் பிழைகள் அவருக்கு வேடிக்கையாக இருந்தன. 'Honour's throne' (புகழின்-பெருமையின் சிம் மாதனம்) என்பதை 'Horror's throne' (பயங்கரத்தின் சிம்மாதனம்) என்று போட்டு விட்டார்கள். பிப்ரவரி மாதத்தில் 'கதிர்க்கட்டு' அநேகமாகத் தயாராகி விட்டது.

'பண்டைய இந்தியாவிற் பெண்கள்' La Femme dans L'Inde Antique) என்ற பிரஞ்சு நூலில் தாருவுக்கு இப்போது ஈடுபாடு ஏற்பட்டது. அந்நூலில் இந்தியக் காவிய, வரலாற்றுத் தலைவியரைப் பற்றி, ஒரு பிரஞ்சு மாது எழுதி இருந்தார். நூலின் ஆசிரியரான செல்வி கிளாரிஸ்ஸே பாதரை, அந்நூலை மொழி பெயர்ப்பதற்குத் தாரு அனுமதி கேட்டார். 'எங்கள் புராணக் கதைகள் எவ்வளவு மகோன்னதமானவை, பெருமை வாய்ந்தவை, அதே நேரத்தில் எவ்வளவு சோகமயமானவை என்பதை நீங்கள் காணவேண்டும். ஓர் இந்திய மனைவி, தன் கணவனிடம் காட்டும் பக்தியும், மனம்போனபடி அவன் நடந்தாலும், ''அதைச் செய்'' ''இதைச் செய்'' என்று என்னவெல்லாம் தன்னிடம் எதிர் பார்த்து வற்புறுத்தினாலும், அவன் மனம் கோணாதபடி கீழ்ப்படியும் பாங்கும், கணவனைத் தன் உயிராக, தன் தெய்வமாக வழிபடும் அன்பும், இவற்றையெல்லாந்தானே ஸ்பென்ஸர் (Spencer) பாராட்டுகிறார்!'

---

1 திசை காட்டும் கருவி.

2 ஆங்கிலத்தில் காம்பஸ் என்றால் திசை காட்டும் கருவி. கம்-கம்-பாஸ் என்றால் வந்து வந்து போதல், சிலேடையில் பிறக்கிறது இங்கே உள்ள நகைச்சுவை.

மார்ச்சு மாதம் 4-ம்தேதி, தாருவின் பிறந்த நாள். இருபது வயது தான் ஆயிற்று என்றாலும், மேரிக்கு அவர் எழுதுகிறார். 'ஆம், நான் கிழவியாகி வருகிறேன், இல்லையா? ஒரு பார்ஸி பெண் எனக்கு எத்தனை குழந்தைகள் என்று கேட்டாள். எனக்குக் கலியாணமே ஆகவில்லை என்று சொன்னேன். ஹிந்துக்களிடையே, கலியாணம் என்பது பெரிய காரியம். பதினைந்து வயது ஆகி, கலியாணம் ஆகாமல் இருக்கும் பெண்ணை எங்கள் நாட்டில் காண்பது அரிது.' அக்காலத்து இந்தியக் குடும்பங்களில், இருபத்தி நான்கு வயதிலே ஒரு பெண் அநேகமாகக் கிழவிதான். 'அப்பாவுக்கு வயதாகி வருகிறது. கிழவராகி வருகிறார். நானும் அப்படித்தான். சில சமயங்க்ளில் நான் கிழவி என்ற உணர்ச்சியே வருகிறது.'

தாருவின் பிறந்த நாளன்று, பிரான்சிலிருந்து, செல்வி பாதரின் புத்தகம் வந்து சேர்ந்தது. அன்றே, தாருவின் 'கதிர்க்கட்டும்' வெளியாயிற்று. அதன் பிரதி ஒன்றை, மேரிக்குத் தாரு அனுப்பினார். அப்போது எழுதினார்: 'பத்திரிகைகள் என் புத்தகத்தைப் பற்றி என்ன சொல்லப் போகின்றனவோ? பாராட்டலாம், குறை கூறலாம். உணர்ச்சிகளை ஒதுக்கி, வருவது வரட்டும் என்று திடமாக இருக்கிறேன்.'

தம்முடைய இனத்தாரைப் பற்றி, தாரு கடுமையாகச் சில சமயங்களில் பேசுவது உண்டு. தம்முடைய பாட்டி கிறிஸ்துவர் ஆகவில்லையே என்று தாருவுக்குக் குறை. ஆனாலும், 'கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலரைவிட, அவர் எவ்வளவோ உயர்ந்தவர்.' கல்கத்தாவைப் பற்றியும், அங்கிருந்த இந்திய கிறிஸ்தவர்களைப் பற்றியும், தாரு தரும் மதிப்பீடு சுவையாக உள்ளது. 'கல்கத்தா பாபச் சாக்கடை! ஹிந்துக்களிடையே மாத்திரம் இல்லை, (அவர்களிற் பலர் நல்லவர்கள்), வங்காளக் கிறிஸ்தவர்களிடையே கூட எவ்வளவு ஒழுக்கக்கேடு! இதில், மிகுந்த வருத்தம் தருவது எது தெரியுமா? கிறிஸ்தவத்தைப் பற்றி, ஹிந்துக்கள் மோசமாக எண்ணுகிறார்கள். ஆயிரம் பாபங்களை அதன் மறைவில் செய்வதற்காக, சிலர் விரித்துக் கொண்ட போர்வையே கிறிஸ்தவம் என்று நினைக்கிறார்கள். இதோடு நிறுத்திக் கொள்கிறேன். வங்காளி கிறிஸ்தவ சமுதாயத்தின் நடைமுறையும், ஒழுக்கமும்(சிலர், மிகச் சிலர், அதற்கு விதிவிலக்கு), எப்பேர்ப்பட்ட மகிழ்ச்சி உடைய உள்ளத்தையும் துயரத்தில் ஆழ்த்திவிடும், எப்பேர்ப்பட்ட நம்பிக்கை உடையவரையும் சோர்வடையச் செய்யும்.'

ஒவ்வொரு நாளும், பத்திரிகைகளைத் தாரு கவனமாகப் படிப்பது வழக்கம். மேரிக்கு எழுதிய கடிதங்களில், சில போலீஸ் விவகாரங்களைப் பற்றி வந்த செய்திகளைப் தாரு குறிப்பிடுகிறார். ராணு

வத்தைச் சேர்ந்த ஒருவன் ஒரு மயிலைச் சுட்டு விட்டான். அந்தக் கிராமத்தினர் அவனைத் தாக்கினார்கள். கிராமத்தார் பேரில் வழக்குத் தொடரப் பெற்றது. பட்டாளத்துக்காரன் குற்றம் செய்யவில்லை என்று விடுதலை செய்யப்பெற்றான். ஏன? 'ஒரு சிப்பாயின் உயிர், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பார்வையில் அவ்வளவு அரிய பொருளாய் இருந்தது.'

சில சிப்பாய்கள் ஒன்பது வங்காளிகளைக் கொன்று விட்டார்கள். ஏழு வங்காளிகளுக்குக் காயம். வேறு பல அக்கிரமங்கள். பிரிட்டிஷாருக்கு விரோதமான கசப்பு உணர்ச்சி, இங்கிலாந்திலேயே பயிற்சி பெற்ற தாருவின் மனத்திலும் தலைதூக்கியது. ஒரு பையனுக்கு மூன்று வாரம் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். அவன் தன்னைக் கடிக்க வந்த சில நாய்களைத் தற்காப்புக்காகத் தாக்கினான். இது குற்றமாயிற்று. காரணம், அந்த நாய்கள் ஓர் ஆங்கிலேயனுக்குச் சொந்தம். 'பத்திரிகைகள் அவமானமான இந்தப் பச்சை அநீதியைக் கண்டிக்கின்றன. பையனுக்கு இந்தத் தண்டனை விதித்த மாவட்ட நீதிபதியை, சட்டத்தை இவ்வளவு பயங்கரமாக முறுக்கிச் சிதைத்ததற்காக, பதவியிலிருந்து உடனே நீக்கியிருக்க வேண்டும். இங்கிலாந்தில் இதேமாதிரியான சந்தர்ப்பத்தில், ஒரு பையனை நீதிபதி கடுஞ்சிறைக்கு அனுப்பினால், என்ன அமர்க்களம் நடந்திருக்கும், எண்ணிப் பார்.' இன்னொரு அநீதி: தன்னுடைய குதிரைக்காரனைக் கொன்ற ஆங்கிலேயன் ஒருவனை, லிட்டன் பிரபு உரிய முறையில் தண்டிக்காமல் இலேசாக விட்டு விட்டார். 'ஓர் ஆங்கிலேய நீதிபதியின் பார்வையில், இந்தியன் ஒருவனுடைய உயிர் எவ்வளவு அற்பமாகத் தோன்றுகிறது, பார்த்தாயா?' குற்றவாளி ஒரு பிரிட்டிஷ்காரன் என்பதற்காக, அவனுக்குப் பிரம்படி கொடுப்பதற்குக்கூட, லிட்டன் பிரபு தடை எழுப்பினாராம். இத்தனை இருந்தும், தாருவுக்கு லிட்டன் பிரபுவிடம் மரியாதை உண்டு. தம்முடைய பிரஞ்சு நாவலை அவருக்குச் சமர்ப்பணம் செய்தார்.

கடிதங்கள் பலவற்றில், 'இந்தியன்' என்பதற்குப் பதிலாக 'சுதேசி' என்ற சொல்லை, இந்தியர்கள் (சிறப்பாகக் கிறிஸ்தவர்கள்) தம்மைப் பிரிட்டிஷ் கிறிஸ்தவர்களிடமிருந்தும், ஆங்கிலோ-இந்தியர்களிடமிருந்தும் வேறுபடுத்திக் காட்டத்தானோ என்னவோ, பொதுவாகப் பயன்படுத்தினார்கள். எப்படியிருந்தாலும் தாரு அந்தச் சொல்லைப் பயன்படுத்தியது, அவ்வளவு நன்றாக இல்லை. 'சுதேசி' என்ற சொல்லைக் கேட்டதும், கறுப்பர்களை வெள்ளையரிடமிருந்து பிரித்துக் காட்டும் வசைச் சொல்லாகவே அதைப் பல வங்காளிகள் கருதினார்கள். இந்தியர்களைக் 'கறுப்பர்கள்' என்று, ஆப்பிரிக்க நீக்ரோக்களுக்குச் சமமாக இழிவுபடுத்தி வெள்ளையர்கள் பேசுவதும் உண்டு. 'சுதேசி' என்ற

சொல் இழிந்த பொருள் ஏற்றுவிட்டது என்பதைச் செல்வி மார்ட்டின், தாருவுக்குச் சுட்டிக் காட்டி இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. தம்மைத் திருத்தியதற்காக, செல்வி மார்ட்டினுக்குத் தாரு நன்றி தெரிவித்தார். இனிமேல் எச்சரிக்கையாய் இருப்பதாகவும் சொன்னார்.

வங்காளிகளைப் பிரிட்டிஷார் எப்படி நடத்தினார்கள் என்பதில் தாரு மிகுந்த அக்கறை காட்டினார். இளவரசருக்காக ஏற்பாடு செய்யப்பெற்ற பொதுக்கூட்டமொன்றில், வங்காளி ஒருவரை மரியாதையின்றி மேடை மீதிருந்து ஆங்கிலேயன் ஒருவன் தள்ளி விட்டான். இதைப் பார்த்த இளவரசர், உடனே தம் மெய்க் காப்பாளரை அனுப்பி, அந்த ஆங்கிலேயன் அவ்வளவு அநாகரிகமாக நடந்து கொள்வதைத் தடுத்தாராம்.

இந்திய மாதர்களின் நிலையிலும், சமுதாயத்தில் அவர்களுக்கிருந்த மதிப்பிலும் தாரு கவனம் செலுத்தினார் என்றாலும் அவ்வளவுக்கு அதிகமான அக்கறை காட்டவில்லை. தம்முடைய குறுகிய வாழ் நாளில், படிப்பிலும், எழுத்திலும் ஒரே அடியாக ஆழ்ந்த காரணத்தால், சமுதாயச் சீர்திருத்தத்திற்கோ அதை ஒட்டிய பணிக்கோ, தாருவால் அதிக நேரம் ஒதுக்க இயலவில்லை. ஆனந்த மோகன் போஸ் என்ற அறிவாற்றல் படைத்த வங்காளி-அவரைத் தாரு கேம்பிரிட்ஜிலேயே அடிக்கடி சந்தித்ததுண்டு - கல்கத்தாவில் தாருவைக் காண வந்தார். அப்போது, ஐரோப்பிய பயணத் திட்டத்தைத் தாருவும் அவர் தந்தையும் கைவிடவில்லை, எப்படியும் போகலாம் என்ற நம்பிக்கை இன்னும் இருந்தது. தாரு எழுதுகிறார்: 'வயதுவந்த பெண்களுக்கென்று நடத்திவந்த பள்ளிக்குத் திரு போஸ் என்னை அழைத்தார். அவர் பள்ளியில் பயின்ற பெண்கள் வைதீக ஹிந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இல்லை. அவர்கள் கேசவ சந்திர ஸென் தொடங்கியிருந்த புதிய மார்க்கமான பிரும்ம ஸமாஜத்தைச் சேர்ந்தவர்கள். அநேகமாய் நாங்கள் ஐரோப்பா செல்வோம் என்பதைக் கேட்டதும் திரு போஸுக்கு வருத்தம், என்னுடைய நாட்டுப் பெண்களுக்குக் கல்வியளிக்கும் பணியில், அவருக்கு நான் மிகுந்த உதவியாய் இருப்பேன் என்று அவர் எதிர் பார்த்தார்.'

தாரு வாழ்ந்த இந்திய கிறிஸ்தவ சமுதாயத்தினரிடையே இருந்த சுதந்திரம், அவரை வைதீக ஹிந்து உலகத்தின் வளைந்து கொடாத சட்ட திட்டங்களிலிருந்து காத்தது. ஆகவே, இந்திய மாதரை நெருங்கிய பிரச்சினைகளைப் பற்றி அவர் எண்ணவில்லை. ஐரோப்பாவில் தமக்கு அதிக சுதந்திரம் இருந்தது என்று மாத்திரம் சொல்லி தம் நாட்டை எண்ணிக் குறைப்பட்டுக் கொண்டார். வங்காள சமுதாயத்தோடு அவரால் கலந்து பழக முடியவில்லை. காரணம், இருந்த சபைகளெல்லாம் ஆடவர்க்கே

இருந்தன. பொதுவாக, பெண்கள், வீட்டுக்குள்ளேயே அடைத்துக் கிடக்கும்படி வைக்கப் பெற்றுர்கள்.

தாருவின் கடைசி நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. அவர் எழுதினுர். 'அப்பா மிக எச்சரிக்கையாக இருக்கிறுர். என்னை ஒரு கண்ணுடிக் கூட்டுக்குள்ளே வைத்துவிடுங்கள் என்று அவரிடம் சொல்கிறேன். அவர் நினைக்கிறபடி அல்லது அஞ்சுகிற படி அவ்வளவு நோஞ்சாளுக நான் இல்லே.' விக்டர் ஹ்யூகோ எழுதிய புத்தகங்களை அப்பா கொணர்ந்தார். 'கதிர்க்கட்டு' நன்ருக விற்பனையாகி வந்தது. இரண்டாம் பதிப்புப் போட வேண்டிவரும் என்று தோன்றியதால், தாரு இன்னும் சில பிரஞ்சு கவிதைகளை மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். 'கல்கத்தா ரிவ்யூ' என்னும் பத்திரிகையில், தாருவின் கவிதைகளிற் சில, பிரசுரத்திற்கு ஏற்கப்பெற்றன. 'அப்பாவுக்கு ஒரே மகிழ்ச்சி, எனக்குந்தான். ஏனென்ருல், "கல்கத்தா ரிவ்யூ" இந்தியா விலேயே, அதுபோன்ற பத்திரிகைகளிற் சிறந்தது.'

'வங்காள மாகஸின்' தாருவின் எழுத்துக்களை விரும்பி, அவரிடம் வேண்டியது. உடனே தாரு, ஸுலரே (Soulary), ஸெண்ட் போவ் (Sainte Beuve), காம்தே த கிராமான் (Comte de Gramont), அகஸ்தே வாகர்த்தே (Auguste Vacquerie) முதலிய பல பிரஞ்சு கவிஞர்களின் பாடல்களை மொழிபெயர்த்தார். 'வங்காள மாகஸினில்' வெளிவந்த கட்டுரை ஒன்றில், இதைப் பற்றிக் குறிப்பிட்ட கோவின், 'கவிஞன் ஸுலரேயின் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு "கதிர்க்கட்டி"ல்தான் உள்ளது' என்று எழுதினுர்.

1876 டிசம்பர் மாதத்தில் தாருவின் நோய் முற்றியது. வழக்க மாக வரும் டாக்டர் ஊரில் இல்லாததால் மருத்துவக் கல்லூரி யிலிருந்து, டாக்டர் ஸ்மித் என்பவர் தாருவுக்கு வைத்தியம் பார்க்க வந்தார். தாரு இரத்தமாகத் துப்புவதை, மருந்துகளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. டிஜிடாலிஸ் என்ற மருந்துங்கூடப் பயன் தருவதாகக் காணும். தாருவுக்கு இரத்த நாளத்தில் ஊசி மூலம் மருந்து செலுத்தினுர்கள். மேரிக்குத் தாரு எழுதினுர். 'டாக்டர் ஸ்மித் என்னைக் காணவந்தபோது, மருத்துவர் என்ற முறையில் கேட்க வேண்டிய கேள்விகளைத்தான் கேட்டார். வேறென்றும் பேசவில்லை. சட்டென்று மேசையைத் திரும்பிப் பார்த்தார். அங்கே என்னுடைய "கதிர்க்கட்டி"டின் பிரதி ஒன்று கிடந்தது. அதனுடைய ஆரஞ்சு அட்டைப் பகட்டோடு டாக்டர் முகத்தில் புதிய ஒளி உதயமாயிற்று. "நீதான் இந்தப் புத்தகத்தின் ஆசிரியரா?" என்று கேட்டார். உடனே அவருக்கு என் உடல் நலனில் ஏற்பட்ட இரண்டு மடங்கு அக்கறையை நீ பார்த்திருக்க வேண்டும்? "இந்தச் சிறுமியா இந்நூலின் ஆசிரியர்?"

அவருக்கு ஆச்சரியம், மகிழ்ச்சி, என்னிடத்தில் தனி அக்கறை. ஆகவே "கதிர்க்கட்டு"ம் ஏதோ ஒன்றைச் சாதித்துவிட்டது.'

12. முடிவு

செல்வி கிளாரிஸ்ஸே பாதரோடு தாருவுக்கு ஏற்பட்ட ஆழ்ந்த நட்பு, அவருடைய வாழ்க்கையின் அழகான நிகழ்ச்சிகளில் ஒன்று. செல்வி பாதர் பிரஞ்சு மொழியில் இயற்றிய 'பண்டைய இந்தியாவின் பெண்மணிகள்' என்ற நூலை மொழிபெயர்க்க அனுமதி வேண்டி, 1877-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதி, அவருக்குத் தாரு எழுதினார். கடிதத்தோடு தாம் இயற்றிய 'கதிர்கட்டி'ன் பிரதி ஒன்றையும் அனுப்பினார். கிளாரிஸ்ஸே பதில் எழுதினார்: 'கங்கைத் தீபகற்ப ஆரியர்களுக்கு என் நூலை சமர்ப்பணம் செய்தேன். அந்த நூலில் நான் பாராட்டும் இந்தியத் தலைவியரின் வமிசத்தில் வந்த ஒருவரா என் நூலை மொழிபெயர்க்க விரும்புகிறார்?' மொழிபெயர்க்க அனுமதி உடனே வழங்கப் பெற்றது. பெண்மணிகளின் வரலாறொன்றை நான்கு தனி நூல்களாக கிளாரிஸ்ஸே எழுதியிருந்தார். இந்திய, ஹீப்ரு, கிரேக்க, ரோமப் பெண்மணிகளைப் பற்றி அவை அமைந்திருந்தன. பைபிளில் வரும் பெண்களைத் தவிர, உலகப் பெண்களுக்குள், தூய்மையிலும், விசுவாசத்திலும் சிறந்தவர்கள் பண்டைய இந்தியப் பெண்மணிகளே என்று கிளாரிஸ்ஸே கண்டார்.

'எங்கள் நாட்டுப் பண்டைக் காவியங்களின் தலைவியராக வரும் பெண்கள் அனைவரும் பாராட்டுக்கும் அன்புக்கும் உரியவர்கள் என்று என்னால் சொல்ல முடிவதிற் பெருமை அடைகிறேன். சீதையைவிட, அன்புக்குகந்த, நெஞ்சை நெகிழவைக்கும் காவியத் தலைவி யாராவது இருக்க முடியுமா? ஏது, எனக்குத் தோன்றவில்லை.' இவ்வாறு கிளாரிஸ்ஸேக்குத் தாரு எழுதினார். கிளாரிஸ்ஸேயை நேரிற் காணவேண்டும் என்று தாருவுக்கு இருந்த விருப்பம் நிறைவேறவே இல்லை. 1877 ஏப்ரல் 13-இல், தான் மிகவும் நோயுற்றிருந்ததாகக் கிளாரிஸேக்குத் தாரு எழுதினார். 'உன்னிடமிருந்து ஒரு கடிதம் உன்னுடைய படத்தோடு வந்தால், அது எனக்கு எவ்வளவோ நன்மை செய்யும். எங்கள் திட்டங்கள் எல்லாம் மாறிவிட்டன. ஏப்ரலில் எங்களால் ஐரோப்பாவுக்கு வர முடி

யாது. மனிதன் திட்டமிடுகிருன், இறைவன் நிறைவேற்றுகிருன்.' இதன் பிறகு ஜுலை 30-இல், அதாவது இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன் எழுதிய சில வரிகளைத் தவிர, தாருவால் எதுவும் எழுத முடியவில்லை. முடிவு அவ்வளவு விரைவிலே வந்துவிட்டது என்பது தெரியாமல், செப்டம்பரில் கிளாரிஸ்ஸே எழுதினர் : ' அஞ்சலைத் தவறவிட்டு விட்டேன். ஆகவே, என் கடிதம் தாமதமாய் வருகிறது. என்ன, உன் படத்தில் நான் காணும் உயிராற்றலைக் குறைக்கும் அளவுக்கா உன் நோய் உள்ளது? சுடர் விடும் அந்த அழகிய விழிகள் பொலிவிழந்து மங்குமா? ஏது, என்னுல் நம்ப முடியாது. இந்த நோயெல்லாம், இன்றிருந்து, நாளை போய்விடும்.'

இப்படி எழுதிய கிளாரிஸ்ஸே, செப்டம்பர் 10-இல் கோவின் எழுதிய கடிதத்தைக் கண்டு அதிர்ந்து போய் இருக்கவேண்டும். தம்முடைய மகள் தாரு ஆகஸ்டு 30-இல் மறைந்துவிட்டார் என்று அக்கடிதத்தில் கோவின் எழுதியிருந்தார். ஒரு தடவை கூட நேரிற் காணுவிட்டாலும், தாருவை மிகவும் நேசித்த கிளாரிஸ்ஸேக்கு, இந்திய கலாசாரத்தில் சிறந்ததையும், ஐரோப்பிய கல்வியில் உயர்ந்ததையும் ஒன்ருகக் கலந்து, உலகுக்கு அழகுச் சித்திரமாய் வழங்கிய இந்தியக் கிறிஸ்தவச் சுடர்மணியாகவே தாரு காட்சி அளித்தாள்.

தாருவுடைய வாழ்க்கையின் கடைசி ஆண்டில், அவரைக் காண்பதற்கும், அவருக்குத் தம்முடைய வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவிப்பதற்கும் பிரபலமான பல நண்பர்கள் வந்தார்கள். அவர்களில் இருவர் ஸர் வில்லியம் ஹண்டரும், ஆனந்த மோகன் போஸும் ஆவர். இப்போது புத்தகங்களைப் படிப்பதில் முன்னினும் அதிகமாகத் தாரு ஆழ்ந்தார். ஸெண்ட் போவ், விக்டர் ஹ்யூகோ இவர்கள் நூல்களைப் படித்து வந்தார். லண்டனிலிருந்து ஹாச்சட்ஸ் கம்பெனியார் வேறு, புதிய புத்தகங்களை அனுப்பி இருந்தார்கள். ஆனுல், தாருவின் நோய் மிகவும் முற்றியது. ஜுன் மாதத்தில் மேரிக்கு அவர் எழுதினர் : ' வலது கழுத்துப்பட்டை எலும்புக்குக் கீழே பதினைந்து நாட்களுக்குள் மூன்று பிளாஸ்திரிகள் போட்டிருக்கிருர்கள். மிகுந்த வேதனைப் படுகிறேன். பைத்தியம் பிடித்த மாதிரி ஆகி விடுகிறேன். ஒரு பிளாஸ்திரி போட்ட இடம் இன்னும் ஆறவில்லை.' அடுத்த மாதம் அவர் எழுதினர் : ' நம் சிலுவைகளைத் தாங்குவதற்கு, பரம பிதா நமக்கு உதவட்டும்.' நியூமன் எழுதிய தோத்திரப் பாடல் ஒன்றிலிருந்து,

எனக்கு வரும் ஒரு கண்ணீர்த் துளியையோ
ஒரு துயர நெடு மூச்சையோ
இழக்க நான் விரும்ப மாட்டேன்.

என்ற சொற்களை எடுத்து எழுதியிருந்தார். 1873-ஆம் ஆண்டில் இந்தியாவிற்குத் திரும்பிய பிறகு, மேரிக்குத் தாரு எழுதிய 53 கடிதங்களில், இதுவே கடைசிக் கடிதம்.

மூன்று அன்புக் குழந்தைகளையும் இழந்து, சாவை எதிர் நோக்கி, போனவர்களின் குரல்கள் நினைவே துணையாய், வருந்தி நின்ற தாருவின் வயதான பெற்றோர்களின் நிலையைக் கற்பனை செய்து பாருங்கள். எல்லாம் இருந்தன, அருவும் தாருவும் அன்பு சொரிந்து பராமரித்த குதிரைகள், பூனைகள், மரங்களும், மலர்களும், பணியாட்கள், எல்லாம் இருந்தன. ஆனால் அவர்கள் எங்கே? அறிவும் அழகும் நிரம்பிய அவ்விரு பெண்களும் எங்கே? தாருவின் சிரிப்பும், பாட்டும் புலமையும், களங்கமற்ற பாங்கும் எங்கே போயின? ஆனால், அப்ஜூவும் அருவும் தாருவும், தமது தாயோடும் தந்தையோடும் திரும்பச் சேரும் காலம் வரும், பிறகு பிரிவே இல்லை. அந்தக் காலம் வரும் என்றுதானே கிறிஸ்தவம் முழங்குகிறது? இந்த நம்பிக்கையில்தான் தாருவின் வயதான தந்தை, நடுங்கும் கைகளோடு, தாரு எழுதிவைத்திருந்தவற்றை யெல்லாம் தேடித் திரட்ட வலிமை பெற்றார். தம்முடைய மக்களின் நினைவில், அவர்களுக்குத் தாம் இன்னும் ஆற்றவேண்டிய பணியில் - சிறப்பாகத் தாருவுக்குச் செய்ய வேண்டிய கடமையில் ஆழ்ந்துதான் தாருவின் மறைவுக்குப் பிறகு, தமக்கிருந்த சில ஆண்டுகளை ஏற்று கோவின் வாழ முடிந்தது.

சுற்றி எங்கும் புத்தகங்கள் சிதறிக்கிடக்க, தாரு இறந்தார் அவருடைய மறைவைப் பற்றி, மேரிக்கு எழுதிய கோவின், ஜூலை வரையில் வந்த மேரியின் கடிதங்கள் எல்லாவற்றையும் தாரு படித்தார் என்றும், அது அவருக்கு இதமளித்தது என்றும் சொல் கிறார். ஆகஸ்டு 30-இல், ராம்பகனில் முடிவு வந்தது. அப்போது தாருவுக்கு வயது, 22 ஆண்டு 4 மாதம். ‘இரட்சகர் இயேசு கிறிஸ்துவிடம் தளராத நம்பிக்கையுடன் பூரண அமைதியுடன் அவர் உயிர் பிரிந்தது.’ தாரு மறைந்த மறு நாள், மேரிக்கு கோவின் எழுதினார்: ‘இந்த மண்ணிலிருந்து தாரு போய் விட்டாள். நேற்றிரவு 8 மணிக்கு அவள் எங்களைப் பிரிந்து சென்றாள், அவள் முடிவு பூரண அமைதியாய் இருந்தது.’ அப்பர் ஸர்குலர் சாலையில் உள்ள ஸி.எம்.எஸ். கல்லறையில் அவர் அடக்கம் செய்யப்பெற்றார். அவர் கல்லறைக் கல்லில் கீழ்க்கண்ட குறிப்பு காணப்படுகிறது:

தாரு தத்
கோவின் சந்திர தத்தின்
கடைசி மகள்
பிறப்பு: மார்ச், 4, 1856.
இறப்பு: ஆகஸ்டு, 30, 1877.

‘ சாவு வரையில் விசுவாசத்தோடு இரு
உனக்கு நான் வாழ்வின் மணிமுடியை அருள்வேன். ’

இன்று வரையில், தாருவும், அவர் சகோதரனும், சகோதரியும் அடக்கம் செய்யப் பெற்ற அந்தத் துயர இடம், இளம் உயிர்கள், காலம் வருமுன்பே பறித்துச் செல்லப்பட்டதற்குச் சான்ருக உள்ளது. அவர்கள் மட்டும் இன்னும் சிறிது காலம் வாழ்ந்திருந்தால், என்னவெல்லாம் சாதித்திருக்கலாம் என்ற எண்ணமும் அந்த இடத்தில் வருகிறது. கிளாரிஸ்ஸேக்குக் கோவின் சந்நர் எழுதுகிருர் : ‘ பிரிவும், துயரும் அற்ற நாட்டுக்கு அவள் போய் விட்டாள். அவளுடைய இரட்சகரிடம் அவளுக்கிருந்த விசுவாசம் எல்லையற்றது. அவளுடைய ஆன்மா அமைதியை உணர்ந்தது, அறிவுக்கு அப்பாற்பட்ட அமைதி........அவளைவிட இனிய சுபாவம் படைத்த குழந்தை இருக்க முடியாது. அவள் என் கடைசிக் குழந்தை. முதுமைப்பருவத்தில், நானும் என் மனைவியும் தனியே விடப்பெற்ருேம். எங்கள் மூன்று அன்பு மக்களுடைய குரல் ஒலித்த வீடு, இப்போது சூனியமாய், வெறித்தோடிக் கிடக்கிறது. ஆனல், நாங்கள் முழுதும் கைவிடப்படவில்லை. ஆறுதல் தரும் இரட்சகர் எங்களோடு இருக்கிருர். காலம் வரும். அப்போது அவர் சன்னிதியில் நாங்கள் சந்திப்போம். பிறகு பிரிவு ஏது ?’

13. கதிர்க்கட்டு

‘ பிரஞ்சு வயல்களில் திரட்டிய கதிர்க்கட்டு ’ திருமதி கோவின் சந்திர தத்துக்கு சமர்ப்பணம் செய்யப்பெற்றது. கவிஞர் ஷில்லர் (Schiller) எழுதிய சில வரிகள் சமர்ப்பணத்தில் காணப்பெறுகின்றன.

அன்னிய வெயிலில் நாட்டில்
அலர்ந்த மலர்கள், கனிகள்,
அன்னிய நாட்டில் சேர்த்த
அவற்றை இங்கு கொணர்வேன்.

1876-இல் வெளிவந்த பதிப்பில், முன்னுரையோ முகவுரையோ இல்லை என்ருலும், அதை அப்படியொன்றும் ஒதுக்கத்தக்கச் சிறு புத்தகமாகக் கருதுவதற்கில்லை. இந்த இந்தியப் பதிப்பு 252 பக்கங்கள் கொண்டது. 40 பக்கங்கள் உரைக் குறிப்புக்கள்.

அவை பிரஞ்சு இலக்கியத்தில் தாருவுக்கு இருந்த ஆழ்ந்த அறிவையும், உள்ளுணர்வையும் புலப்படுத்துகின்றன. உள்ள 165 பாடல்களில் எட்டுப் பாடல்கள் அருவும், மற்றவை தாருவும் இயற்றியுள்ளவை. நூலில் காணப்பெறும் மொழிபெயர்ப்புக்கள், எழுபது சிறந்த பிரஞ்சு கவிஞர்களின் பாடல்களின் ஆங்கில வடிவம். து பெல்லே (Du Bellay), ல காம்டே த கிராமான் (Le Compte de Gramont), த ஃப்ளோரியன் (De Flarion), த வினி (De Vigny), பேரங்கர் (Beranger), ஸெண்ட் போவ் (Sainte Beuve) இன்னும் பலர்.

முதற் பதிப்பு விரைவிலே விற்பனையாகிவிட்டது. இரண்டாம் பதிப்பு வெளியிடுவதற்கான முயற்சியை தாரு மேற்கொண்டார். அது வெளி வந்தபோது, பார்ப்பதற்கு அவர் உயிரோடு இல்லே. முதற் பதிப்பு வெளிர் நீல அட்டையில் தங்க எழுத்துக்களோடு வெளிவந்தது. ஆனால், காஸ் அதைச் சிறிதும் கவர்ச்சியில்லாத ஆரஞ்சு துண்டுப் பிரசுரம் என்று சொன்னதற்குக் காரணம், அது வெறும் காகித அட்டை போட்ட புத்தகம். இதைப் பற்றிய விளக்கத்தை பேரிக்கு எழுதிய கடிதத்தில், தாரு தருகிறார். காகித அட்டை போட்ட மலிவுப் பிரதிகளே, அவை கனமாக இரா, அனுப்புவதற்கு எளிது என்று கருதியே ஐரோப்பாவிற்கு அனுப்பி வைத்தார்கள். இவற்றில் ஒரு பிரதிதான், 'எக்ஸாமினர்' பத்திரிகை காரியாலத்தில், காஸ் கைக்கு வந்தது. பார்ப்பதற்குக் கவர்ச்சியின்றி இருந்த சிறு புத்தகமாய் இருந்தாலும் அது பலர் கவனத்தை ஈர்த்தது என்றால் அதற்குக் காரணம் உள்ளேயிருந்த தரமான கவிதைகளே. புத்தகத்திற்கு மதிப்புரை வழங்கியவர்களில் பிரபலமானவர்கள் பிரஞ்சு நாட்டு ஆந்த்ரே தூரியேவும் (Andre Theuriet), இங்கிலாந்து நாட்டு எட்மன்ட் காஸும் ஆவர்.

முதற் பதிப்பை வெளியிட்ட பவானிப்பூர் ஸப்தஹிக் ஸம்பத் அச்சகத்தாரே 'புதிய பதிப்பு' என்ற இரண்டாம் பதிப்பையும், 1878-இல் வெளியிட்டார்கள் மனமுடைந்த தந்தை கோவின் சந்திர தத் எழுதிய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்போடு அது வெளிவந்தது. இந்தக் குறிப்பை, 1877 அக்டோபரில் போக்மாரி தோட்ட வீட்டில் அவர் எழுதினார்.

இந்த முகவுரையில், எவ்வளவோ சிறந்த மருத்துவ உதவி தந்தும், தாருவைக் காப்பாற்ற முடியவில்லேயே என்று அவர் வருந்துகிறார். இந்தப் புதிய பதிப்பில் முப்பது புதிய பாடல்கள் சேர்க்கப் பெற்றன. பாடல்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 200 ஆயிற்று. பாடல்கள் இனம் பிரித்து தொகுக்கப் பெற்றிருந்தன. அரு, தாரு இருவருடைய படமும் புத்தகத்தில் சேர்க்கப் பெற்றது. 1880-இல் லண்டன் கெகன் கால் கம்பெனியார் மூன்றுவது பதிப்பை வெளியிட்டார்கள். 'இந்தியன் மாகஸின் அன்ட் ரிவ்யூ' என்ற பத்திரிகையில், தாருவின் இரண்டு கவிதைகளே,

ஸர் ராபர்ட் லெத்பிரிட்ஜ் என்பவர் வெளியிட்டு, அவரைப்பற்றி 'தாரு தத்தின் கவிதை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும் எழுதினர்.

'கதிர்க்கட்டு' வெளியானதும் என்ன மதிப்புரைகள் வருமோ என்று தாரு கவலையோடு எதிர்பார்த்திருந்தார். முதலிலே வந்த மதிப்புரைகளில், 1876 மே மாதம், 'வங்காள மாகஸின்' வெளியிட்ட மதிப்புரை ஒன்று: 'கடந்த இரண்டு ஆண்டுகளில், ஒவ்வொரு மாதமும், நமது பத்திரிகையில் வெளிவந்த அற்புதமான கவிதைத் துணுக்குகளை - அவற்றில் முக்கியமானவை புதுயுக பிரஞ்சு கவிதைகளின் மொழி பெயர்ப்புக்கள் - நமது வாசக நேயர்கள் சுவைத்து மகிழ்ந்திருப்பார்கள். பாடல்களை வழங்கியவர் தம்மை 'தி. டி.' என்று குறித்துக் கொண்டார். இக்கவிதைகளைத் திரட்டி, வேறு சில கவிதைகளையும் சேர்த்து, 234 ஆக்டெவோ பக்கங்கள் கொண்ட கவிதைத் திரட்டாக இப்போது வெளியிட்டிருக்கிறார்கள். 'வங்காள மாகஸினி'ல், தி டி. என்று தம்மைக் குறித்துக் கொண்டவர், 'தத் குடும்பத் திரட்டி'ன் ஆசிரியரான கோவின் சந்திர தத்தின் திறமை வாய்ந்த மகள் ஆவார் 'தி.டி.' என்ற எழுத்துக்கள் தாரு தத் என்ற பெயராக விரிந்துள்ளன. வங்காள குடும்பங்களில் மிகவும் அறிவாற்றல் வாய்ந்த ராம்பகன் தத் குடும்பத்தைச் சேர்ந்தவர் இந்த தாரு தத். இக் குடும்பத்தில் அநேகமாக ஒவ்வொருவரும், தமது அறிவால், ஆற்றலால் புகழ் படைத்தவர்கள். குடும்பத்தை நிறுவிய பாபு ரஸமய தத் அசாதாரணமான ஆற்றல் பெற்றவர். ஒன்றுமற்ற நிலையிலிருந்து அக்காலத்தில் உயர்ந்த பதவியான வேண்டுகோள் நீதி மன்றத்தின் கமிஷனராக உயர்ந்தவர். அவருடைய ஆண் மக்கள் இருவரை, ஆண்மையின் உச்சியில் நிற்கும்போதே அகாலத்தில், சாவு வீழ்த்தியது மற்றைய மூன்று ஆண் மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முறையே கோவிந்த், ஹரா, கிரீஷ் ஆவர். செல்வி தாரு தத்துக்கு அரு என்ற மூத்த சகோதரி இருந்தாள். அவள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் காலமானாள். இந்தக் கவிதைகளின் ஆசிரியரான தாருவைப்போல், அருவும் திறமை மிக்கவள். அவரும் நமது பத்திரிகைக்கு அவ்வப்போது எழுதி வந்தார். அவர் தம்மை 'ஏ டி' என்று குறித்துக் கொண்டார். செல்வி தத் ஒரு கிறிஸ்தவர்'

மற்றைய மதிப்புரைகளும் விரைவிலே தொடர்ந்தன. 'இங்கிலீஷ்மன்' பத்திரிகை ஆங்கிலச் செய்யுள் அமைப்பில் சில குறைகளைக் கண்டது; ஆனால் மொத்தத்தில் பாராட்டியது; 'அமான் பேரே' என்ற கடைசிக் கவிதையை மாசற்ற 'ஸானட்' என்று புகழ்ந்தது 'மதராஸ் ஸ்டான்டார்ட்' என்ற பத்திரிகை, தாருவை ஓர் ஆண் மகனாக எண்ணியது; அருமையான திறமை

உடையவர் என்றும், அவர் கவிதை, வரவிருக்கும் பெரிய சாதனை களுக்கு அறிகுறி என்றும் கருதியது ; தாருவுக்கு இந்தப் பத்திரிகை தம்மை ஆடவராகக் கருதியது விநோதமாகவும், அதே நேரத்தில் புகழ்ச்சியாகவுங்கூடத் தோன்றியது. 'இந்தியாவின் நண்பன்' என்ற பத்திரிகை, 'இந்த வங்காளச் சீமாட்டி, அருமையான நூலொன்றை நமக்கு அளித்திருக்கிறார். பிரஞ்சு கவிதைகள் பல வற்றை மதிப்பு மிக்க ஆங்கிலச் செய்யுளில் இந்நூல் தருகிறது' என்று கூறியது. 'இந்திய சாரிவாரி' என்னும் பத்திரிகை, 'இந்த நாட்டைச் சேர்ந்த ஒருவர் இயற்றியது என்று இந்நூலைக் கனவிற் கூடக் கருத இயலாது. மொழிபெயர்ப்புக்கள் மிக நளினமாக உள்ளன, பிரஞ்சு, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் ஆசிரியருக் குள்ள அறிவையும் காட்டுகின்றன !' என்று பேசியது. அநேகமாக எல்லா இந்தியப் பத்திரிகைகளும் நூலைப் புகழ்ந்தன.

பின்னர் அதே ஆண்டில், எட்மண்ட் காஸ் எழுதிய இரண்டு பத்தி மதிப்புரையை 'எக்ஸாமினர்' என்ற ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்டது. ஓர் இந்தியப் பெண், பிரஞ்சு மூலங்களின் செய்யுள் நடையிலேயே, அவற்றை மொழி பெயர்த்திருக்கிறாள் என்பதைப் பார்த்து காஸுக்கு வியப்பு. 'இந்த அதிசய சாதனையை வெற்றிகர மாகச் செய்திருக்கிறார்.' மொழி பெயர்ப்புக் கலையில், தாருவுக்கு இருந்த அபூர்வமான ஒரு தனித் தன்மை என்னவென்றால் மூலக் கவிதையின் பொருளையும் போக்கையும் இம்மியும் விலகாமல் தொடர்ந்து, அதை அப்படியே ஆங்கிலத்தில் துல்லியமாகக் கொணர்வதே. இதைக் குறித்து காஸ் சொல்கிறார் : 'ஆங்கிலேயன் ஒருவன் இக் கவிதைகளை மொழிபெயர்த்திருந்தால், ஆங்கிலம் இழுமென நடக்க வேண்டும் என்பதையே கவனிப்பான். ஆங்கிலம் கோணிவிடப்படாதே என்பதற்காக, மூலத்தை அப்படியே மொழிபெயர்க்கக் கூசுவான் ! ஆனால் தாருவோ, தம்முடைய செய்யுள் திறமைக்கும், கவிதை ஆற்றலுக்கும் குறைவந்தாற்கூட, அதைப் பாராட்டாமல், மூலத்தை உள்ளபடியே உண்மையாக மொழி பெயர்த்தார்.' இந்த மதிப்புரையைக் கண்டு, தாரு மிகவும் மகிழ்ந்தாள். 'மதிப்புரை ஒளிவு மறைவின்றி உள்ளதை உள்ளபடி சொல்கிறது, மிகுந்த பரிவு காட்டுகிறது, சிறிது வேடிக்கையாகக்கூட இருக்கிறது. வந்த மதிப்புரைகளில் இதுவே சிறந்தது. மதிப்புரை எழுதியவர் யாரோ ? யாராய் இருந்தாலும் அவருக்கு என் நன்றி.' தாரு எட்மண்ட் காஸை சந்திக்கவே இல்லை, அவரோடு கடிதத் தொடர்பும் கொள்ளவில்லை. இருபது ஆண்டு களுக்குப் பிறகு, அவரைச் சந்திக்கும் அதிர்ஷ்டம், ஸரோஜினி நாயுடுவுக்குக் கிடைத்தது. காஸைச் சந்தித்திருந்தால், அவருடைய புத்திமதியும், உதவியும், தாருவின் எழுத்துக்கு இன்னும் வளம் அளித்திருக்கும். அதோடு, அவருடைய கவிதைகளில் இருந்த சிறு

கோணல்மாணல்களை நேராக்கி இருக்கும். 'கூரியர் தல யூரோப்' என்ற பத்திரிகையில் சாத்தலேன் எழுதிய சிறு குறிப்பு வெளி வந்தது. ஆந்த்ரே தோரியே எழுதிய மதிப்புரை ரெவ்யூ த தோமாண்டே என்ற பத்திரிகையில் அடுத்த ஆண்டு வரையில் வெளி வரவில்லை.

'லண்டன் குவார்டர்லி ரிவ்யூ 'வில், இ. எச். தாமஸ் எழுதிய, சுவையான மதிப்புரை ஒன்று வெளியிடப் பெற்றது. 'தாருதத்தின் வாழ்க்கையும் கடிதங்களும்' என்ற நூலில் அம்மதிப்புரை முழுதும், அனுபந்த மதிப்புரையாக இடம் பெற்றது. 'கதிர்க் கட்டி'ல் உள்ள உரைக் குறிப்புக்கள் மட்டுமே, தாருவுக்கு இருந்த அபாரமான பிரஞ்சு இலக்கிய அறிவுக்கு, அதிசயப்படவைக்கும் சான்று என்று திரு. தாமஸ் கருதினார். நூலில் உள்ள கவிதைகளோ அற்புத சாதனை என்று அவர் எண்ணினார். கவிதைகளிற் சில தாருவே படைத்தவை, அழகு வாய்ந்தவை. திரு. தாமஸோடு நேரில் பேசிய டாக்டர் பிருஜேந்திர நாத ஸீல் என்பவர் உரைக் குறிப்புக்கள் தம்மையும் கவர்ந்தன என்றும், நூலில் உள்ள கவிதைகளை விட்டு விட்டாலும், உரைக்குறிப்புக்கள் மட்டுமே தனியாகத் திரும்பப் பதிப்பிக்கத் தக்கவை என்றும் கருதுவதாகச் சொன்னார். 'ஓர் இந்தியப் பெண், அதுவும் அவ்வளவு இளம் பிராயத்தில், பிரஞ்சு இலக்கியத்தில் இத்தகைய அறிவைப் பெற்றிருந்தாள் என்பது நடக்கக் கூடியது என்றே தோன்றவில்லை. உரைக்குறிப்புக்கள் எவ்வளவு துணிச்சலோடு இருந்தாலும், அசட்டுத்தனம் என்று சொல்வதற்கே இடந்தரவில்லை. பிரஞ்சு மகா கவிஞர்களை, தாரு தமக்குச் சமமானவர்களாகவே கருதி, அவர்கள் எழுத்தை மதிப்பிடுகிறார். அவருடைய உரைகளில் காணப் பெறும், படிப்பின் விசாலத்தையா, பிறர் கருத்தின் மேற் சாயாமல் நிற்கும் தனிப் பாங்கையா, திருஷ்யின் ஆண்மையையா எதை அதிகமாகப் பாராட்டுவது என்று தெரியவில்லை. இந்த இந்தியப் பெண்கள்-இந்த அதிசய உரைகளில் அருவின் பங்கு குறைவு என்பது நமக்குத் தெரியும்-தங்கள் மனத்தைத் திடமாக, துல்லியமாக அறிந்திருந்தார்கள். இது நம்மிடமிருந்து மரியாதை கலந்த பாராட்டையே கட்டாயமாக வருவிக்கிறது'[1] 'கதிர்க் கட்டி'ல் உள்ள சிறந்த கவிதைகளில் சிலவற்றை அருவே எழுதியதாக அவர் கருதுகிறார்.

'உரைகள் அசாதாரணமானவை, திகைப்பூட்டுகின்றவை' என்று எட்மண்ட் காஸ் குறிப்பிடுகிறார்: 'சில விஷயங்களில், ஆசிரியருடைய அறியாமை குழந்தையினதைப்போல் வேடிக்கையாக இருக்கிறது. வேறு சில விஷயங்களில் அவர் காட்டும் புலமை

---

1 'தாருவின் வாழ்க்கையும் கடிதங்களும்' - அனுபந்த மதிப்புரை - பக்கம். 345

அதிசயித்தக்கதாய் உள்ளது. மொத்தத்தில் இந்த நூல் ஓர் ஆச்சரிய சாதனை'.[1] பிற்காலத்தில் இருந்த புதிய பிரஞ்சு கவிஞர் களுடைய எழுத்துத்தான் தாருவின் கவனம் முழுதையும் கவர்ந்தது. அவர்களுக்கு முன்பிருந்த பெருங் கவிஞர்களுடைய பாடல்கள், அவருடைய கவனத்தை அவ்வளவு கவரவில்லை. தாருவைப் பொறுத்த வரையில், அவர்கள் இருந்ததாகவே அவர் எண்ணவில்லை என்று காஸ் குறிப்பிடுகிறார் : ' தாருவுக்கு, பிரஞ்சு கவிஞர் ஆந்த்ரே சேனியர் என்பவருக்கு அடுத்தபடியாகக் கால வரிசையில் வருபவர் து பார்த்தாஸ் ஆவார். ஆனால், சில சமயங் களில், அவர் காட்டும் திறனாய்வின் ஆழம், திரு ஸெயின்ஸ்பரிக்கோ ' ல தூ அஸல்லினோ ' வுக்கோ பெருமை தரக்கூடியதாகவே இருந்தது. நேப்பால் ல பிரனோனைப் பற்றித் தம் கருத்தைக் கூற அவர் சிறிதுந் தயங்கவில்லை. அது போலவே கவிஞர் போதலேர் ஒரு பாடலில் பிறரிடமிருந்து கடன் வாங்கி இருக்கிறார் என்று கண்டு பிடித்துக் கூறவும் அவர் கூசவில்லை. ஆனால், அலெக்சாந்தர் ஸ்மித் உயிரோடிருப்பதாக அவர் எண்ணினார். ஸென்ட் போவ் என்பவருடைய எழுத்து வாழ்க்கையைப் பற்றி அவர் கூறுவது தெளிவற்று உள்ளது'.[2]

' கதிர்க் கட்டி 'ன் முதற் பாடல், லெகாம் டே த லிஸ்லே (Lecomte de Lisle) என்பவருடைய பாடலின் மொழி பெயர்ப்பு. இவரைப் பற்றி, தாரு முன்னமேயே ' வங்காள மாகஸினி'ல் ஒரு கட்டுரை எழுதி இருந்தார். இவரைப் போலவே, தாருவும், தம்முடைய சிறிய அளவில், மகத்தையும், அலகிலாத ஒன்றையும் தொடும் ஆர்வங் கொண்டவர். தாருவிடம் அதே தன்னை இழந்து விடும் பாங்கும், மரணத்திலே மகிழ்ச்சிகொளும் தன்மையும் இருந்தன, சூரியனைப் பார்த்து, அந்தப் பிரஞ்சு கவிஞர் பாடு கிறார் :

> 'தூய்மையான இரத்தக் கறைபோல் உன்னுடைய காயங் களிலிருந்து
> உன் பேரொளி பெருகட்டும்
> உன் சாவிலே பெருமை கொள் !
> நீ மறுபடியும் எழுவாய்
> அது உறுதி '

இவ்வாறே தாரு மரணத்திடம் தன்னை முழுதும் இழக்க நினைத்தார். இந்த நினைவு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையில் பிறந்தது. விக்டோரியா காலத்து எழுத்தாளர் பலர் இந்த விதமாகவே எண்ணினார்கள். சார்லோட் ப்ரான்ட்டே என்பவர், இறைவனுடைய திருவுளத்திற்கு முழுதும் அடிபணிய வேண்டும்

---

[1] நாட்டுப் பாடல்கள் பக்கம் xvi

[2] 'நாட்டுப் பாடல்கள் - பக்கம் xvi

என்று அடிக்கடி கூறி வந்தார். கட்டுப்பாடு நிறைந்த விக்டோரியா காலத்து வாழ்க்கையிலும், அக்காலத்து நாவல்களிலும், காணப் பெறும் அவல நிகழ்ச்சிகள், எப்போதும் இந்த இனிய, 'சரணுகதி' மனப் பாங்கோடு இழைந்தே வந்தன.

கவிஞர் காம்டே த கோர்மான் பாடல்களை மொழி பெயர்த்த தாரு, பிற்காலப் பிரஞ்சு கவிஞர்களில் அவரே சிறந்தவர் என்று கருதினுர். கோர்மான் இத்தாலிய மொழிகளில் பல கவிதைகள் இயற்றி இருந்தார். அவர் இயற்றிய 'ஸானட்' சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, தாரு மொழிபெயர்த்திருந்தார். அம்மொழி பெயர்ப்பின் கையெழுத்துப் பிரதிகள், தாரு மறைந்த பிறகு அகப்பட்டன.

விக்டர் ஹ்யூகோ, தாருவுக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர். 'வாழும்' கவிஞர்களில் அவரே தலைசிறந்தவர் என்பது தாருவின் எண்ணம். மேரிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தாரு சொல்கிறுர். 'சில சமயம், விக்டர் ஹ்யூகோவின் எழுத்து, கடினமாக உள்ளது. லித்ரேயின் அகராதியின் உதவியின்றி, அவரைப் புரிந்து கொள் வதே சிரமமாக இருக்கிறது. அத்தனை சங்கேதச் சொற்கள்; ஆனுல், அவருடைய பிரஞ்சு மிக நேர்த்தி.'

ஸுலேரியைப் பற்றித் தாரு எழுதிய குறிப்பு, காட்சிகளை அவர் எவ்வளவு கவனத்துடன் விரிவாக்குகிறுர் என்பதைச் சொல் கிறது. காட்சியில் ஒவ்வொரு பகுதியும் ஒரு கிராமியச் சித்திரம் அல்லது எழில் சொட்டும் சிறு நாடகம். 'ஸுலேரியை "பிரஞ்சு நாட்டின் பெட்ரார்க்" என்று சொல்கிறுர்கள். அது எவ்வளவு உண்மை!' என்று பேசுகிறுர் தாரு.

நூலில் உள்ள உரைக் குறிப்புக்களில், தாரு மொழிபெயர்த்த பல கவிஞர்களைப் பற்றிய சிறு சித்திரங்கள் தரப் பெறுகின்றன. தேக்கரேக்கு, பெரிங்கருடைய 'பணி' (Vocation) மிகவும் பிடிக்கும் என்ற சிறு செய்தி எப்படித்தான் தாருவுக்குத் தெரிந்ததோ? இத்தகைய சிறு விவரங்களையும் தாரு அறிந்து வைத்திருந்தது ஆச்சரியமாகவே இருக்கிறது. 'சார்லஸ் நோதியேர் என்பவர் ஆற்றலை அவருடைய கவிதையில் விட, உரைநடையில்தான் காணலாம். அவருடைய கதைகள் மனத்தைக் கவருகின்றன, வாஷிங்கடன் இர்விங் இயற்றிய கதைகளை நினைவு படுத்து கின்றன. நோதியேரின் நெருங்கிய நண்பரான அலெக்ஸாந்தர் தூமா என்பவர் அவருடைய வாழ்க்கையை, இலக்கியப் படைப்பு களைக் கண்முன்னே கொணரும் முறையில் எழுதி இருக்கிறுர். நோதியேர் இங்கிலாந்திலும், ஸ்காத்லான்டிலும் பயணம் செய் தார். ஸர் வால்டர் ஸ்காட்டைப் பற்றி அவர் எழுதிய செய்யுள் 'பிளாக்வுட்ஸ் மாகஸினி'ல் முதலில் வெளிவந்த இதழ்கள் ஒன்றில் காணப் பெறுகிறது.'

ஆந்த்தே லெமாயின் அதிகமாக எழுதவில்லை. ஆனால், அவர் வெளியிட்டவை அனைத்தும், உயர்ந்த பாராட்டுக்குரியவை. பியரே துபான் 'ஏழை மக்களின் துயரங்களையும், மகிழ்ச்சிகளையும் பாடும் கவிஞர்.' நிக்கோலஸ் மார்ட்டின் என்பவர் ஜர்மன் கவிதையின் மாண்பிலே ஊறியவர். பான் நகரிலே பிறந்தவர். அவருடைய தாய் ஜர்மானியர், கார்ல் ஸிம்ராக்கின் சகோதரி. இந்த ஸிம்ராக்தான், 'நிபெலிங்கன்' என்ற பழங்காலத்துப் பெருமை வாய்ந்த பாடலை, இன்றைய மொழியில் எடுத்தெழுதியவர். இந்தப் பாடலை விக்டர் ஹ்யூகோ, உலக மகா காவியங்கள் மூன்றனுள் ஒன்றாகக் கருதினார். இம் மூன்றில் இரண்டு இராமாயணமும், மகா பாரதமும் என்று விக்டர் ஹ்யூகோ கருதியதை எண்ணித் தாரு பெருமைப் படுகிறார்.

த பார்னி என்பவர் எழுதிய 'இளம் பெண்ணின் மரணம்' என்ற கவிதையை தாரு மொழிபெயர்த்தார். அது அவருடைய மொழிபெயர்ப்புக்களில் மிகவும் அழகுடையதாக விளங்குகிறது. தம்முடைய சகோதரி அருவின் மறைவால் ஏற்பட்ட துயரத்தையும், அம்மொழி பெயர்ப்பில் தாரு வெளியிட்டாரோ, என்னவோ !

இளம் பெண்ணின் மரணம்

சின்னக் குழந்தைப் பருவத்தின் பின்னரும்
சின்னக் குழந்தையின் உள்ளத்தினள்
வன்ன உடலில் பூத்த தெழில் பூத்தும்
வாலைப் பருவ மயக்கம் இல்லை.

வேனில் வந்து தொட ரோஜா நெகிழ்ந்து
விம்மி விரிந்து மலர்வது போல்
தானே இன்னும் சில நாட்களில் மையல்
சார்ந்து தழைத்திடும் என்றிருந்தோம்.

ஆனால் இறைவன் நினைத்தது வேறவன்
ஆணையை ஏற்றவள் துஞ்சி விட்டாள்.
வானத்துத் தாரகை மங்கையவள் இந்த
மண் அவள் பேரெழில் தாங்கிடுமோ ?

கானிற் பறவையின் கானத்தைப் போல் முகம்
காட்டும் ஒரு நொடிப் புன்னகை போல்
தோன்றினள் பெண்மையின் வாசலில், தோன்றிய
சோடேது மின்றி மறைந்து விட்டாள்.

லாமார்டினேயைப் பற்றித் தாரு எழுதுகிறார். 'வாசகனே, அவர் தாமே எழுதிய தம்முடைய வாழ்க்கை, பயணங்கள் இவற்றைப் பற்றிய வரலாற்றை இதுவரையில் படிக்கவில்லை

யென்றால் படித்துப் பார். படிக்கும்படி சொன்னதற்காக எனக்கு நீ அப்போது நன்றி செலுத்துவாய். கற்பனையில், அறிவொளியில், கம்பீரத்தில், நடையில் - கவிதையை உருவாக்கும் இவை அனைத்திலும் - விக்டோர் ஹ்யூகை விடக் குறைந்தவர். ஆனால் புனிதத் தன்மையில் சிறந்தவர். தாரு தொடர்ந்து சொல்கிறார். 'விக்டர் ஹ்யூகோ, லாமார்டினேயைவிட எவ்வளவோ பெரிய கவிஞர்தான். ஆனாலும் திடமான கொள்கைகள் உருவாகாத இளைஞர்கள் கையிலே அவருடைய நூல்களைத் தருவது அவ்வளவு அறிவுடைமை ஆகாது. ஏனெனில், அவற்றில் இளம் உள்ளங்களுக்குப் பொருந்தாத பல உள்ளன. ஆனால் லா மார்ட்டினே நூல்களை யாரும் பயிலலாம்.' என்ன படிக்கலாம் என்பதில் தாரு முழுக்க முழுக்க விக்டோரியா காலத்து மனப்பாங்கு உடையவர். அவருடைய இலக்கிய மதிப்பீடுகளில் இந்தத் தூய்மைப் பற்று குறுக்கிடுகிறது. அவருடைய எழுத்திலும் இந்தப் 'பித்து' துரதிஷ்டவசமாகத் சிறிது தலைதூக்குகிறது. ஆங்கில நாவலாசிரியர்கள் ஜேன் ஆஸ்டினையோ, சார்லோட் பிரான்ட்டேயையோ மதிப்பிடும் போது என்ன செய்கிறோமோ, அதே போல, தாருவின் தூய்மைச் சார்புக்கு இடந்தந்தே அவருடைய படைப்புக்களை அணுக வேண்டும். இந்தச் சார்பை ஒட்டியன்றி, தாருவால் சிறந்த பாடலோ, உரையோ படைத்திருக்க முடியாது. இது அவர் தனிப் போக்கு. இதை மனத்திற் கொண்டால், ஒழுக்கத்தைக் கட்டளைக் கல்லாகக் கொண்டு, 'ஏழை படும் பாடு' (Les Miserables) என்ற விக்டர் ஹ்யூகோ நாவலை அவர் எடை போடுகிறாரே, அதைப் போனாற் போகட்டும் என்று விட்டு விடலாம். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? 'ஏழை படும் பாடு' நாவலில் தீமை நிறைந்த பகுதிகள் சில உள்ளன...... பிரஞ்சு நாவல்கள் பலவற்றிலும் இந்தக் கதைதான்.'

செயின்ட் போவைப் பற்றித் தாரு கூறுகிறார்: 'பிரஞ்சு இலக்கியத்தில் தீர்ந்த புலமையும், திறனாய்வுத் திறனும் உடைய சிறந்தவர் வரிசையில் செயின்ட்போ ஒருவர்.' ஆனால் அவரை முதற்றரமான கவிஞர் வரிசையில் வைத்து எண்ண முடியாது என்பது தாருவின் கருத்து: 'இதனால் செயின்ட் போவ் மோசமான அல்லது மட்டமான கவிஞர் என்பது பொருளன்று. முதற்றரக் கவிஞர் வரிசையில் அவர் இடம் பெறவில்லை, விக்டர் ஹ்யூகோ, லா மார்ட்டின் போன்றவர்களோடு சேர்த்து அவரைக் கருத இயலாது. ஆனால், பிரஞ்சு கவிஞர்களுடைய இரண்டாவது வரிசையில் அவருக்கு உயர்ந்த இடமுண்டு.'

இந்த வகையிலே, நாற்பது பக்கங்கள் உரைக்குறிப்புகள், தாரு வழங்குகிறார். இக்குறிப்புக்கள் தாருவின் மனதில் உள்ளதை, ஒளிவு மறைவின்றி வெளியிடுகின்றன. சில இடங்களில் வெள்ளை

உள்ளமும், மற்ற இடங்களில் கூர்த்த திறனும்வும் கலந்து வருகின்ற இவை, கடைசிப் பக்கம் வரையில் கீழே வைக்காமற் படிக்கும் அளவுக்குச் சுவை உடையவை. 'ஆல்ஃபிரட் த மூ ஸே'யைப் பற்றித் தாரு சொல்வது ஓர் எடுத்துக்காட்டு: 'அவரிடம் ஆற்றலும், ஒளியும் உள்ளன. இயற்கையில் உண்மையாக ஈடுபடுகிறார். சில சமயம் ஈடுபடுவது போல் காட்டுகிறார். ஆங்கிலக் கவிஞர் பைரனைப் போல, சில சமயங்களில் எங்கோ திசை தடுமாறிப் போகிறார்.' ஜேம்ஸ் லெஃபெல்ரே-தூமியேர் பற்றி, 'பத்தொன்பதாவது நூற்றாண்டுப் பிரஞ்சுக் கவிஞர்களில் வளமும், விடா முயற்சியும் உடையவர். விடாமற் போராடி, புதிய கவிதை மரபொன்றை — அதுவே இன்று சிறந்ததாகப் பிரான்ஸில் கருதப் படுகிறது — நிறுவிய தீரம் மிக்க டி வினி, லா மார்ட்டின், விக்டர் ஹ்யூகோ முதலியவர்களோடு தோளோடு தோளாக நின்று போராடிய நண்பராக விளங்கியவர் அவர்.'

லண்டனில் இருந்தபோது, பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலை நூலகத்தில், பிரஞ்சு புரட்சிக் கவிஞர் நூல்களையும், அவர்களைப் பற்றியும் ஆழமாகத் தாரு படித்தார். அந்த 'ரொமாண்டிக்' கவிஞர்களிடம் தாருவுக்குத் தனி ஈடுபாடு. அவர்களிடமிருந்த கற்பனைச் சுதந்திரத்திலும், தனி மனித உரிமைகளில் அவர்களுக்கிருந்த கருத்திலும், தாரு எல்லை மீறிய பெருமை கொண்டார். பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் இருந்து வந்த யாப்பு வகைகள், விதிகள், இவற்றிலிருந்து பத்தொன்பதாவது நூற்றாண்டு விடுதலை பெற்றது. கிரீஸ், ரோம், இவ்விரண்டு நாட்டு இலக்கியத்திற்கும், பதினேழாம் நூற்றாண்டு பழைய மரபுக் கவிதை அடிமைப் பட்டு நின்றது என்று தாரு எண்ணினார். ஆனால் 'ரொமான்டிக்' கவிஞர்கள் படைப்பிலோ, எளிமையும், வன்னமும், நேருக்கு நேராகப் பேசுகின்ற பாங்கும் அமைந்திருந்தன. முந்திய பிரஞ்சு ரெனேஸான்ஸ் (மறு மலர்ச்சி) கவிஞர்களை, தாரு கைவிட்டுவிடவில்லை. இன்னும் முந்திய கவிஞர்களான சேனியர், கூட்டியேர், பேரங்கர், லா மார்ட்டினே, பார்னி, த ஃப்ளோரியன் இவர்களைப் பற்றியும், பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த கார்னியேல், ஸ்காரான் முதலியோருடைய நூல்களையும், தாரு ஆழப் பயின்றார். பதினாறுவது நூற்றாண்டுக்கும் அவர் கவனம் எட்டியது. இவர்கள் பிற்காலக் கவிஞர்களை அறிமுகம் செய்பவர் போல வருகிறார்கள். 'கதிர்க் கட்டி'ல், ஹ்யூகோவுக்கே முதலிடம் கிடைக்கிறது. அவருடைய முப்பது கவிதைகளின் மொழிபெயர்ப்பு அந்நூலில் இடம் பெறுகிறது அடுத்து முக்கியத்துவம் பெறுகின்றவர்கள் மூஸே, காம்ப்டே த கிராமான், ஜோஸஃபின் ஸுலாரி ஆவர்.

கடந்த ஆண்டுகளை எண்ணிப் பார்த்த வண்ணம், 'கதிர்க் கட்டி'ன் பக்கங்களைப் புரட்டும்போது, தவிர்க்க முடியாத வினு

ஒன்று எழுகிறது. 'இம்மொழி பெயர்ப்புக்களை' தாரு இன்று செய்திருந்தால், நூறு ஆண்டுகளுக்கு முன் அவற்றிற்கு மக்களிடையே கிடைத்த வரவேற்பும், பாராட்டும் இன்று கிடைத்திருக்குமா? கிடைத்திருக்கும் என்றே நம்பத் தோன்றுகிறது. விக்டோரியா காலத்துத் 'தூய்மை'க் கொள்கைகளில் ஊறிய இந்த இளம்பெண், அவற்றையும், இந்தியச் சூழ்நிலையால் ஏற்பட்ட வரம்புகளையும் எப்படியோ கடந்து, அவள் காலத்துக் கட்டுப்பாட்டு விருப்பு வெறுப்புக்களை வெற்றி காண முடிந்தது. ஆகவே 'கட்டுப் பாடே போ' என்ற இக்காலத்துக் கவிதை உலகில், எலியட்[1]டிற்குப் பிறகு, கவிதை என்ற பெயரால் வெளி வரும் சொன் மாரி இடையிலும், தாருவின் கவிதை மகிழ்ச்சியோடு படிக்கப் பெறும். மரபொழிந்த யதுகைகளும், செய்யுள் நடையும், இப்போது கைவிடப்பட்ட புள்ளி வைக்கும் முறையும் - தாருவின் முறை குழப்பமே தருகிறது - பழைய உலக ஒழுக்க விதிகளும், ஆன்மா, கடவுள் என்று திரும்பத் திரும்பப் பேசுவதும் தாருவிடம் இல்லை என்றால், இன்றைக் கவிதை உலகில் கூட, தனக்கெனத் தாரு ஓரிடம் தேடிக் கொள்ள முடியும். ஏனென்றால், எக்காலத்துக் கவிஞரையும்போல, தாரு சத்தியத்தோடு கட்டிப் புரண்டிருக்கிறார். இதனால் அவர் என்றும் வாழ்ந்திருப்பார். சொற்களின் ஒலி நயத்தில் மாத்திரம் கருத்தைச் செலுத்தி, இசைத் தன்மை வாய்ந்த கவிதையைப் படைப்பதோடு தாரு நின்றுவிடவில்லை. ஆங்கிலத்தில் எழுதிய மற்றொரு இந்தியக் கவிஞரான ஸரோஜினி நாயுடு சொற்களின் ஒலி அழகு மிகுதியும் கண்ட நடையிலே எழுதினார். அந்த அளவுக்கு ஒலிக்கு மட்டும் தாரு முக்கியத்துவம் தரவில்லை. தாருவின் கவிதைகள் அளவிற் சிறியவை என்றாலும், செய்யுள் விதிகளை மீறுகின்றன என்றாலும், சாகாவரம் பெற்ற பாடல்களின் நடையும், வளமும், மதுர ஒலிப் பாங்கும் உடையன. இதனால்தான் பார்னேசியன் மரபுக் கவிஞர்களின் கவிதைகளும் போதலேர், ஸெண்ட் போவ் போன்றவர்களின் பாடல்களும், தாருவை அவ்வளவு மயக்கின. இதயத்திலே தாரு ஒரு புரட்சிக்காரி. அவரிடத்தில் மேலே சொன்ன கவிஞர்களிடத்தில் காணப் பெற்ற அதே வேகமும், துடிப்பும் போக்கும் இருந்தன. இன்று அவர் இருந்தால், டி. எஸ். எலியட்டின் உலகில் ஒருத்தியாக ஆகியிருப்பார். ஆனால் ஒன்று. எதையும் செய்யலாம் என்று அனுமதிக்கும் சமுதாயத்தில் ஒருத்தியாக இருக்க அவர் இசைந்திருக்கவேமாட்டார்.

'கதிர்க் கட்டி'ன் உரைக் குறிப்புக்களில் மிகவும் சோகமானது அருவைப் பற்றிய குறிப்பு; 'அரு உயிரோடு இருந்திருந்தால்,

---

1 டி. எஸ் எலியட் - இருபதாம் நூற்றாண்டு ஆங்கிலக் கவிஞர், திறனாய்வாளர்.

அவனுடைய உதவியினால் இந்தப் புத்தகம் இன்னும் நன்றாக அமைந்திருக்கும். இதன் ஆசிரியர் இப்போது அதன் குறைகளை எண்ணி வெட்கப்படுவது போல, அவ்வளவு அவமானப் பட நேர்ந்திராது, வாசகரைப் பார்த்துக் குறைகளைப் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்பதற்கு அவ்வளவு தேவை இருந் திராது.'

14. நாவல்கள்

தாருவின் மறைவுக்குப் பிறகு, அவர் எழுதிய பிரஞ்சு நாவல் ஒன்றன் பிரதியை, அதுவரை வெளிவராத வேறு சில எழுத்துக் களோடு, கோவின் கண்டார். 1878 ஆகஸ்டு மாதம், அந்த நாவல் பிரதியை செல்வி கிளாரிஸ்ஸே பாதருக்கு அனுப்பினார். அந்தப் பிரஞ்சு ஆசிரியர் இது பற்றிப் பின்னர் நினைவுகூர்கிறார்: 'வயதான தந்தை தம் கையினாலே எழுதி அனுப்பி இருந்த அந்தப் பிரதியைப் பெற்றதும், எனக்கு ஆழ்ந்த உணர்ச்சிகள் ஏற்படாமல் இல்லை. "என் கையில் உறுதி இல்லை, நடுங்குகிறது. ஆகவே மெல்ல எழுத வேண்டி இருந்தது" என்று கோவின் எழுதி இருந்தார். ஆனால் எழுத்தில் நடுக்கம் ஏதுமில்லை. அழகான சக்தி வாய்ந்த எழுத்து, கசப்பும், இனிப்பும் கலந்த இந்தப் பணியைச் செய்வ தற்கு அந்தத் தந்தைக்கு வலிமையளித்தது, நாவலைப் பிரதி செய்யும்போது அவருக்கு ஏற்பட்ட ஒரு பிரமையே. அவர் சொல்கிறார்: "எழுதும்போது, தாருவோடு பேசிக் கொண்டிருக் கிறேன் என்ற உணர்வே எனக்கு ஏற்படுகிறது."'

இந்த நாவலின் பெயர் 'செல்வி தர்வரின் தினசரிக் குறிப்பு' என்பது. இதற்கு கிளாரிஸ்ஸே பாதர் முன்னுரை எழுதினார் அதோடு, அதை அச்சிட்டு வெளியிடும் பணியையும் நிறைவேற் றினார். தாரு நேரிலே சந்திக்காத இந்த அன்பு நண்பர் எழுதிய முன்னுரை, வருத்தமும் பாராட்டும் கலந்து காணப்படுகிறது. செல்வி பாதர் எழுதினார். 'தாரு பிரஞ்சு கவிதைகளை மொழி பெயர்த்ததோடு நிற்கவில்லை. அவரே ஒரு பிரஞ்சு ஆசிரியராக இருக்க விரும்பினார். பிரஞ்சு மொழியிலே ஒரு நாவலே எழுதினார். அதை இன்று வெளியிடுகிறோம். பிரஞ்சு மொழி, இலக்கியம் இவை மட்டும் தாருவைக் கவரவில்லை. பிரான்ஸ் நாடே அவர்

உள்ளத்தைத் தொட்டது. அந்த நாடு வேதனையில் அழுந்திய போது, இந்த அன்பு தன்னை இனங்காட்டிக் கொண்டது.'

இந்த பிரஞ்சு நாவலில், பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில், 1860—1870 கால அளவில், தாம் கண்ட, பிரஞ்சு சமுதாயக் காட்சிகள் சிலவற்றைத் தருவதற்குத் தாரு முயல்கிறார். ஆசிரியரின் உள்ளத்தையும் அவருடைய பலதுறை ஆற்றல்களையும் ஆச்சரியப்படும் வகையில் காட்டுவதால், இந்த நாவல் சுவை உடையதாய் இருக்கிறது. இதற்கு மதிப்புரை எழுதிய டச்சுக் காரர் ஒருவர் சொல்கிறார்: 'இந்தப் புத்தகம் வேற்று நாட்டைச் சேர்ந்த ஒருவரால் எழுதப் பெற்றது என்பதை, புத்தகத்தில் உள்ள எதுவுமே காட்டவில்லை.' தாருவின் வாழ்க்கை வரலாறு எழுதிய ஹரி ஹரதாஸ் இன்னும் உணர்ச்சியோடு கூறுகிறார்: 'மாசு ஏதும் அற்றுத் தேர்ந்த பிரஞ்சு நடையில் இந்த நாவல் எழுதப் பெற்றி ருக்கிறது. அன்னிய மொழி ஒன்றை இவ்வளவு விரைவிலே கற்றுத் தெளிந்து, அம் மொழியிலே ஒரு நூல் முழுமையும் படைத் திருப்பது ஒரு சாதனை. உலக இலக்கிய வரலாற்றிலே இதற்கு நிகர் உண்டா என்று கேட்கத் தோன்றுகிறது.'

ஒரு பிரஞ்சு கத்தோலிக்கப் பெண்ணின் தினசரிக் குறிப்பிலி ருந்து எடுத்த செய்தித் தொகுப்பாக இந்த நாவல் அமைந் திருக்கிறது. பெண்ணின் பெயர் மார்கரீதே. அவளே இந்த நாவலின் தலைவி. தான் படித்துக் கொண்டிருக்கும் கன்னிகா மடம் ஒன்றிலிருந்து அவள் வெளியேறும் நாளிலிருந்து, அவ ளுடைய அகால மரணம் வரையில், ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுக் காலத்தை, நாவலில் வரும் தினசரிக் குறிப்பு நிரப்புகிறது. அவளுடைய கடைசி நோயும், மரணமும் நாவலின் இறுதி. துயர நிழல் ஏதும் படியாத, எளிய மகிழ்ச்சி நிறைந்த உளம் படைத்த சிறு பெண் மார்கரீதே. பேசும் களங்கமற்ற குழந்தைப் பேச்சோடு நாவல் தொடங்குகிறது. இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஜெனரல் ஒருவருடைய மகளே இந்த மார்கரீதே. அவரும் அவர் மனைவியும் 'பிரித்தானி' என்ற பிரஞ்சு நாட்டுப் பகுதியில் வசிக்கிறார்கள். தனது பதினைந்தாவது பிறந்த நாளைக் கொண் டாட, மார்கரீதே வீடு திரும்புகிறாள். அன்று விருந்தில், ஒரு கௌன்டஸ்ஸையும்[1] அவருடைய இரு மகன்களையும் சந்திக்கிறாள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு, லூயி லெஃப்பேவ்ரே என்ற இளம் அதிகாரி ஒருவன் வந்து சேர்கிறான். மார்கரீதேயின் பெற்றோர், அவள் அவனை மணம் செய்துகொள்ள விரும்புகிறார்கள். ஆனால், மார்கரிதாவோ விருந்தில் மூன்று நாட்களுக்கு முன் சந்தித்த தூனுவா பிரபுவைக் காதலிக்கிறாள். தூனுவாவை,

---

1 ஒரு பிரபுவின் மனைவி, நம் நாட்டு ஜமீன்தாரிணியைப்போல.

மார்கரிதா மணப்பதற்கு, பிரபுவின் தாய் சம்மதிக்கிறாள். ஆனால் தூனுவாவும், அவனுடைய தம்பி காஸ்டனும் வேலைக்காரியான ஜீனெத்தே என்ற கிராமப் பெண்ணைக் காதலிக்கிறார்கள். இந்த ஜீனத்தேயை அவர்கள் வீட்டுக்கு அனுப்பிவைத்தது மார்கரீதே தான். இரு சகோதரர்களுக்கும் பகைமை மூள்கிறது. பொறாமை வெறியிலே தூனுவா தன் தம்பியைக் கொன்றுவிடுகிறான். தீவாந்தர தண்டனை விதிக்கப்பெறுகிறான். இதைத் தாங்காமல் தற்கொலை செய்துகொள்ளுகிறான். அவன் தாய்க்குப் பைத்தியம் பிடித்துவிடுகிறது.

மார்கரீதேக்குக் கடுமையான நோய் காண்கிறது. தன் பெற்றோருக்குத் திருப்தி அளிக்க, பிறகு லூயியை மணந்து கொள்கிறாள். ஏதோ ஒன்று, தான் விரைவில் இறந்துவிடுவோம் என்று அவளுக்குச் சொல்கிறது. லூயியின் பேரில் அவளுக்கு ஆழ்ந்த அன்பு ஏற்படுகிறது. நைஸ் நகரில் சிறிது காலம் சந்தோஷமாக இருவரும் வாழ்கிறார்கள். மார்கரீதே பிள்ளைப் பேற்றுக்காகத் தாய் வீடு வருகிறாள். அங்கே ஆண் மகவைப் பெற்றுவிட்டு மரிக்கிறாள்.

இது கதை. கொஞ்சம் 'பயங்கரமாக இருக்கிறது என்றாலும் ஒரே இரத்தக் களரியாக இல்லை.' அசிங்கமான விவரங்கள் எதுவும் இல்லை. நாடக மேடைப் பாணியும், பேச்சும் இருந்தபோதிலும், 'நாவல் முழுவதிலும் ஓர் உயர்ந்த பாங்கு நிரம்பி நிற்கிறது.' சில பாத்திரங்களே உள்ளன. ஆனால் அவை தெளிவாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளன. வயதிற்குச் சற்று அதிகமான முதிர்ச்சி மார்கரீதேயிடம் காணப்பெறுகிறது. அது வாழ்க்கைக்கு உண்மையானதில்லை என்று ஒருவேளை தோன்றலாம். அவளுடைய கடவுள் நம்பிக்கை, அவளுடைய தோற்றம், அவள் வாழ்ந்த சூழ்நிலை, இவையும், இவை போன்ற பலவும், தாருவின் வாழ்க்கையிலிருந்து எடுக்கபெற்றவையோ என்று தோன்றுகிறது. இதனால், நாவல் நம்பக் கூடியதாய் அமைவதோடு, வாசகருடைய கவனத்தையும் ஈர்க்கிறது. இந்த நாவலுக்கு நல்ல மதிப்புரைகள் கிடைத்தன. திரு அட்ரியன் டெஸ்ப்ரே என்பவர் 'நாவலின் ஆசிரியர் அன்பு நிறைந்த இளம் பெண் ஒருத்தியின் உள்ளச் செல்வத்தையெல்லாம் இந் நாவலில் கொட்டி இருக்கிறார்' என்று கருதினார். கிளாரிஸ்ஸே மூலமாகத் தாருவைப் பற்றி அறிந்து, அவரிடம் ஆழ்ந்த மதிப்பு வைத்திருந்த திரு கார்ஸின் த தாஸி (Mr. Garcin de Tassy)[1] என்னும் கீழ்த்திசை மொழி வல்லுனர், தாருவின் நாவலுக்கு அரிய புகழ்மாலை சூட்டினார்.

---

1 கார்ஸின் த தாஸி என்பவர் கீழ்த்திசை இலக்கியம், மொழி, வரலாற்று வல்லுனர். பாரிஸ் நகரில் கீழ்த்திசை மொழிகள் பள்ளியில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். இந்தியப் பெண் கல்வியிலும், மாதர் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டவர். தாருவின் அருகில் வசித்த ராஜேந்திரலால் மித்ராவின் நண்பர்.

வங்க மொழியில் இந்த நாவலுக்கு இரு மொழி பெயர்ப்புக் கள் வந்துள்ளன. ஒன்று ராஜ்குமார் முகர்ஜி எழுதியது. மற்ருென்று பிருதிவீந்திரநாத் முகோபாத்யாயா செய்தது. 'கவி தாரு தத்' என்று அவருடைய நூலில், ராஜ்குமார் முகர்ஜி, தாருவைப் பற்றியும், அவருடைய நாவலைப் பற்றியும் எழுதியுள்ள விமர்சனக் குறிப்புக்கள் சுவையாக உள்ளன. தாருவின் எழுத்து அடிப்படையில் இந்தியப் பாங்குடையது என்று அவர் கருதுகிருர். இதனுல்தான், தன் வாழ்க்கை பகைப் புலத்திற்கு அவர் உண்மை யாக இருந்த காரணத்தால்தான், இங்கிலாந்திலும், இந்தியாவி லும் ஒரேபடித்தாய் தாரு பாராட்டப் பெற்ருர் என்பது முகர்ஜி யின் முடிவு. பல இந்தியர்கள் அக்காலத்தில் ஆங்கிலத்தில் எழுதத் தலைப்பட்டிருந்தாலும், ஒரு வங்காளிப் பெண் பிரஞ்சு மொழியில் ஒரு நாவலை எழுதி விட்டது ஒரு புதுமைதான் என்பதை அவர் கண்டு வியந்தார். நாவலின் கதை சாதாரணமாக இல்லை. ஆகவே கதைக்குக் கருவாக, அதைப் போன்றே, வாழ்க்கையில் தாரு நேரடியாகக் கண்ட அல்லது கேள்விப்பட்ட நிகழ்ச்சி ஏதாவது அமைந்திருக்குமோ என்று முகர்ஜி எண்ணினுர். உண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை மையமாக வைத்துத்தான், அதன் அடிப் படையில் நாவலைத் தாரு உருவாக்கி இருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. இத்தகைய கதை, தாருவின் கற்பனையில் மட்டும் இந்திர ஜாலம்போல் முளைத்தது என்று எண்ண முடியவில்லை. நாவலில் தாரு விவரிக்கும் நிகழ்ச்சிகள், உண்மையிலேயே இங்கிலாந்தில் ஒரு குடும்பத்தில் நடைபெற்றன என்று ஜேம்ஸ் தார்மஸ்டெட்டர் கூறுகிருர். ஒரே பெண்ணை சகோதரர்கள் இருவர்கள் காதலித்தார்களாம்; பொருமையினுல், ஒருவன் மற்றவனைக் கொன்றுவிட்டாணும். இந்த அவல நிகழ்ச்சி, தாரு இங்கிலாந்தில் இருந்தபோது நடைபெற்றதா என்பது தெரியவில்லை. இதுபற்றி தார்மஸ்டெட்டர் ஏதும் குறிப்பிடவில்லை. அருவும், தாருவும் சேர்ந்து, ஒருவர் நாவலை எழுதுவதாகவும், மற்ருெருவர் அதற்குப் படம் போடுவதாகவும் இங்கிலாந்தில் தீர்மானித்தார்களே, அப்போதுதான், இந்த நாவல் இங்கிலாந்தில் தொடங்கப் பெற்றதா, அதுவும் தெரியவில்லை. புத்தகத்திலே படங்கள் ஒன்றும் இல்லாததால், அருவின் மறைவுக்குப் பிறகே, தாரு இந்த நாவலை எழுதினுர் என்று கொள்ள இடமிருக்கிறது. இங்கிலாந்தில்தான் எழுதப்பெற்றது என்று கருதமுடியாது. ஏனென்ருல், அந்த அளவுக்கு அப்போது தாரு பிரஞ்சு மொழியில் திறமை பெற்றிருக்கவில்லை என்பது முகர்ஜியின் கருத்து. ஆனுல் அப்போதும் தாரு தீவிரமாகப் பிரஞ்சு பயின்று வந்தார் என்பதும் உண்மை. ஆகவே நாவல் எங்கே எப்போது தொடங்கப் பெற்றது என்பது பற்றித் திட்டமாக ஒன்றும் கூறுவதற்கில்லை.

1874-ஆம் ஆண்டில், அதாவது அரு மறைந்த ஆண்டில், தாருவுக்கு அப்போது பதினெட்டு வயது, இந்த நாவல் எழுதப்பெற்றது என்பது ஜேம்ஸ் தார்மஸ்டெட்டர் கட்சி. மேரிக்குத் தாரு எழுதிய கடிதங்கள் ஒன்றிலும் இந்த நாவலைப் பற்றிய ஒரு குறிப்பும் இல்லாதது சிறிது வியப்பாகவே இருக்கிறது. தம்முடைய தாய் சொன்ன புராணக்கதைகள் ஒன்றிலிருந்து இந்த நாவலில் உள்ள கதை, தாருவுக்குத் தோன்றியிருக்கலாம். சுந்தன் உபசுந்தன் என்ற அசுர சகோதரர்கள் திலோத்தமையின் பேரில் காதல் கொண்டு, ஒருவரோடொருவர் போரிட்டு மடிந்த புராணக்கதை கூட, தாருவின் நாவலுக்கு மூலமாய் இருந்திருக்கக்கூடும் என்று முகர்ஜி எடுத்துக்காட்டுகிறார்.

அகால மரணத்தைப் பற்றிய எண்ணம் தாருவின் சிந்தையைப் பீடித்திருக்கவேண்டும். தம்முடைய குடும்பத்தின் சோக நிகழ்ச்சிகளைப் பற்றிய துயரை பிறர் முன் வெளியிட மனமில்லாமல், இந்த நாவலை இரகசியமாகத் தாரு எழுதினார் என்று கொள்ளலாம். மார்கரீதே என்ற பாத்திரத்தின் மூலமாக, உள்ளே குமுறிக் கொண்டிருந்த தம்முடைய உணர்ச்சிகளை வெளியிட ஒரு வழியைத் தாரு ஏற்படுத்திக் கொண்டார். இந்த நாவலில் வாசகரை உண்மையில் கவர்வது அதன் கதை எங்கிருந்து பிறந்தது என்பதன்று; அதன் நாடக மேடைப் பாணியுமன்று; பின், மார்கரீதேயின் வளர்ச்சியும், அவளுடைய அகால மரணமுமே ஆகும். மார்கரீதேக்கு நேர்ந்த கதி, அவளைப் படைத்த ஆசிரியருக்கும் அமைந்தது. இளம் பிராயத்திலேயே மார்கரீதேயைப்போல் துஞ்சிய தாருவின் மறைவுக்குப் பிறகு, அவர் மறைந்த செய்தி யாவர்க்கும் பரவிய பிறகே, இந்த நாவல் வெளிவந்தது.

ஜேம்ஸ் தார்மஸ்டெட்டரும், எட்மண்ட் காஸும், தாருவை அக்காலத்துப் பிரபல ஆங்கில நாவலாசிரியைகளோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார்கள். திருமதி காஸ்கில் எழுதிய 'சார்லோட் பிரான்ட்டேயின்[1] வாழ்க்கை வரலாறு' என்ற புத்தகத்தைப் படித்த பிறகு, பிரான்ட்டே குடும்பத்தினரின் துயர வாழ்க்கை, தம்மை எப்படி உலுக்கியது என்பதைப் பற்றி, மேரிக்குத் தாரு எழுதினார்; 'யார்க்ஷைர்[2] பொட்டலின் தனிமை நடுவிலே, அந்தப் பழைய வீட்டில், எப்படித்தான் அந்த மூன்று சகோதரிகளும் இருந்து வந்தார்களோ, நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. மூவரும் இளம் பிராயத்தினர்: மூவரும் கலைத்திறமை மிக்கவர்கள். ஆனால், அந்த யார்க்ஷைர் வெறுமைக் காட்டின் மத்தியில், தன்னந்தனியாக, எப்படித்தான் வாழ்ந்தார்களோ!' சார்லோட்டின்

---

1 ஆங்கில நாவலாசிரியை.

2 இங்கிலாந்தின் ஒரு பகுதி.

மூத்த சகோதரிகள் இருவரும் முன்னரே காசரோகத்திற்கு இரையானார்கள். பிரான்ட்டே படைத்த நாவல்களில் வரும் தலைவியருக்கும், தாருவின் மார்கரீத்தேயுக்கும் எவ்வளவு ஒற்றுமை. விக்டோரியா காலத்து இலக்கியத் தலைவியரின் மென்மையான பாங்கையும், 'விதி விட்ட வழி' என்ற போக்கையும் தாருவின் நாவல் முழுதும் பிரதிபலிக்கிறது. ஜேன் அயரோ,[1] 'வில்லத்தே'[2] யில் வரும் லூசியோ, தாரு சித்திரிக்கும் ஒரு பாத்திரமாக இருந்திருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. பிரஞ்சு மொழில் தம் நாவலைத் தாரு எழுதிய போதிலும், அவருடைய நடைக்கும், ஆங்கில நாவலாசிரியர்களான ஜேன் ஆஸ்டின்' ஜார்ஜ் எலியட் இவர்கள் நடைக்கும் உள்ள ஒற்றுமை உடனே கண்ணிற் படுகிறது. பிராண்ட்டே சகோதரிகளைப் பற்றித் தாரு எழுதியபோது, அச் சொற்களில் தம்முடைய துயர முடிவையே முன் கூட்டி அறிவிக்கிறார்: 'தம்முடைய மக்கள் ஒவ்வொருவராக இறந்து போவதைக் கண்ட அந்தத் தந்தை, பிறகு தன்னந் தனிமையில் அந்த யார்க்ஷைர் காட்டு நடுவே தனி வீட்டில் எப்படித்தான் இருந்து வந்தாரோ! உண்மையில் கதைகளில் வரும் அவலத்தையெல்லாம் வென்றுவிடுகிறது, வாழ்க்கையிலே நமது தினசரி வாழ்க்கையிலே கண்முன்னே நிகழும் அவலம்.'

'பயான்கா அல்லது ஸ்பானியக் கன்னி' (Bianca or the Young Spanish Maiden) என்பது, தாருவின் இரண்டாவது நாவல். ஆனால் அது முற்றுப் பெறாத ஒரு துணுக்கு. அதில் எட்டே அதிகாரங்களை, தாரு மறைந்த பிறகு, கோவின் தேடிக் கண்டு பிடித்தார். 1878 ஜனவரியிலிருந்து, ஏப்ரல் வரையில் 'வங்காள மாகஸினி'ல் அவை தொடர்ந்து வெளிவந்தன. பக்கத்தின் அடிக் குறிப்பு ஒன்றில் கோவின் எழுதுகிறார்; 'இந்தக் கதையை எழுதிய மெல்லிய கரம் — அது செல்வி தாருவின் கரம் — இந்த இடத்தோடு நின்றுவிட்டது. அயர்ந்த விரல்களிலிருந்து பேனாவை விழச் செய்தது அவருடைய நோயா, எனக்குத் தெரியாது, நான் அப்படி எண்ணவில்லை. பிறகு? இது ஒரு நாவலின் முதல் வரைப் படமாக எழுதப்பெற்று, கைவிடப்பட்டது என்றே நான் எண்ணுகிறேன். ஏன் தெரியுமா? பிரஞ்சு மொழியில் தாரு விட்டுச் சென்ற நாவல், இந்தத் துணுக்கை விட எவ்வளவோ உயர்ந்தது என்பது மாத்திரமில்லை, அது நிறைவு பெற்றிருக்கிறது. இது அப்படி இல்லை. இது தவிர, இன்னும் உரை நடையிலும், செய்யுளிலும், தாரு விட்டுச் சென்றவை உள்ளன; ஆனால், அவையெல்லாம், கோணல் மாணலாகச் செதுக்கப்பெற்றவை, வடிவற்றவை, கடைசல் பிடிக்கப்பெறாதவை.'

---

1 சார்லோட் பிரான்ட்டே 1847-ல் எழுதிய நாவலொன்றின் தலைவி.

2 சார்லோட் பிரான்ட்டே 1853-ல் எழுதிய மற்றொரு நாவல்.

'பயான்கா' ஆங்கிலத்தில் எழுதப்பெற்றுள்ளது. அதில் உள்ள கதையும், 'தினசரிக் குறிப்பி'ல் உள்ளதைப் போலவே அவல மயமானது. பயான்கா கார்சியா என்பவள் இங்கிலாந்திலுள்ள கிராமம் ஒன்றில் வசிக்கிறுள். அவள் தந்தை ஒரு ஸ்பானியர், இங்கிலாந்தில் குடியேறியவர். பயான்காவின் மூத்த சகோதரி ஈனஸ் என்பவளின் மரணம், அதன்பின் குளிர் மிகுந்த பிப்ரவரி மாதத்து நாளில் நடைபெற்ற ஈமச்சடங்கு, இங்கிருந்து கதை தொடங்குகிறது, பயான்காவும், அவள் தந்தையும், ஈனஸின் மறைவை எண்ணிக் கலங்குகிறுர்கள். பயான்காவுக்குத் தாங்க முடியாத துக்கம். அவளுடைய வேலைக்காரி, ஒரு ஸ்காட்டிஷ் பெண், அவளைத் தேற்றுகிறுள். ஏற்பட்ட இழப்பை மறந்துவிட முயலச் சொல்கிறுள். ஓராண்டு கழிந்தபிறகு, ஈனஸை மணப்பதாக இருந்த திரு இன்கிராம் என்பவன் பயான்காவைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறுன். இதற்குள் பயான்காவின் தந்தை இறந்து விடுகிறுர். ஈனஸை, இன்கிராம் இன்னும் காதலிக்கிறுன். லேடி மூரையும் அவளுடைய மகளையும், மகன் லார்ட் மூரையும் பயான்கா சந்திக்கிறுள். லார்ட் மூரின் பேரில் பயான்கா காதல் கொள்ளுகிறுள். ஆனல், பயான்காவுக்கும் லார்ட் மூருக்கும் திருமணமாவதற்கு, குடும்பத்தினரிடமிருந்து தடை வருகிறது. லார்ட் மூர் க்ரீமியன் போரிலே பங்கு பெறப் போய்விடுகிறுன். கதை இதோடு நின்றுவிடுகிறது. இந்த நாவல் துணுக்கு மிக்க அவலம் நிறைந்ததாய், அளவுக்கு மீறி யதார்த்தத்திற்கு மாருன வகையில் உள்ளது. இந்த நாவல் இருள் மயமாய் இருக்கிறது என்று கருதித்தான் தாருவே அதை முடிக்காமல் விட்டுவிட்டுத் தமது பிரஞ்சு நாவலைத் தொடங்கினுரோ என்னவோ! பிரஞ்சு நாவலிலாவது நாவலின் தலைவி மார்கரீதேயுக்கு, வாழ்க்கை, சரேலென அவலத்தில் முடிந்தாலும் சிறிது காலமாவது மகிழ்ச்சியாய் அமைகிறது. பயான்காவிற்கோ, மூத்த சகோதரியின் மரணம், அவள் சிந்தையைக் குழப்பி, சோகை பிடித்ததுபோல் ஆக்கி, எந்நேரமும் பயங்கர நினைவுகளிலேயே அழுத்திவிடுகிறது. அரு மலர்ந்த பிறகு, தாருவின் இயல்பு இத்தகைய மன நோய்க்கு இடந்தரவில்லை.

15. நாட்டுப் பாடல்களும், புராணக் கதைகளும்

'ஹிந்துஸ்தானத்து புராதன நாட்டுப் பாடல்களும் புராணக் கதைகளும்' என்ற கவிதை நூலைத் தாரு எழுதியதும், அதுவரையில் பாதி மூடியிருந்த தாமரை மொட்டொன்று, கீழ்த்திசைக் கதிரவன் ஒளியில், இதழ் விரித்து, முழுதும் அலர முடிந்தது. இங்கிலாந்தையும், பிரான்ஸையும் எவ்வளவுதான் நேசித்தாலும், அந்த நாடுகளைப் பற்றி எழுதிய போதும், அவற்றின் இலக்கியத்தை மொழி பெயர்த்தபோதும், தாருவின் அடி மனத்தில் தம்முடைய வீட்டில் இருக்கிறோம் என்ற நிறைவு ஏற்படவே இல்லை. ஆனால் ஸம்ஸ்க்ருத வயல்களிலிருந்து சில கதிர்களை அவர் திரட்டியபோதுதான் அவருடைய உண்மையான கவிதை ஆற்றல் கண் விழித்தது. எட்மண்ட் காஸ் சொல்வதுபோல் 'பிரஞ்சு வயல்களில் திரட்டிய கதிர்க்கட்டு தாருவின் நூல்களில் மிகுந்த குறைகள் உடையது தான். என்றாலும், அது மற்ற நூல்களைவிடச் சுவையிற் குறைந்தது அன்று.' ஆனால் ஆங்கிலத்தில் தாரு எழுதிய தம் கவிதைகளைப் பற்றி அவரே சொல்கிறார். 'பிற்கால சந்ததியாருக்கு, தாரு விட்டுச் சென்றவற்றில் இவையே முக்கியமானவை என்று நாம் நம்புகிறோம். இந்த ''நாட்டுப் பாடல்கள்'' தாரு எழுதிய பாடல் களிற் கடைசியானவை, அவையே மிகவும் கனிந்தவை.'

'நாட்டுப் பாடல்களி'ன் முதற்பதிப்பு, 1882-ஆம் ஆண்டில், கெகன், பால், டிரென்சு அன்ட் கம்பெனியாரால் (Kegan, Paul, Trench & Co,) லண்டனில் வெளியிடப் பெற்றது. 1881-இல் எட்மண்ட் காஸ் எழுதிய முன்னுரை வரலாற்றுக் குறிப்போடு, அது வெளிவந்தது. அன்றிருந்து இன்று வரை, ஐந்து பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. அதே கம்பெனியார் 1927-இல் வெளியிட்ட பதிப்புத்தான் கடைசியானது. சென்னையிலே அச்சிட்டு (எந்த ஆண்டு என்று பதிப்பில் குறிப்பிடவில்லை,) காளிதாஸ் அன்ட் கோ என்ற கம்பெனியார் ஒரு பதிப்பை வெளியிட்டார்கள். இப்பதிப்பில், காஸ் எழுதிய முன்னுரையைக் காணோம். வெளியிட்டோர் குறிப்பொன்று உள்ளது. அதில், பயனுடைய எதுவும் இல்லை.

தமது முன்னுரையில், காஸ் சொல்கிறார். 'தாரு தத் இப்போது உயிரோடு இருந்தால், குறிப்பிடத்தக்க ஐரோப்பிய எழுத்தாளர் அனைவரிலும் அவர் இளைஞராகவே இருப்பார். ஆயினும் அவர் புகழ் - அது இதற்குள் கணிசமாகவே வளர்ந்து உள்ளது - அவருடைய மறைவுக்குப் பிறகே முழுவதும் விரிந்தது'. 'நாட்டுப் பாடல்கள்' தாரு தம்முடையது என்று தங்குவதற்குத் தனி உலகம் ஒன்றையே கொணர்ந்த நூல்.

கீட்ஸ் என்ற ஆங்கிலக் கவிஞருக்கு நேர்ந்தது போலவே தாருவுக்கும் நேர்ந்தது என்றும், 'எதைச் செய்கிறாயோ, அதை விரைவிற் செய்' என்று அவருடைய காதில் ஏதோ ஒரு குரல் ஓயாமல் எச்சரித்துக் கொண்டிருந்தது என்றும், அருவின் மறைவுக்குப் பிறகு, தாரு முன்னிலும் விரைவாக உழைத்தார் என்றும், இ. ஜே. தாமஸ் என்பவர் சொல்கிறார். 'முதிர்ச்சி யின்மை, அவசரம், இவ்விரண்டையும் காட்டும் எத்தனையோ அடையாளங்கள் இருந்த போதிலும், செய்யுள் இயற்றுவதில் அவருக்கிருந்த இக்கட்டுக்களிலிருந்து, அவர் வெற்றியோடு மீள்வார் என்பதற்கும் அறிகுறிகள் உள்ளன.' இக்குறைகளில் முக்கியமானவையெல்லாம், அனுபவம் முதிர முதிரத் தாமாகவே மறைந்திருக்கும். ஏனெனில், தாருவின் இயல்பில், அழிக்க முடியாத அளவுக்கு ஆழமாக அவை வேர்விடவில்லை. திரு. தாமஸ் தொடர்ந்து சொல்கிறார்: 'தாருவின் நூல்களில், தாமாகவே நிலைத்திருப்பதற்கு வாய்ப்புடைய பகுதியே, "நாட்டுப்பாடல்கள்." அவற்றில், கவனக் குறைவும், கனக் குறைவும் உள்ளன என்றாலும், அவை அனைத்தையும் பிணைத்து நிற்கின்ற ஒருமையும் காணப் படுகிறது.' ஆனால் கவனக்குறைவு உள்ளது என்பது உண்மை. 'அதைவிடப் பெரிய குறை என்னவென்றால், தாம் எடுத்துக் கொண்ட பொருளிடம் ஆசிரியருக்குப் பரிவோ ஒட்டுதலோ இல்லை. எடுத்தாளும் பொருள்களுக்குப் புறத்திலேதான் அவர் நிற்கிறார். அவற்றிலே ஆழ்வதில்லை.' இவ்வாறு சொல்கிறார் தாமஸ். ஆனால் அவர் அன்னிய நாட்டினர். அதனால் தாருவைப் பற்றிய அவருடைய மதிப்பீடு பாதிக்கப்படுகிறதோ என்று தோன்றுகிறது. கிறிஸ்தவராக இருந்தபோதிலும், தம் எழுத்துக்குப் பொருளாகத் தாம் அமைத்து கொண்ட ஹிந்து சமயச் சார்புடைய கதைகளில் ஒன்றி, அவற்றில் ஒரு பகுதியாகவே தாருவால் ஆக முடிந்தது என்பதைத் தாமஸ் உணர்ந்ததாகத் தெரியவில்லை. தவிர தாரு எடுத்தாண்ட, புராதன இந்திய புராணக் கதைகள், கேவலம் பயனற்ற பழைமையாய், காட்டுமிராண்டிக் கால எச்சங்களாய், தரமான மதிப்பிற்குத் தகுதியற்றனவாய் என்றுமே போய்விடக் கூடியவையல்ல. தாரு தேர்ந்தெடுத்த கதைகள் பிரபலமானவை. அதோடு, கிரேக்கப் புராணக் கதைகளைப் போலவே, புராதனமான

ஓர் உயர்ந்த கலாசாரத்தையும், மரபையும் உணர்த்த வல்லவை தாருவே சொல்கிருர்: 'கிரேக்க மொழியைப் போல, ஸம்ஸ்கிருதமும் அவ்வளவு பழைமையானது, அவ்வளவு பெருமை உடையது.' இன்றைய எழுத்தாளருக்கு இல்லாத ஒரு வாய்ப்பு தாருவுக்கு இருந்தது. அன்னிய நாட்டினருக்கு, ஸம்ஸ்கிருத இலக்கியப் பொருளை உணர்த்தியவர்களில், காலத்தால் முந்தியவர் வரிசையில் அவர் நின்ருர். தாமஸே ஒப்புக் கொள்கிருர்: 'உலகில் வாழ்ந்த பெண்மணிகளுக்குள்ளே, தாரு மிக அதிசயமான ஒரு பெண். அவருக்கு உரிய இடம், ஸாஃபோ[1], எமிலி பிரான்ட்டே[2] இவர்கள் பக்கத்தில் தான். அவர்களைப் போலவே வெல்ல முடியாத கனற்பிழம்பாக அவர் இருந்தார்.'

ஹிந்து கதைகளில் வரும் ஒழுக்கக் கருத்துக்களை, ஒரே ஒரு தடவைத் தவிர, மிகுந்த பரிவோடுதான் தாரு அணுகிஞர். விதி விலக்காக வந்த அந்த ஓர் இடம், 'அரசத் துறவி' (The Royal Ascetic) என்ற பாடலில் உள்ளது. இந்த உலகத்துப் பொருள்களில் இருந்த அன்பு முழுவதையும், அந்த அரசத் துறவி கைவிட்டிருக்க வேண்டாமே என்று தாரு கருதுகிருர்:

> 'ஆனுல், நமக்கொரு வாய்ப்பு. தெய்விகமாக, மிகத் தெய்விகமாக வகுக்கப்பெற்ற முறையின்கீழ் வாழ்கிரும்.[3] 'கடவுள் அன்பு' என்பது நமக்குத் தெரியும். உதாசீனமும் செருக்கும் நிறைந்த ஆணவத்தில் பிறந்த வழிபாட்டை நாம் ஏற்கமாட்டோம். ஆகவே, துறவின் சடங்குகளையோ உடம்பை ஒடிக்கும் தவத்தையோ நாம் கருதுவதில்லை. அவனுடைய அன்பைப் போன்றதாய் தன்னலமற்றதாய், அனைத்தையும் அணைப்பதாய் உள்ள அன்பே நமது வழிபாடு.'

அரசத் துறவியான பரதன் என்னும் அரசன், ஒரு மானின் மீது, அதிக அன்பு காட்டிஞன் என்பதற்காக, இது ஒரு பாபம் என்று தொனிக்கும்படியாகத் பிராமணன் ஒருவன் பேசுகிருன். இது கதையில் வருகிறது. இந்தப் பிராமணனுடைய கருத்து ஆதரிக்கத்தக்கதன்று என்று மேலே காட்டிய வரிகளில் தாரு வற்புறுத்துகிருர். பண்டைய இந்திய உலகத்தோடு ஒட்டிப் பரிவு காட்டத் தாரு தவறிவிட்டார் என்பதற்கு இதைத் தவிர வேறு எந்த இடத்திலும் ஒரு சான்று கூட இல்லை. தாரு பயன்படுத்தும் அடைமொழிகளையும், அவருடைய கருத்துக்களையும் 'எங்கோ கடன் வாங்கப்பெற்றவை, பயனற்றவை' என்று தாமஸ் சொல்வதில் நியாயம் இருக்கிறது. தேவையில்லாமல், சில சமயங்களில் எதுகைக்

---

[1] பண்டைய கிரேக்கக் கவிஞர் [2] ஆங்கிலக் கவிஞர்

[3] கிறிஸ்தவம் குறிப்பிடப்படுகிறது

காக, இரட்டிப்பு அடைமொழிகளைக் கையாளும் தவருன பழக்கம் தாருவுக்கு உண்டு. குறிப்புப் புள்ளிகள் வைப்பதிலும் அவர் அதிகக் கவனம் செலுத்துவதில்லை. காற்புள்ளிகளும், கோடுகளும், அரைப் புள்ளிகளும் ஒரே அடியாக, அவர் எழுத்தில் வரன்முறையின்றி மிகுந்திருக்கும். ஆனல், பிரஞ்சிலிருந்து அவர் இயற்றிய மொழி பெயர்ப்புக்களைப் போல், அவருடைய 'நாட்டுப் பாடல்கள்' அவ்வளவு 'நொண்ட'வில்லை. மொழிபெயர்ப்புக்களைவிட ஆற்றெழுக்காய் அவை செல்கின்றன; சில சமயங்களில், கவிதா சன்னதத்தில் மலர்ந்தவையாகக்கூடத் தோன்றுகின்றன. கீட்ஸ் எழுதிய 'ஸானட்'டில் கார்ட்டஸ் என்பவன், முதன்முதலில், பசிபிக் பெருங்கடலைக் கண்ட காட்சி வருணிக்கப் பெறுகிறது:

'கருடனைப்போல் தீர்க்கமான பார்வையோடு பசிபிக் பெருங்கடலை கண்ணிமையாமல் நோக்கினன். அவனுடன் இருந்தவர்கள் அனைவரும், இனம் புரியாத, தெளிவற்ற ஏதோ ஓர் ஊகத்தில் அழுந்தி, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பின்பு, மௌனமாய், டாரியனில் நிமிர்ந்த சிகரத்தை நோக்கினர்கள்'.[1]

இந்தக் கார்ட்டஸுக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் போன்றே, வளமிக்க ஸம்ஸ்கிருத இலக்கியக் கடலை முதலிற் கண்டதும், தாருவுக்கு ஏற்பட்ட அனுபவமும் இருந்தது. தம் நாட்டு உயர் தனிச் செம்மொழியான ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள செல்வங்களில் எல்லாம், இன்னும் ஆழமாக ஊன்றி ஈடுபட, தாருவின் குறுகிய வாழ்வு இடந்தரவில்லை. தந்திருந்தால், என்னவெல்லாம் சாதித்திருப்பாரோ? தாருவை எண்ணும்போது, திரும்பத் திரும்ப வரும் வினவே இது.

பல குறைகள், அவை முதிர்ச்சியின்மையால் தோன்றியவை, 'நாட்டுப் பாடல்களி'ல் உள்ளன என்ருலும், பாடல்கள் உறுதி வாய்ந்தவையாய் விளங்குகின்றன. அவற்றில் உள்ள பல அழகிய பாக்கிலிருந்து, இதோ இரண்டு பாக்கள்:[2]

காடு!
பொழுது புலரும் வேளையில்
எவ்வளவு அழகுடன் விளங்குகிறது!
புழுக்கம் நிறைந்த நண்பகலிலும்
அதே அழகு!

---

[1] Keats: Sonnets, '*On First Looking into Chapman's Homer*'

[2] ஆசிரியர் குறிப்பிடும் அழகு முழுவதையும் ஆங்கில மூலத்தில்தான் உணர முடியும். மூலத்தின செய்யுள் நயங்களை தமிழ் மொழிபெயர்ப்பில் கொணர இயலாது.

ஆனல், சூரியன் மறைந்து,
மாலை மயக்கமும், பிறையும் தோன்றி
வடிவங்களின் சொர சொரப்பை மாற்றி
வண்ணங்கள் அனைத்தையும்,
வெள்ளி அருகிட்ட நீல மென் சல்லாத் திரையால் மூடி,
அவற்றிற்கு மென்மை தரும்போதுதான்,
விஞ்சும் பேரெழில், காட்டுக்கு வருகிறது.

அதோ பார் !
பனிமுடி சூடிய அந்தக் குன்றின் அருகே,
பனியில் இதழ் அவிழும் அரும்புகளிலிருந்து
வாசம் மல்கிப் பொங்கும்
அந்தச் சாரற் பள்ளத்தில் இறங்கி,
கணவனும், அவனுடைய பத்தினியும்
ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு
அடர்ந்த காட்டுக்குள் நுழைகிறார்கள்.
எனக்குத் தெரியும்,
இது போன்ற உலகில்,
ஒருவனுக்கும் உள்ளத்தாசை நிறைவேறுவதில்லை.
ஒருவனுவது தன் காலத்தை
குறைவில்லா ஆனந்தத்தில் கழிப்பதில்லை.
பொன்னைப் போல
நம்மைத் தீயில் புடம்போட்டே
ஆக வேண்டி உள்ளது.
அவனவன் தன் செயலுக்கும்
எண்ணத்திற்கும் ஏற்ப
வருந்தியே ஆக வேண்டி உள்ளது.
தன் துயரச் சுமையை,
தானே தாங்க வேண்டி உள்ளது.
நண்பர்கள் உதவி செய்ய முடியாது.
அவனவன் பாபங்கள்
எதனுலும் போக்க முடியாதவை,
ஈடு செய்ய முடியாதவை,
அவற்றின் விளைவுகளை
அவன் தாங்கியே ஆக வேண்டும்.
என் கணவனை நான் என் தவத்தால்
பாதுகாக்க முடியுமா ?
முடியாது, முடியவே முடியாது.
அப்படிச் செய்ய முயல்வது
பயனற்ற பாசாங்காய் முடியும்.

என்றென்றும் மாருமல் நிற்கும் நீதியொன்று
துல்லியமாக அவரவர் கருமபலனை
விதித்துச் செல்கிறது.

மேலே தரப்பெற்றுள்ள அடிகளின் தொடக்கம் மிகுந்த அழகுடையதாய் உள்ளது. இந்த அழகையும், வளத்தையும் நெடுகிலும் தொடரத் தாருவால் இயலவில்லை. பிற்பகுதியில், முடிவை நெருங்கும்போது, சொற்கள், 'நொண்டு'கின்றன. செய்யுளின் ஓசைநயம், கதையை எப்படியோ சொல்லிச் செல்ல வேண்டுமே என்ற கவலையில், குறைப்பட்டு விடுகிறது.

இந்தியாவின் புராதனக் கடவுளர் அனைவருக்கும் தாரு மதிப்பும் மரியாதையும் தந்தார். இது பாடல்களில் எங்கும் தென்படுகிறது. பழைய ஹிந்து சமயத்தை ஆழ்ந்த வந்தனைக் குரியதாகவே தாரு கருதியிருக்க வேண்டும். அவருடைய கிறிஸ்தவம் எந்த வகையிலும் இதற்கு முரணுக நிற்கவில்லை. அவர் உண்மையான கிறிஸ்தவர்; ஆகவே மற்றைய சமயங்களைக் குறுகிய பார்வையோடு அவர் நோக்கவில்லை. தம் கோட் பாடுகளே சரி என்று ஓங்கி அடிக்காமல், பரந்த மனத்தோடு, விட்டுக் கொடுக்கும் பாங்கோடு தாரு திகழ்ந்ததால், அவர், ஹிந்து தருமத்தின் உண்மையான மகளாக நிற்கிருர்.

ஹிந்து உணர்ச்சிகளிலும், மரபிலும் தாருவின் பாடல்கள் தோய்ந்திருந்த போதிலும், அவருடைய நாட்டையும் அவருடைய இனத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகவே அவர் கவிதை விளங்கிய போதிலும், வளமார்ந்த ஸம்ஸ்க்ருத மொழியை ஆங்கிலத்தில் அப்படியே கொணர அவரால் இயலவில்லை என்று சில திருணய்வாளர்கள் கருதுகிருர்கள். ஸம்ஸ்க்ருத மொழியின் கம்பீர நாதத்தில் தோய்ந்து வரும்போது இந்தியப் புராணக் கதைகளும் நாட்டுப் பாடல்களும் இயற்கையாகப் பெற்றிருந்த வசீகரத்தையும், அவற்றிற்கே அமைந்து துயரம் கலந்த இசை மாயத்தையும், ஆங்கில வடிவத்தில், அவை முழுதும் இழந்து விடுகின்றன. ஆனுல் இவையனைத்தும் தாருவுக்குக்' கைக்கெட்டும் வகையில், அவர் தொடாத வங்காள மொழியிலே காத்திருந்தன.

'அணிகளும், காட்சிகளும் தமது இயல்பான வண்ணமும், வளமும், அலங்காரமும் கூட இழந்துவிட்டன. தாரு தத்தின் கையில் ஆங்கிலம் எவ்வளவு நெகிழ்ந்து கொடுக்க வேண்டுமோ, அவ்வளவு நெகிழ்ந்தது என்று கொண்டாற் கூட, ஆங்கிலத்தைப் பயன்படுத்தியதாலேயே ஸம்ஸ்க்ருத நடையின் சோபையும் உணர்ச்சியும் சிறிது மங்கியேவிட்டன. பிரஞ்சு மொழியின் நுட்ப மும் வண்ணமும் ஆங்கிலத்தில் தாருவுக்குக் கிட்டவில்லை.'[1]

---

[1] 'இந்திய இலக்கிய வரலாறு' - ஆர் டபிள்யூ ஃப்ரேஸர், 1898. பக்கம் 432

காளிதாஸனிடமோ, பாணனிடமோ, வேறு ஸம்ஸ்க்ருத கவிஞர்களிடமோ நாம் காணும் அலங்கார நடை, பாட்டுடைத் தலைவன் தலைவியருக்குச் சூட்டப்பெறும் மிதமிஞ்சிய பாராட்டு, அரசர்கள், கடவுளர் இவர்களுக்குத் தரப்பெறும் உன்னதமான வருணனை, இயற்கைக் காட்சிகளில் உள்ள அமோகமான ஒளியும் வளமும் - இவற்றையெல்லாம் அப்படியே தருவால் ஆங்கிலத்தில் தர இயலவில்லை. வேற்றுநாட்டவர் படிப்பதற்காகத் தாரு எழுதினார். ஆகவே அதற்குப் பொருந்தும்படி, கதைகளைக் குறுக்கியதோடு, அவற்றைத் தம் காலத்திற்கு ஒத்ததாகவும் செய்தார். இதனாலேயே சில குறைகள் நேர்ந்தன. ஆயினும் தாருவை, பண்டைய உயர் செம்மை எழுத்தாளரில் ஒருவராகக் கருதலாம்; ஏனெனில் அவர் எடுத்தாண்ட பழங்கதைகள் செம்மையானவை, பெருங்காப்பியத் தன்மை வாய்ந்தவை. 'வங்காளத்தைப் பற்றி மிக இழிவாக ஐரோப்பா கருதிவந்த அந்தக் காலத்தில், மேற்கத்திய நாடுகளின் இடையே, வங்கத்தைத் தலை நிமிர்ந்து நிற்கும்படி செய்த' இலக்கியத் தலைவர்களில் தாருவும் ஒருவர். 'வங்காளிகளே, உண்மை அழிந்து, தமக்கும் நாட்டுக்கும் உய்வேதும் இல்லை என்று சோர்ந்து விழுந்திருந்த நிலையில், தம்முடைய நாட்டுக் கதைகளைப் பற்றி எழுதுவதற்காக, அன்னிய நாட்டுப் பாடல்களை வேண்டுமென்றே ஒருக்கிவிட்டுத் தாரு திரும்பினார்'[1].

'நாட்டுப் பாடல்களி'ன் ஐந்தாவது பதிப்பில் உள்ள கிரமப்படி, அங்கே காணப்பெறும் கதைகளில். 'சாவித்திரி' என்ற பாடலே மிக நீளமானது. அதுவே பெரும்பாலான மக்களுக்கு மிகவும் பிடித்தது. பாடல்கள் பொருத்தமாகக் கண்ணியமாக நடக்கின்றன. அதன் மகத்தான பெருமை தோன்ற இயற்கை வருணிக்கப்பெறுகிறது. ஒவ்வொரு அடியிலும் எட்டு அசைகள் கொண்ட நான்கடிப் பாடல்களில் சலிப்புத் தட்டவில்லை. பெருங்காப்பியத்தின் உன்னதமான பாங்கும், சோபையும் பாடல்களில் உள்ளன. அதே நேரத்தில், இசைத் தன்மையோடும், ரொமான்டிக்'[2] ஆகவும் பாடல்கள் விளங்குகின்றன.

புராணங்களிலிருந்தும், பெருங் காவியங்களிலிருந்தும், தாம் பாடுவதற்குத் தனித்தனி நிகழ்ச்சிகளைத் தாரு பொறுக்கி எடுத்தார். அவை நன்றாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளன. தாழ்ந்தவை, ஒருவர் கண்ணிலும் படாதவை — இவற்றிலேதான் தாருவுக்கு ஈடுபாடு. இக்கதைகளைத் தாரு பொறுக்கி எடுத்துக் கையாண்டதன்

1 'இந்திய மறுமலர்ச்சி' ('The Renaissance of India,' London, 1912.)

2 'ரொமான்டிக்' என்ற சொல் பல பொருளுடையது. ஆங்கில இலக்கியத்தைப் பொறுத்தமட்டில், 19-வது நூற்றாண்டுத் தொடக்கத்தில் தோன்றிய கவிதை இயக்கத்தைக் குறிப்பிடுகிறது.

மூலமாக அவற்றில் முன்னமே உள்ள ஒழுக்கச் சார்பு மிகுந்தது. 'சாவித்திரி'யிலும் 'சீதா'விலும், உண்மையான இந்திய மனைவி ஒருத்தியிடம் தமக்குள்ள மதிப்பைத் தாரு வெளியிடுகிறார். இவ்விரு பாத்திரங்களிடம் காணப்படும் நிலைத்த உறுதி தாருவைக் கவர்ந்தது. 'லக்ஷ்மண்' என்ற இரண்டாவது பாடல் 'சாவித்திரி'யை போல் அவ்வளவு நீளமானதன்று. அது சீதாவுக்கும் லக்ஷ்மண னுக்கும் நடக்கும் ஓர் உரையாடல். இந்தப் பாடலில் தனக்கு உறுதியான பாதுகாப்பாக நிற்கும் லக்ஷ்மணனுடைய பெருந் தன்மையையே தனக்குச் சாதகமாகக் கொண்டு, சீதை சிறிது நியாயமில்லாமல் நடந்து கொள்கிறாள். 'யோகாத்ய உமா' என்ற கதை, தாரு தம்முடைய தாய் சொல்ல கேட்டது என்பது தெரிகிறது. பாட்டின் முடிவில் அதையே சொல்கிறாள் :

'இக்கதை நம்ப முடியாததாய்,
முன்னேறும் இக்காலத்திற்குப் பொருந்தாததாய்,
இருக்கலாம்.
ஆனால் இதைச் சொன்ன இதழ்களுக்கு
நான் அன்பு செலுத்தியவள்.
ஆகவே இதுவும் இருந்துவிட்டுப் போகட்டும்.'

ஆனால் கதை மிக அழகாக உள்ளது ; மனத்தைக் கவரும் நாட்டுப் பாடல். ' கதையின் கருத்து அழகுடையது. நமது இந்தியாவில் இதுபோன்ற ஆயிரம் கற்பனைகள் நடமாடுகின்றன. பெண் தெய்வம் ஒன்று எளிய பெண்ணாக உருமாறித் தோன்றுவதாகக் கதை. இந்தக் கதைக்குத் தாரு தம்மால் ஆனதை முழு அளவுக்குச் செய்திருக்கிறார்'[1].

'அரசத் துறவியும் மானும்', 'துருவா' என்ற இரு பாடல் களும், முதலில், 'வங்காள மாகஸீனி'ல் வெளி வந்தவை. மற்றைய பாடல்களைப் போலன்றி, இவ்விரு பாடல்களும் 'ப்ளான்க் வர்ஸ்' என்ற எதுகையற்ற ஆங்கிலச் செய்யுள் வகையில் எழுதப்பெற்றவை. இச் செய்யுள் வகையை தாரு நன்றாகவே கையாள்கிறார். இரு பாடல்களின் கதைகளும் 'விஷ்ணு புராணத் தி'லிருந்து எடுக்கப் பெற்றவை. முதற் கதை அரசன் பரதனைப் பற்றியது. அவன் துறவி ஆகிறான். சின்னஞ் சிறு மான் குட்டி ஒன்றைத் தண்ணீரில் முழுகிப் போவதிலிருந்து காப்பாற்றுகிறான். பிறகு, அந்த மான்குட்டி, தன்னந் தனியனான பரதனுடைய ஒரே தோழன் ஆகிவிடுகிறது. தன்னுடைய தவத்திற்குச் சிறிது தடை ஏற்படும் அளவுக்கு அதனிடம் அன்பு செலுத்தும் உரிமையைத் தாரு ஆதரிக்கிறார். இந்தியாவின் ஞானியர் வழக்கமாக ஏற்ற

---

[1] கமலா சுவாமிநாதன், 'இந்திய லேடீஸ் மாகஸின்' என்ற பத்திரிகையில் எழுதிய 'தாரு தத்' என்ற கட்டுரை, செப்டம்பர், 1906.

'உலகத்தை முற்றும் துறத்தல்' என்ற தருமத்தைத் தாரு ஏற்கவில்லை.

துருவன் கதை யாரும் அறிந்தது. தாரு அதை அப்படியே சொல்லி, இவ்வாறு முடிக்கிறார் :

தவத்தால், பக்தியால், வான்பதம் அடைந்தான்
துருவன். அங்கே நட்சத்திரமாய்ச்
சுடர்கிறான். அவனை ஒவ்வோர் இரவிலும்
பாரினில் மாந்தர் பார்க்கின்றார்கள்.

தாருவின் அடுத்த பாடல் 'புட்டு'[1] (Buttoo) என்ற தலைப்புடையது. அது ஓர் எளிய வேடன் மகனைப் பற்றியது. பெரியவரான துரோணாச்சாரியாரிடம் இவன் வில் வித்தை பயில விரும்புகிறான். துரோணரும் அவரிடம் பயிலும் அரசிளங்குமரர்களும், இவனை அவமதித்து ஒதுக்கிவிடுகிறார்கள். வேடன் மகன் காட்டுக்குப் போய், அங்கே துரோணரைப்போல ஒரு சிலை அமைத்து, வழிபட்டு, தன் பக்தியின் உதவி கொண்டே, வில்வித்தையைக் கற்றுக்கொள்கிறான். பிறகு, துரோணரிடம் அவர் விரும்புவதைத் தருவதாக வாக்களிக்கிறான்; அர்ஜுனனுக்குத் துரோணர் சொன்ன சொல்லைக் காப்பதற்காக, அவர் விரும்பியபடி, தன் முயற்சியிலேயே தான் கற்ற வித்தையைத் தியாகம் செய்து விடுகிறான். துரோணர் அவனை வாழ்த்துகிறார் :

கடலிலிருந்து கடல் வரையில்,
நாடெல்லாம் உன் புகழைப் பாடும்,
தன்-உதவி, சத்தியம், அடக்கம்
இவற்றோடு இணைத்தே,
என்றும் உன் பெயர் பேசப்படும்.

இவ்வாறுதான், தாருவும் நூறு ஆண்டுகளுக்கு மேலாக நின்று வரும் புகழ்ப் பெயரைத் தமக்குத் தாமே தேடிக் கொண்டார். இன்னும் பலப்பல ஆண்டுகள் அப் பெயர் நிலைத்து நிற்கும். 'தம்முடைய நாட்டிலிருந்து தமக்குக் கிடைத்த கலை இலக்கியச் செல்வத்தில் தாருவுக்கு இருந்த பெருமையால், அவர் ஓர் இந்தியர்.' இன்று அவரே இந்தியாவின் செல்வத்தில் ஒரு பகுதியாகிவிட்டார். தமது தாய் நாட்டுக்கு, கால வளைவினூடே, பெரும் புகழைத் தேடித் தந்து, என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டிய ஒரு பெயராகவும் ஆனார். தாரு ஒரு சிறுமலர், பூஞ்சையான மலர், எங்கோ வெளி நாடுகளில் பூத்தது; சிறிது காலமே வீசியது, ஆனால் அந்த மணம் என்றென்றும் அழியாது.

'நாட்டுப் பாடல்'களின் இறுதியில் உள்ள 'பலதுறைப் பாடல்கள்' என்பனவற்றில், 'எங்கள் சவுக்க மரம்' என்ற

[1] ஏகலைவன் என்ற மகாபாரதப் பாத்திரம்.

கவிதை ,மறப்பில் வீழ்ந்து மறையாத வாழ்வுனக்கென் அன்பு நல்க' என்று முடிகிறது. இந்த முடிவு, பாட்டில் வரும் சவுக்க மரத்திற்கு மட்டுமன்று, அப்பாடலுக்கே பொருந்தும். இப் பாடல் என்றும் மக்களின் நினைவில் உள்ளது, அடிக்கடி மேற் கோளாக எடுத்தாளப் பெறுவது. இ. ஜே. தாமஸ் சொல்கிறார் : 'அன்னிய நாட்டான் எவனும் ஆங்கிலத்தில் இதுவரை எழுதியுள்ள கவிதைகள் அனைத்தையும் வைத்துப் பார்த்தாலுங்கூட, இப்பாடல் ஓர் அதிசயமாகவே உள்ளது.', 'சென்ற காலம் திரும்பிவராதா' என்ற ஏக்கம், உள்ளத்தில் மலர்ந்த உன்னதமான சௌந்தர்ய தரிசனம், இவை இரண்டும், இந்தப் பாடலை, தாருவின் கவிதை களில், அவரை அதிகமாக நமக்கு உணர்த்தும் பாடலாகச் செய்து விடுகின்றன. அவர் காலத்து அமர கவிஞர்கள் வரிசையில் வைத்துத் தாருவை எண்ணுவதற்கு இந்த ஒரு பாடல் போதும்:

எங்கள் சவுக்க மரம்

கரடு முரடாய்க் குழிகள் விழுந்து காய்த்துப்
போன அடி மரமதனைச் சுற்றிச் சுற்றி,
பெரியதொரு மலைப் பாம்பைப் போல மேலே
பிணைந்தேறும் கொடி ஒன்று, வான மீன்கள்
அருகணையும் உச்சிவரை செல்லும். இந்த
அரவணைப்பை, அசுரன்போல் வலிமை கொண்ட
மரமெங்கள் சவுக்க மரம் ஒன்றால் அன்றி
மற்றெந்த மரத்தாலும் தாங்கப் போமோ ?

தாங்கியது மலர்க்கொடியைத் தனி மேலாடை
தரித்ததென, கிளைகளின்மேல் கொத்துக் கொத்தாய்த்
தூங்கின செஞ் சிவப்பு மலர். அவற்றின் ஊடே
தேனீக்கள், பறவையினம், வரிசையாக
நீங்காமல் நாளெல்லாம் திரளும். பின்னர்
நீளிரவு வரும்போது, மரத்திருட்டின்
பாங்கிருந்து வனமெங்கும் முடிவில்லாத
பண்ணினிமை வழிந்தோடும், உலகம் தூங்கும்.

காலையிலே எழுந்தவுடன் ஓடிச் சன்னற்
கதவுகளைத் திறந்திடுவேன். களிக்குங் கண்ணால்
கோலநெடும் அச் சவுக்கைக் காண்பேன். உச்சிக்
கொம்பினிலே, சிலவேளை, பொதுவாய் மாரிக்
காலத்தில், சாம்பருடல் மந்தியொன்று
கடைந்தெடுத்த சிலைபோல, அசைவே இன்றிக்
காலையிளம் பரிதியெழுங் காட்சி கண்டு
கவிந்திருக்கும். மரத்தின் கீழ்க் கிளைகள் மீது

துள்ளி விளையாடும் மந்திச் சோணிக்குட்டி.
சேணிருந்தும், அருகிருந்தும், குயில்கள் பாடி
அள்ளுமொளிப் பகலை வரவேற்கும். தூங்கி
வழிந்தெங்கள் பசுக்கள் புல் வெளியை நோக்கி
மெள்ள அசைந்தேகும். முது மரத்தின் நீழல்
விழும் அகன்ற குளப் பரப்பில், அழகு மீறும்
வெள்ளமென, வெண்பனியைத் திரட்டி வைத்த
விந்தையென அல்லிமலர்க் கொள்ளை விம்மும்.

என்னுயிராய் இந்தமரம் இருப்ப தேதோ
இதன் பெருமை யால்மட்டும் இல்லை. என்றோ
சின்ன வயதில் அதன்கீழ் என்னோடோடிச்
சிரித்து விளையாடிய என் செல்வங்காள், என்
அன்பையன்று சொரிந்தேன் உம்மீது. காலம்
கழிந்தாலும் என்ன, உங்கள் நினைவாலேதான்
என்றுமிந்த மரமும் எனக் கினியதாகும்.
என்றென்றும் உமதினிய வடிவத்தோடு

கரைந்தொன்றாய் இம்மரம், என் கண்ணீர் மல்க
கருத்தினிலே வந்து நிற்கும். காதில் வீழும்
ஒரு முனகல். அதுவென்ன, மரத்தின் பேச்சா ?
ஓங்கு கடல் கூழாங்கற் கரையில் மோதும்
அரவமென்ன, அமுதாற்றும் புலம்பல் என்ன
அணைகிறது. தேம்புவது மரமா ? சிந்தை
இருண்டச்சம் பெறவைக்கும் மரத்தின் பேச்சும்
எட்டிடுமோ யாருமறியாத நாட்டை ?

யாருமறியா நாடா ? ஆனால் நம்பும்
ஆகத்து விழிக்கு நன்றாய்த் துலங்கும் நாடு.
தூரத்தில் உள்ள பிற நாட்டில் இந்தத்
தொன் மரத்தின் முனகலிசை கேட்டதுண்டு.
ஆரமைதி விரிகுடாவின் அருகே, ஆழிப்
புயலாவி தன் குகையில் துஞ்சும்போது
வாரி அலை மெல்லவந்து கரைக்கு முத்தம்
வழங்கிடும் இத்தாலி பிரஞ்சுக் கடலோரத்தில்

நிலவினிலே உலகெல்லாம் கனவே இல்லா
நின் மயக்கத் தாழ்ந்துறையும் பொழுதில், காதில்
குலவி விழும் முனகலொலி. மனக்கண் முன்னே
கூட ஒரு கம்பீர வடிவம் தோன்றும்.

நிலையான் அவ்வடிவம் உனதே, நெஞ்சில்
நீங்காத நெடு மரமே, என் தாய் நாட்டில்
குலவிய என் இளமையிலே உன்னைக் கண்டேன்.
குறையாமல் இன்றுமுனை நெஞ்சிற் காண்பேன்.

அதனாலே இன்றுனது பெருமை பாட
ஆர்வமுற்றேன். இன்றெங்கோ அருள் நிறைந்த
பதத்தினிலே என்றென்றும் தூங்குகின்றோர்
பரிவுக்குப் பாத்திரமாய் நின்றாய். என்றன்
இதயத்தில் என்னுயிரின் இனியராகி
இருந்தவர்கள், நன் மரமே, என்றன் கால
கதி முடிந்த பிறகும் நீ மரணமில்லாக்
கதி படைத்த மரங்களுக்குள் சிறந்து வாழ்க !

மரணமில்லா மரங்கள், ஆமாம். பாரோடேலில்
மண்டுகின்ற பயங்கர அம்மரங்கள்போல
விரிகிளையில் வெளிர்த்த ' பயம், நடுங்குகின்ற
நம்பிக்கை, வெள்ளெலும்புக் கூடாம் சாவு
விரைகின்ற கால நிழல் ' இவைகள் தொங்கும்
வியன் மரவி போல் நீயும் விளங்க என்றன்
உரமற்ற கவி தொடுத்தேன். மறப்பில் வீழ்ந்து
மறையாத வாழ்வுனக்கென் அன்பு நல்க !

ஆதார நூல்கள்

எ ஷீஃப் க்ளீன்ட் இன் ஃபரெஞ்ச் ஃபில்ட்ஸ் : தாரு தத் (i) ஸப்தாஹிக் ஸம்பாத் ப்ரெஸ், பவானிபூர், கல்கத்தா, 1876 ; (ii) ஒரு புதிய பதிப்பு : ஸப்தாஹிக் ஸம்பாத் ப்ரெஸ், பவானிபூர், 1878 ; (iii) மற்ருெரு பதிப்பு : கேகன் பால் அண்ட் கம். லண்டன், 1880.

ஏன்ஷியன்ட் பாலட்ஸ் அன்ட் லெஜன்ட்ஸ் ஆஃப் ஹிந்துஸ்தான் : தாரு தத். (i) எட்மண்ட் காஸ் எழுதிய அறிமுக நினைவஞ்சலிக் கட்டுரையுடன், கேகன் பால், லண்டன், 1882. (ii) மற்ருெரு பதிப்பு. கேகன் பால், 1927 ; (iii) காளிதாஸ் அண்டு கம்பெனி, சென்னை - தேதி இல்லை.

லே ஜர்னல் த மாதமோயிஜேல் த' ஆர்வர்ஸ் : தாரு தத் எழுதிய பிரெஞ்சு நாவல். பதிப்பாளர் : தைதிர், பாரீஸ், 1879. (திருமதி கிளாரிஸ் பாதரின் அறிமுக நினைவஞ்சலிக் கட்டுரையுடன்). வங்க மொழி பெயர்ப்பு : ராஜ்குமார் முகோபாத்யாய, 1949 ; ப்ரித்விந்த்ரநாத முகோபாத்யாய, 1958.

பினுகா ஆர் தி யங் ஸ்பானிஷ் மெய்டன், தாரு தத். 'பெங்கால் மாகஸின்' 1878 ஜனவரி முதல் ஏப்ரல் வரை இதழ்களில் எட்டு அத்தியாயங்கள் வெளியான தொடர்.

'எ ஸீன் ஃப்ரம் கன்டம்பரரி ஹிஸ்டரி' : தாரு தத். விக்தர் ஹ்யோகோவும் திரு தீரிஸூம் பேசிய பேச்சுக்களின் மொழிபெயர்ப்பு ; அன்னுர் கவிதைகளின் சில மாதிரிகளுடன். 'பெங்கால் மாகஸின்' 1875 ஜூன், ஜூலை.

ஹென்ரி வின்சென்ட் டிரோஜியோ, மற்றும லிகோன்டி தெ லிஸல் பற்றி தாரு தத் எழுதிய கட்டுரைகள். 'பெங்கால் மாகஸின்', டிசம்பர் 1874.

தாரு தத்தின் எழுத்துக்கள் வெளியான ஏடுகள் : **சாடர்டே ரிவ்யூ** (லண்டன்), 1879 ; **ல கெஸட் தெஸ் பெம்மஸ்** (பாரிஸ்), பிப்ரவரி 1879 ; **தி இங்க்லீஷ்மன்** (கல்கத்தா) ஏப்ரல் 19, 1876, மார்ச்சு 21, 1879. **தி ஸ்டேட்ஸ்மன்** (கல்கத்தா), அக்டோபர் 26, 1877, ஜூலை 15, 1878, மார்ச்சு 31, 1879 ; **தி எக்ஸாமினர்** (லண்டன்) ஆகஸ்ட் 1876, ஜூன் 1878 ; ரிவ்யூ தஸ் ட்யூயெக்ஸ் மான்டெஸ் (பாரிஸ்) பெப்ரவரி 1877, ஏப்ரல் 1, 1878 ; மற்றும் பல கட்டுரைகளும் ஏடுகளும். முழு விவரங்களுக்குப் பார்க்க : **தி லைஃப் அன்ட் லெட்டர்ஸ் ஆஃவ் தாரு தத்** ஹரிஹர்தாஸ், அநுபந்தம் IV.

பெங்கால் மாகஸின் இதழ்களில் மார்ச் 1873 முதல் ஏப்ரல் 1878 வரை தாரு எழுதியவை தொடர்ந்து வெளியாயின. **கல்கத்தா ரிவ்யூ** இதழ்களிலும் அவர் அடிக்கடி எழுதினுர்.

சாவித்ரி, தாரு தத் எழுதியது. இன்டர்மீடியட் வகுப்புக்குப் பாடநூல். ஜே. பி. ஸின்ஹா பதிப்பித்தது ; ஸ்டூடன்ட்ஸ் பப்ளிஷர்ஸ், மீரத், 1956.

லைஃப் அன்ட் லெட்டர்ஸ் ஆஃப் தாரு தத், ஹரிஹர்தாஸ். ரைட் ஹானரபில் எச். ஏ. எல். ஃபிஷர் முன்னுரையுடன் ; ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ், 1921.

த பெங்காலி புக் ஆஃப் இங்கிலீஷ் வெர்ஸ்—தியோடர் டக்லஸ் தன் தொகுத்தது. ரவீந்திரநாத் டாகுர் முன்னுரையுடன். லாங்க்மென்ஸ் கிரீன் அன்ட் கம்பெனி, மதராஸ், 1918.

க்ளாஸிகல் ட்ரெடிஷன் இன் தாரு தத்ஸ் போய்ட்ரி, ஹரிஹர்தாஸ். 'ஏஷியாடிக் ரிவ்யூ', அக்டோபர் 1931 (தனி வெளியீடாகவும் வந்தது).

இந்தியன் ரைட்டர்ஸ் ஆஃப் இங்கிலீஷ் வெர்ஸ்—லதிகா போஸ், 1933.

கவி தாரு தத் (வங்கமொழி நூல்) ராஜ்குமார் முகோபாத்யாய, ஏஷியா பப்ளிஷிங் கம். கல்கத்தா, 1959.

த வர்ல்ட்ஸ் க்ரேட் க்ளாஸிகல் ரினய்ஸ்ஸன்ஸ், த கலோனியல் ப்ரெஸ், நியூயார்க். தொகுதி III. இந்திய இலக்கியம்.

த ரினய்ஸ்ஸன்ஸ் ஆஃப் இந்தியா, லண்டன், 1912.

இந்தியன் ரைட்டிங் இன் இங்க்லீஷ், கே. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார். ஏஷியா பப்ளிஷிங் ஹவுஸ், 1962.

இந்தியன் கான்ட்ரிப்யூஷன் டு இங்க்லீஷ் லிட்ரேசர் கே. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், 1945.

'இந்தியன் லிட்ரேசர்' ஏப்ரல்-ஜுன் 1966, சாகித்ய அகாதெமி, அலோகெ ரஞ்ஜன் தாஸ்குப்தா, தீபேந்த்ரநாத் மித்ரா ஆகிய இருவரின் கட்டுரைகள், மற்றும் தாரு தத்தின் எழுத்துக்கள்.

லைஃப் அன்ட் ஒர்க் ஆஃப் ரமேஷ் சந்தர் தத், ஜே. என். குப்தா; வெளியீடு: ஜே. எம். டென்ட், லண்டன், 1911.

போயம்ஸ் பை இந்தியன் விமன், மார்கரெட் மக்னிகால் பதிப்பித்தது. அசோசியேஷன் ப்ரெஸ், ஒய். எம். ஸி. ஏ. கல்கத்தா மற்றும் ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரஸ், 1923.

கிரேட் விமன் ஆஃப் இந்தியா த ஹோலி மதர் பர்த் சென்டினரி மெம்மோயேல், அத்வைத ஆஸ்ரமம், மாயாவதி, அல்மோரா.

பயோனீர் விமன் ஆஃப் இந்தியா, பத்மினி ஸென் குப்தா, பதிப்பு: தாக்கர், பம்பாய், 1944.

த இந்தியன் லேடீஸ் மாகஸின், பதிப்பாளர்: கமலா சத்தியானந்தன், 1901-1934. பல இதழ்களில் தாரு தத் பற்றிய கட்டுரைகளும் அவர் கவிதைகளும் வெளியாயின.

ஆன்வர்ட், ஜுன் 1947, நஜு பிலிமோரியா எழுதிய கட்டுரை, 'தாரு தத்.'

இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா மார்ச்சு 4, 1956 இதழ் ('தாரு தத்:' நஜு பிலிமோரியா எழுதியது); ஜுலை 5, 1931 இதழ் (ஜானஸ் எழுதிய 'இந்தியன் ரைட்டர்ஸ் ஆஃப் இங்க்லீஷ் வெர்ஸ்); டிசம்பர் 10, 1961 இதழ் (ராஜா ராவ் எழுதிய 'எ நெஸ்ட் ஆஃப் ஸிங்கிங் பர்ட்ஸ்').

ஸ்டேட்ஸ்மன், மார்ச் 14, 1954, இஸ்ஸட்யார்கான் எழுதிய 'தாரு தத்'.

டைம்ஸ் ஆஃப் இந்தியா, மார்ச் 7, 1954, 'ஆனந்த்' எழுதிய 'எ கிஃப்ட்டட் போயட்டஸ்'.

இந்திய இலக்கியச் சிற்பிகள்

தற்காலப் படைப்புக்களிலும் பழம் பெரும் படைப்புக்களிலும் தலைசிறந்த இந்திய இலக்கியச் சிற்பிகளைப் பற்றி சாதாரண வாசகன் தெளிந்து உணர இப் புத்தக வரிசை உதவும்.

ஒவ்வொரு நூலும் ஓர் இந்திய இலக்கியச் சிற்பியின் கதையையும் அவரது படைப்புக்களையும் பற்றி விவரிக்கும்.

இந்த வரிசையில் வெளியான நூல்கள்: (எல்லாம் ஆங்கிலத்தில் கிடைக்கும்.)

லட்சுமிநாத பெஸ்பருவா —ஹேம் பருவா

ராஜா ராம் மோகன் ராய் —சௌமியேந்திர நாத டாகுர்

கேசவஸுதர் —பிரபாகர் மாச்வே

இளங்கோ அடிகள் —மு. வரதராசன்

பிரேம் சந்த் —பிரகாஷ் சந்திரகுப்தா

ஈஸ்வர சந்திர வித்யாசாகர் —ஹிரண்மய் பானர்ஜி

கபீர் —பிரபாகர் மாச்வே

தாரு தத் —பத்மினி ஸென்குப்தா

வேமனு —வி. ஆர். நார்லா

விரேசலிங்கம் —வி. ஆர். நார்லா

காலீப் —எம். முஜீப்

மீராபாய் —உஷா நில்ஸன்

ஷா லதீப் —K. B. அத்வானி

சண்டிதாஸ் —சுகுமார் ஸென்

பிரமதா சௌதுரி —அ. முகோபாத்யாய

பாரதேந்து ஹரிச்சந்திரா —மதன்கோபால்

சசால் சர்மாஸ்த் —K. B. அத்வானி

ஜீவனுனந்த தாஸ் —சி. தாஸ் குப்தா

ஸ்ரீ அரவிந்தர் —மனோஜ் தாஸ்

போதனு —D. வேங்கடாவதானி

சி. ஆர். ரெட்டி D. ஆஞ்சநேயலு

ஞானதேவ —பி. ஒய். தேஷ்பாண்டே

ஜெயதேவ —சுநீதி குமார் சாட்டர்ஜி

சாகித்திய அக்காதெமி
ரவீந்திர பவன், புது தில்லி
பிராந்திய அலுவலகங்கள்:
சென்னை-6, பம்பாய்-14, கல்கத்தா-29.

இந்திய இலக்கியச் சிற்பிகள்

இந்த வரிசையில் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள நூல்கள் :

1. **லட்சுமிநாத பெஸ்பரூவா**
   —ஹேம்பரூவா
   தமிழ் : க. த. திருநாவுக்கரசு
   அஸ்ஸாமி முன்னேடி எழுத்தாளரின் வரலாறு.

2. **கபீர்**
   —பிரபாகர் மாச்வே
   தமிழ் : தி. வேங்கட கிருஷ்ணய்யங்கார்
   மக்கள் கவிஞரும் ஞானியுமானவரின் வாழ்க்கையும் கவிதையும்.

3. **கேசவஸுதர்**
   —பிரபாகர் மாச்வே
   தமிழ் : ராம கோபிநாதன்
   நவீன மராட்டிய இலக்கியத் தந்தையின் வாழ்க்கை.

4. **ஈசுவர் சந்திர வித்யாசாகர்**
   —ஹிரண்மய் பானர்ஜி
   தமிழ் : ராம கோபிநாதன்
   வங்கத்தின் மறுமலர்ச்சித் தலைவரின் வாழ்க்கை.

5. **ராஜா ராம்மோகன் ராய்**
   —சௌமியேந்திரநாத தாகூர்
   தமிழ் : க. த. திருநாவுக்கரசு
   புதிய பாரத உதயத்தின் சிந்தனைச் சிற்பியின் வரலாறு.

6. **பிரேம்சந்த்**
   —பிரகாஷ் சந்திர குப்தா
   தமிழ் : சரஸ்வதி ராமநாத்
   நவீன ஹிந்தி முன்னேடி நாவலாசிரியரின் இலக்கிய வாழ்க்கை.

7. **குமாரன் ஆசான்**
   —கே. எம். ஜார்ஜ்
   தமிழ் : கே. சி. சங்கரநாராயணன்
   மகாகவி என்று போற்றப்பெறும் ஆசானுக்கு நூற்றாண்டு விழா அஞ்சலி வெளியீடு.

ஒவ்வொரு நூலும் ரூ. 2-50